




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:293 | 08-05-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


# தனிப்பெரும்பான்மை பலம் இல்லாமல் ஆட்சியமைக்க முடியாது: ஆளுநர் மாளிகை விளக்கம்

**சென்னை, மே 8:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் தவெக கட்சித் தலைவர் விஜய்யை ஆட்சியமைக்க ஆளுநர் அழைப்பாரா? ஏன் இதுவரை அழைப்பு விடுக்கப்படவில்லை? என்பது குறித்து ஆளுநர் மாளிகை விளக்கம் கொடுத்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் ஆட்சியமைக்க தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை புதன்கிழமை (மே 6) சந்தித்து உரிமை கோரினார் தவெக தலைவர் விஜய்.

ஆனால், தவெகவுக்கு ஆதரவளிக்கும் 118 எம்எல்ஏ-க்களின் பட்டியலை அளிக்க வேண்டும்என ஆளுநர் அப்போது விஜய்யிடம் கூறியதாகக் கூறப்பட்ட நிலையில், நேற்று இரவு வரை தமிழ்நாட்டில் ஆட்சியமைக்க விஜய்க்கு அழைப்பும் விடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், ஆளுநரை இன்று காலை தவெக தலைவர் விஜய் மீண்டும் சந்தித்து, அவரது கேள்விகளுக்கு விளக்கம் கொடுத்ததாகக் கூறப்பட்டது. இதையடுத்து ஆளுநர் அடுத்து என்ன செய்யப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு எழுந்த நிலையில், இன்று ஆளுநர் மாளிகை ஒரு விளக்கத்தை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், தவெக தலைவர் விஜய்யை, ஆளுநர் மாளிகைக்கு தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அழைத்திருந்தார். அப்போது, தமிழ்நாட்டில் ஆட்சியமைக்க பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டியது ஏன் அவசியம் என்பது குறித்து விஜய்க்கு ஆளுநர் விளக்கம் கொடுத்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

அதாவது, தமிழ்நாட்டில் ஆட்சியமைக்க, தவெக தனிப்பெரும் கட்சியாக உரிமை கோரவில்லை, மாறாக கூட்டணி எம்எல்ஏக்கள் ஆதரவு என்று கூறி ஆட்சியமைக்க உரிமை கோரியிருக்கிறார். அதனால்தான் தவெகவை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், விஜய்யிடம் ஆளுநர் கொடுத்த விளக்கத்தில், தமிழ்நாட்டில் தவெக ஆட்சியமைப்பது தொடர்பாக மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் ஏஆர்எல் சுந்தரேசனிடம் ஆளுநர் மாளிகை கருத்து கேட்டுள்ளது,

மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் சுந்தரேசன் கொடுத்த அறிவுறுத்தலின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும். 108 எம்எல்ஏக்கள் உள்ள தனிப்பெரும் கட்சியாக வந்து தவெக ஆட்சி அமைக்க உரிமை கோரவில்லை, காங்கிரஸ் எம்எல்ஏக்கள் ஆதரவு என கூறி 113 எம்எல்ஏக்கள் ஆதரவுடன் ஆட்சி அமைக்க உரிமை கோரியுள்ளது என்றும், கூட்டணி என குறிப்பிட்டுள்ளதால் 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை என மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் கூறியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதாவது, தாங்கள்தான் தனிப்பெரும் கட்சி என கூறி ஆட்சி அமைக்க தவெக உரிமை கோராமல், கூட்டணியுடன் வந்துள்ளதால் வேறு எந்தக் கட்சிகள் தவெகவை ஆதரிக்க உள்ளன எனக் கேட்டுள்ளோம் என்று ஆளுநர் மாளிகை விளக்கம் கேட்டுள்ளது.

எனவே, மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் அறிவுறுத்தியிருப்பதன் அடிப்படையில் முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும், தவெக தலைவர் விஜய்யிடம், தனிப்பெரும்பான்மை பலம் இல்லாமல் ஆட்சியமைக்க முடியாது என்று ஆளுநர் விளக்கம் கொடுத்ததாகவும், நேற்று முன்தினம் விஜய், ஆளுநரை சந்தித்த நிலையில், சட்ட விளக்கம் குறித்து ஆளுநரே விஜய்யை நேற்று அழைத்து விளக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.



## 3 மணி நேரம் சட்ட நிபுணர்களுடன் விஜய் தீவிர ஆலோசனை

108 தொகுதிகளில் வெற்றி பெற்ற த.வெ.க. கட்சி, ஆட்சியமைக்க கவர்னரிடம் அனுமதி கேட்டும், பெரும்பான்மை இல்லாத காரணத்தால் விஜய்யை ஆட்சியமைக்க கவர்னர் இதுவரை அழைப்பு விடுக்கவில்லை.

த.வெ.க.வுக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு தேவையான இடங்களைப் பெறுவதற்கு ஆதரவு கேட்டு த.வெ.க. நிர்வாகிகள் அருண்ராஜ், சி.டி. ஆர்.நிர்மல்குமார் உள்ளிட்டோர் வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

அதே சமயம், த.வெ.க. தலைவர் விஜய், சட்ட நிபுணர்களுடன் 3 மணி நேரத்திற்கு மேலாக தீவிர ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

ஆட்சியமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத சூழலில், சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழக வெற்றிக் கழகம் தயாராகி வருவதாக கூறப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே கோர்ட்டு வழங்கிய தீர்ப்புகள் உள்ளிட்டவை குறித்து சட்ட நிபுணர்களுடன் விஜய் ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆளுநருக்கு எதிராக தமிழக காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்

தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை காங்கிரஸ் மாவட்ட கமிட்டி தலைவர்களுக்கு அவர் எழுதிய கடிதம்: 2026 தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படும் மத்திய பாஜகவை கண்டித்தும், அவர்களின் கைப்பாவையாக செயல்படும் ஆளுநரை கண்டித்தும் மாவட்ட தலை நகரங்களில் இன்று (8ம் தேதி) காலை 11 மணிக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சார்பாக அண்ணா சாலை, தாராப்பூர் டயர் அருகில் நாளை காலை 11 மணியளவில் எனது தலைமையில் கண்ட ஆர்ப்பாட்டம்நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டியின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பஞ்சாங்கம்

08.05.2026 சித்திரை 25
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 5.54

திதி:
இன்று காலை 9.43 வரை சஷ்டி பின்பு சப்தமி

நட்சத்திரம்:
இன்று மாலை 6.36 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

யோகம் :
இன்று இரவு 11.51 வரை சுபம் பின்பு சுப்பிரம்.

கரணம்
இன்று காலை 9.43 வரை வணிசை பின்பு இரவு 10.11 வரை பத்திரை பின்பு பவம்.

யோகம் :
இன்று மாலை 6.36 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம் :
இன்று மாலை 6.36 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00.

இன்று சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவு இன்று வெளியீடு!



**சென்னை, மே 8:**

தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் இன்று (மே 8) வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு தேர்வு முடிவுகளை மாணவர்கள் அறிந்துகொள்ளலாம் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

மாநிலம் முழுவதும்12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மார்ச் 2-ஆம் தேதி தொடங்கின. மாநிலம் முழுவதும் தனித்தேர்வர்களுடன் சேர்த்து, 8 லட்ச மாணவ, மாணவிகள் இத்தேர்வை எழுதினர்.

மாணவர்களின் விடைத்தாள் திருத்தும் பணிகள் கடந்த ஏப்ரல் 6 முதல் 20 ஆம் தேதி வரை நடைபெற்றது.

தமிழ்நாட்டு மாநிலக் கல்வி வாரியத்தின் கீழ் நடைபெற்ற 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே 8-ஆம் தேதி வெளியாகும் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தேர்வு முடிவுகளை வெளியிட மாநில அரசின் ஒப்புதல் தேவை என்பதால், புதிய அரசு ஆட்சி அமைந்தபிறகு தேர்வு முடிவுகள் வெளியாகும் என்றும் இதனால், தேர்வு முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்படும் என தகவல் வெளியானது.

# கவர்னர் அர்லேகரை சந்தித்த தலைமை செயலாளர், டி.ஜி.பி.

**சென்னை, மே 8:**

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றியது. த.வெ.க.வுக்கு காங்கிரஸ் கட்சியின் 5 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு கொடுத்திருந்தாலும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், மற்ற கட்சிகள் த.வெ.க.வுக்கு இன்னும் ஆதரவு கொடுக்கவில்லை.

முன்னதாக, த.வெ.க. தலைவர் விஜய், நேற்று மாலை தமிழக பொறுப்பு கவர்னர் அர்லேகரை சந்தித்தார். அப்போது தங்களை ஆட்சி அமைக்க அழைக்கக் கோரி கவர்னரிடம் கடிதம் வழங்கினார். ஆனால், பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு விஜய்க்கு இல்லாததால், அவரை ஆட்சியமைக்க வரும்படி கவர்னர் அழைக்கவில்லை.



இந்த பரபரப்பான சூழலில், த.வெ.க. தலைவர் விஜய் இன்று மீண்டும் கவர்னரை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் தங்களை ஆட்சியமைக்க அழைக்க வேண்டும் என கவர்னரிடம் விஜய் கோரிக்கை வைத்தார். முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் சட்டசபையில் பெரும்பான்மையைநிரூபிப்பேன் எனவும் கவர்னரிடம் விஜய் மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், விஜய்யின் சந்திப்பை தொடர்ந்து தமிழக அரசின் உயர் அதிகாரிகள் கவர்னர் அர்லேகரை இன்று சந்தித்துள்ளனர். தமிழக அரசின் தலைமை செயலாளர் சாய் குமார், நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கவர்னரை சந்தித்து பேசினார். மாநில சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்து கவர்னரிடம் அவர் விளக்கம் அளித்ததாக தகவல் வெளியானது. அதனை தொடர்ந்து, மாலை 4 மணிக்கு டி.ஜி.பி. சந்தீப் ராய் ரத்தோர் கவர்னரை சந்திக்க கிண்டி கவர்னர் மாளிகைக்கு வருகை தந்தார். பின்னர் கவர்னவரை சந்தித்த டி.ஜி.பி.யிடம், த.வெ.க. தலைவர் விஜய்க்கு எந்த அடிப்படையில் கான்வாய் பாதுகாப்பு வழங்கப்பட்டது? என கவர்னர் அர்லேகர் கேள்வி எழுப்பியதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், தமிழகம் முழுவதும் இன்று காங்கிரஸ் கட்சி சார்பில் போராட்டம் நடத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்துமாறு டி.ஜி.பி.யிடம் கவர்னர் அறிவுறுத்தல் வழங்கியதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 19 மாவட்டங்களுக்கு இன்று கனமழைக்கு வாய்ப்பு

**சென்னை, மே 8:**

தமிழகத்தில் கோவை, மதுரை, தஞ்சை உள்ளிட்ட 19 மாவட்டங்களில் இன்று (மே 8) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சதீவு பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி சுமார் 1.5 கிமீ உயரத்தில் நிலவுகிறது.



தெற்கு கேரள கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சதீவு பகுதிகளிலிருந்து தென்மேற்கு மத்திய பிரதேசம் வரை, உள் கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா வழியாக சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (மே 8) முதல் மே 13-ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைபெய்யக்கூடும். இன்று (மே 8) நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சிவகங்கை, ராமநாதபுரம்,தூத்துக்குடி, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.







## திருக்குறள் குறள்-613

**தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு**



பிறர்க்கு உதவிசெய்தல் என்னும் மேம்பட்ட நிலைமை முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த பண்பில் நிலைத்திருக்கின்றது.

## சிந்திக்க ஒரு நொடி



விடையறிந்து
எழுத செல்வது
தேர்வு....
விடை அறியாமல்
எழுதிக்
கொண்டிருப்பது
வாழ்க்கை ...

**உஷா முத்துராமன்**

## உலகத் தமிழ்ச்சங்கத்தில் சிறப்புரையாற்றிய பேராசிரியர் முனைவர் ரேவதி




மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தில் சிறப்புரையாற்றிய பேராசிரியர் முனைவர் ரேவதி அவர்களுடன் தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா.இரவி, மதுரைத் திருவள்ளுவர் கழகம் சந்தானம், மதுரை வாசகர் வட்டம் ஜெயசீலன்

## தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்



தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு காசநோய் பிரிவு மற்றும் டி.வி. எஸ். சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை ஆகியோர் இணைந்து காசநோய் இல்லா தமிழ்நாடு 100 நாள் நிக்ஷை சிவிரை முன்னிட்டு நவீன கையடக்க எக்ஸ்ரே மூலம் காசநோய் கண்டறியும் சிறப்பு முகாம் (07.05.2026) நேற்று வல்லநாடு அருகேயுள்ள முத்தாரம்மாள்புரம் துணை சுகாதார நிலையத்தில் வைத்து நடைபெற்றது.

## மேல்மலையனூரில் HMS/TALUF அலுவலகம் திறப்பு





விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் தமிழ்நாடு அனைத்து தொழிலாளர் நலவாரிய சங்க ஒன்றிய அலுவலகத்தை மேல்மலையனூர் ஒன்றிய சேர்மேன் கண்மணி நெடுஞ்செழியன் திறந்துவைத்தார் கவுன்சிலர் யசோதா சந்திரகுப்தா இந்நிகழ்வில் மாநிலத் தலைவர் நாகராஜன் மாநில பொதுச்செயலாளர் திருப்பதி வழுப்புரம்மாவட்டத் தலைவர் செல்வகுமார் மாவட்டச் செயலாளர் திவ்யா ஒன்றிய செயலாளர் புஷ்பலதா மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கிளை செயலாளர்கள் கலந்துகொண்டனர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## நம்பெருமாள் விருப்பன் திருநாள் (06/05/2026-16/05/2026)



விஜயநகரப் பேரரசை ஆண்ட விருபாக்ஷன் என்னும் விருப்பண்ண உடையார், தம் பெயரிலேயே நிறைய பொன்னும், பொருளும் கொண்டு நம்பெருமாளுக்கு சித்திரை மாதம் பிரம்மோற்சவம் நடத்தி அழகு பார்த்தான்!

சித்திரை, ரேவதி ஸ்ரீநம் பெருமாளின் திருநக்ஷத்திரம் அன்று திருத்தேரில் திருவீதி உலா அன்வயிக்கும்படி இவ்வுற்சவத்தை அமைத்து கொண்டாடினான் அரசன்! அதன்படி இன்று வரை நம்பெருமாள் இந்த பிரம்மோற்சவத்தை விருப்பன் திருநாளாக கண்டருள்கிறார்!

நேற்று முன்தினம் (06/05) 2026 முதல் திருநாள், அதிகாலை துவஜாரோஹணம் - மாலை உபயநாச்சிமார்களுடன் சித்திரை வீதி திருவீதி உலா வந்து, யாகசாலையில் திருமஞ்சனம் கண்டருளி நள்ளிரவு கண்ணாடி அறை திரும்பிய வைபவம்!..

"எழிலுடைய வம்மனைமீர் என்னரங்கத் தின்னமுதர், குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்; எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய, கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே!"

**- ஸ்ரீ ஆண்டாள்
(நாச்சியார் திருமொழி)**

## யானை வாகனம்





திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் யானை வாகனம்


## களப்பயணமாக நூல் ஆலையை பார்வையிட்ட மாணவர்கள்..!



**வந்தவாசி, மே 08:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில் நடைபெற்று வரும் மாணவர்களுக்கான கோடைக்கால இலவச பயிற்சி வகுப்பில் நேற்று மாணவர்கள் ஏஎஸ்ஏ நூல் மில் களப் பயணம் சென்று வந்தனர். அங்கு நூல் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதையும், அதன் பயன்பாடுகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு குறிப்புகள் எழுதினர். இந்த பார்வையின் போது கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், நூல் மில் நிர்வாகி அ.விஜயன், ஆசிரியர் மஹாவீர், சமூக ஆர்வலர் ஜியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்


**பா. சீனிவாசன்,
வந்தவாசி.**

## கஜ வாகனம்



பட்டலம் கோவில் சென்னை கேசவன் பெருமாள் கோவில் சென்னை

## ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு ஆரத்தி



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதி யில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## திருத்தேர்



சென்னை MGR நகர் பிரசன்னா வெங்கடேஸ்வரா பெருமாள் கோவில் நேற்று காலை திருத்தேர்

## ஒலிம்பிக் செஸ் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர் ஹரிஷ் கவியரசு





இந்தியா சென்னையை பிறப்பிடமாகக் கொண்ட மாணவர் ஹரிஷ் கவியரசு , கத்தார் தோஹாவில் சென்ற வாரம் நடைபெற்ற அனைத்துப் பள்ளிகளுக்கான ஒலிம்பிக் செஸ் போட்டியில் முதலிடத்தில் முன்னேறி தங்கப்பதக்கம் பெற்றுள்ளார் . ஏற்கனவே பல பரிசுகளை வென்றுள்ள ஹரிஷ் கவியரசு அவர்கள் உலக அளவில் செஸ் மாஸ்டராக வாகை சூட தமிழ்நாடு இணைய இதழ் வாழ்த்துகிறது .

## திமுக அரசின் திட்டங்கள் தொடர வேண்டும்.. அவசர முடிவுகளை எடுக்க ஸ்டாலினுக்கு அதிகாரம் - எம்எல்ஏக்கள் கூட்டத்தில் தீர்மானம்

**சென்னை, மே 08:** நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் 59 இடங்களில் வெற்றி பெற்ற திமுக எம்எல்ஏக்களுடன் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அண்ணா அறிவாலயத்தில் இன்று ஆலோசனை நடத்தினார்.

இந்த கூட்டத்தில் வாக்களித்த மக்களுக்கு நன்றி, முதல்வருக்கு நன்றி, காங்கிரசுக்கு கண்டனம் மற்றும் தலைவருக்கு அதிகாரம் ஆகிய பொருண்மைகளில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவருக்கு அதிகாரம் வழங்கும் தீர்மானத்தில் கூறப்பட்டதாவது, "நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத வகையில் முடிவுகள் வந்துள்ளது. இது நெருக்கடியான, சிக்கலான காலகட்டம் ஆகும்.

இன்னொரு தேர்தலுக்கு தமிழ்நாடு தயாராக இல்லாத நிலையில், தமிழ்நாட்டில் நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதே நமது முதன்மை நோக்கம்.

அதேவேளையில், திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்கு உறுவிளைவிக்கும் மதவாத சக்திகளுக்கு இடமளிக்கக் கூடாது என்பது உள்ளிட்டவற்றையும் பரிசீலித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்திய திட்டங்கள் அப்படியே தொய்வின்றி தொடர்ந்தால் தான் தமிழ்நாடு அதே வேகத்தில் வளர்ச்சியைத் தக்க வைக்க முடியும் என்பதும் நமது விருப்பம் ஆகும்.

இத்தகைய சூழலில் உருவாகும் அரசியல், நிர்வாக நிலைமைகளை ஆராய்ந்து அவசர முடிவுகளை உடனடியாக எடுக்கும் அதிகாரத்தை கழகத் தலைவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழங்குவது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 70 பொதுத்தொகுதிகளில் தலித் வேட்பாளர்களை நிறுத்தினாரா விஜய்? உண்மை என்ன?

**சென்னை, மே 08:** 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரான விஜய் பல தசாப்த கால அரசியல்



மரபுகளை உடைத்தெறிந்து ஒரு புதிய அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளார் என்றால், அது ஆச்சர்யப்படுவதற்கில்லை.

அதில் ஒன்றுதான் பொதுத்தொகுதிகளில் தலித் வேட்பாளர்களுக்கு வாய்ப்பு வழங்கியது. ஆனால் இதில் ஒரு தவறான தகவல் ஒன்று இணையம் முழுவதும் பரவி வருகிறது. அதாவது தவெக தலைவர் விஜய் 70 பொதுத்தொகுதிகளில் தலித் வேட்பாளர்களை நிறுத்தியதாக ஒரு தகவல் பரப்பப்பட்டு வருகிறது.

புதிதாக அமையவுள்ள 17வது தமிழ்நாடு சட்டமன்றத்தில் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த 25 பேர், பட்டியலின மற்றும் பழங்குடியின (SC/ST) சமூகத்தைச் சேர்ந்த 50 பேர், மற்றும் 23 பெண் உறுப்பினர்கள் இடம்பெற உள்ளனர். மேலும் 10 ஆண்டுகளுக்கு பின்னர் இரண்டு பிராமண உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு செல்லவுள்ளனர்.

## புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா



கும்பகோணம் வட்டம், கீழ திருமலை ராஜபுரம், புனித அந்தோணியார் ஆலய, மே மாதத் திருவிழா சப்பர பவனியுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. செய்தி: குடந்தை பரிபூரணன்.

## தனியார் பள்ளிகளில் கோடைகால சிறப்பு வகுப்புகள் தலையீடு கோரி மாணவர்கள் வேண்டுகோள்

**இராமநாதபுரம், மே 8:**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பல தனியார் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கோடைகால சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவது குறித்து மாணவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். கோடைகால விடுமுறை காலத்திலும் வகுப்புகள் நடத்தப்படுவதால் மன உளைச்சல் ஏற்படுவதாகவும், சில பள்ளிகளில் அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லையெனவும் மாணவர்கள் குற்றம்சாட்டுகின்றனர். இதனால், மாவட்ட நிர்வாகம் தலையிட்டு இவ்வகுப்பு களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து முதன்மைகல்வி அலுவலகத்தை தொடர்பு கொண்டபோது, விவகாரம் தொடர்பாக விசா ரணை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெற்றி கொண்டாட்டத்தில் தாக்குதல் மாமனார், மருமகன் காயம்; இரண்டு பேர் கைது

**திருவில்லிபுத்தூர், மே 8:**

வத்திராயிருப்பு காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட வ.புதுப்பட்டி ஆர்.சி. தெருவைச் சேர்ந்த தமிழக வெற்றிக் கழகத்தைச்சேர்ந்தபிரசாந்த்(டைசன்)மற்றும்இன்பத்தமிழன் ஆகியோர், கட்சியின் வெற்றியை கொண்டாடும் வகையில் சத்தமாக ஆரவாரம் செய்து சென்றதாக கூறப்படுகிறது. அப்போது, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அமைதியாக கொண்டாடுமாறு ஆனந்த் மற்றும் இளையராஜா அறிவுறுத்தியுள்ளனர். இதனால் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி, டைசன் மற்றும் இன்பத்தமிழன் இருவரும் கோபத்தில் ஆனந்த் மற்றும் இளையராஜாவை தாக்கியதாககூறப்படுகிறது. இந்த தாக்குதலில் இருவருக்கும் தலைப்பகுதியில் காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர்கள் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். இதுகுறித்து ஆனந்த் அளித்த புகாரின் பேரில், வத்திரா யிருப்பு காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து, டைசன் மற்றும் இன்பத்தமிழன் ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மின் கம்பங்கள் விழுந்து வீடுகள் சேதம்

**நத்தம், மே 8:**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் செவ்வாயன்று இரவு பலத்த மழை பெய்தது. இதில் நத்தம் அருகே அய்யாபட்டியைச் சேர்ந்த சித்திரையன் (40) என்பவரின் வீட்டின் முன்பு போடப்பட்டிருந்த ஆஸ்பெட்டாஸ் சீட் மீது அப்பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக வீட்டின் அருகில் இருந்த மின்கம்பம் சாய்ந்து விழுந்தது. இதில் ஆஸ்பெட்டாஸ் சீட் முழு வதும் சேதமடைந்தது. மேலும் அந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த நத்தம் கிராம நிர்வாக அலுவலர் ராஜேஷ்குமார் சம்பவ இடத்திற்கு சென்று நேரில் விசாரணை நடத்தினார். இதைப் போலவே வேலம்பட்டி பகுதியில் பெய்த மழையால் அப்பகுதியை சேர்ந்த தினகரன்(30) என்பவரின் மாட்டுக் கொட்டகையில் போடப்பட்டிருந்த செட்டிலும் மின்கம்பம் சாய்ந்தது. இதில் செட் சேதமடைந்தது. இது குறித்து தகவல் அறிந்து வந்த மின்வாரியத்தினர் சாய்ந்த மின் கம்பங்களை அப்புறப்படுத்தினர்.

## பெட்டிக்கடைக்குள் சரக்கு வேன் பாய்ந்து விபத்து

**ஒட்டன்சத்திரம், மே 8:**

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள ஒத்தப்பட்டியில், மருதா யம்மாள் (82) என்பவர் சாலையோரத்தில் சிறிய பெட்டிக்கடை வைத்து வாழ்க்கை நடத்தி வந்தார். புதன்கிழமை அவர் தனது கடையில் திருமக்கால் (70) என்பவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப் போது, கடை முன்பு பால்காரர் வேல்முரு கன் (42) நின்று கொண்டிருந்தார். இந்நிலையில், அய்யலூரிலிருந்து எரி யோட்டுக்குச் சென்ற சரக்கு வேன் திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறு மாறாக சென்று, எதிர்பாராத விதமாக பெட்டிக்கடைக்குள் பாய்ந்தது. இந்த விபத்தில் மருதாயம்மாள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். திருமக்கால் மற்றும் வேல்முருகன் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். அருகிலிருந்தவர்கள் அவர் களை மீட்டு திண்டுக்கல் அரசு மருத்து வக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி னர். அங்கு அவர்கள் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## த.வெ.க. தலைவர் விஜய்க்கு வழங்கப்பட்ட கான்வாய் வாகனங்கள் வாபஸ்

**சென்னை, மே 8:**



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. எனினும், ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மையை நிரூபிக்கும் அளவிலான எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை இல்லாமல் த.வெ.க. உள்ளது. இதனால், அக்கட்சி ஆட்சியமைப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது.

இந்நிலையில், த.வெ.க. அலுவலகத்திற்கு வந்த ஆதவ் அர்ஜுனா மற்றும் செங்கோட்டையன் ஆகியோருடன் விஜய் ஆலோசனை நடத்தினார். இதன்பின்னர் பட்டினப்பாக்கம் அலுவலகத்தில் இருந்து நீலாங்கரை வீட்டுக்கு விஜய் புறப்பட்டார்.

த.வெ.க. தலைவர் விஜய்க்கு, முதல்-அமைச்சருக்கு வழங்கப்படும் கான்வாய் வாகனங்களுடனான பாதுகாப்பு கடந்த 3 நாட்களாக வழங்கப்பட்டு வந்தது. வாக்கு எண்ணிக்கை நடந்த தினமே அவருக்கு கான்வாய் வாகனங்களுடன் பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், பட்டினப்பாக்கம் அலுவலகத்தில் இருந்து விஜய் வீட்டுக்கு புறப்படுவதற்கு முன்பே கான்வாய் வாகனங்கள் எடுத்து செல்லப்பட்டன. அவை தலைமை செயலகம் நோக்கி புறப்பட்டு சென்றன. 4 கான்வாய் வாகனங்களும் புறப்பட்ட நிலையில் காவல் துறையினர் மட்டுமே விஜய்யுடன் உள்ளனர்.

த.வெ.க. தலைவர் விஜய்க்கு, முதல்-அமைச்சருக்கு அளிக்கப்படும் சிறப்பு பாதுகாப்பு வளையம் எனப்படும் கான்வாய் வாகனங்கள் வாபஸ் பெறப்பட்டு உள்ளன. இதனால், கான்வாய் வாகனங்கள் எதுவுமின்றி விஜய் நீலாங்கரை வீட்டுக்கு புறப்பட்டார். இதில், தானாக முன்வந்து கான்வாய் வாகனங்களை விஜய் திருப்பி அனுப்பினார் என்றும் தகவல் தெரிவிக்கின்றது.

## விஜய்க்கு எதிரான மனு: விசாரணைக்கு பட்டியலிட ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, மே 8:**



சென்னை ஐகோர்ட்டில் எம். ராஜ்குமார் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், ‘வருமான வரித்துறை சோதனையின்போது கண்டறியப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், தவெக தலைவர் விஜய் மீது வருமான வரிச் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. மேலும், முறைகேடான பணப்பரிமாற்றம் மற்றும் வருமானத்தை மறைத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றும், அமலாக்கத்துறை மூலம் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த மனுவை ஏற்க மறுத்த உயர்நீதிமன்றத்தின் பதிவாளர் துறை, இது விசாரணைக்கு உகந்ததல்ல என்று கூறி அதை எண்ணிட மறுத்திருந்தது. இந்த விவகாரம் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மா மற்றும் நீதிபதி ஜி. அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. மனுவின் ஏற்புடைமை குறித்து முடிவெடுப்பது நீதிமன்றத்தின் நீதித்துறை சார்ந்த செயல்பாடு என்றும், அதனைப் பதிவகத் துறை தன்னிச்சையாக முடிவு செய்ய முடியாது என்றும் நீதிபதிகள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

மேலும், மனுவின் தகுதி குறித்து ஏதேனும் சந்தேகம் இருந்தால், அதனை “ஏற்புடைமைக்கு உட்பட்டது என்ற முத்திரையுடன் பதிவு செய்து, தொடர்புடைய நீதிபதி முன்பு பட்டியலிட வேண்டும் என்றும் பதிவகத் துறைக்கு உத்தரவிட்டனர்.

## தேர்தலின்போது பேருந்து வசதி முடக்கம்: பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, மே 8:**

சட்டப்பேரவைத் தோ்தலின்போது வாக்காளா்கள் சொந்த ஊா்களுக்குச் சென்று வாக்களிக்க போதுமான பேருந்து, ரயில் உள்ளிட்ட போக்குவரத்து வசதிகளை ஏற்படத்தாதது குறித்து ஆணையம் அமைத்து விசாரிக்க சென்னை உயா்நீதிமன்றம் உத்தரவிட்டது.

வளசரவாக்கத்தைச் சோ்ந்த தேவதாஸ் காந்தி வில்சன் என்பவா் சென்னை உயா்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தமிழக சட்டப்பேரவைக்கு கடந்த ஏப். 23-ஆம் தேதி தோ்தல் நடைபெற்றது. தோ்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊா்களுக்குப் புறப்பட்ட மக்களுக்கு, போதிய பேருந்து மற்றும் ரயில் உள்ளிட்ட போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை.

இதனால், ஏராளமான வாக்காளா்கள் சொந்து ஊருக்குச் சென்று வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதேபோன்று, அரசு ஊழியா்கள் தபால் வாக்குகளைப் பதிவு செய்வதற்கான வாக்குச் சீட்டுகள் அவரவா் ஊா்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதால், அரசு ஊழியா்கள் பலா் அங்கு சென்று வாக்களிக்க முடியவில்லை. இதனால், 100 சதவீத வாக்குப்பதிவு என்ற நிலையை எட்ட முடியவில்லை. எனவே, இது தொடா்பாக ஆணையம் அமைத்து விசாரணை விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தாா்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.செளந்தா், பி.பி.பாலாஜி ஆகியோா் அடங்கிய அமா்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த மனுவுக்கு தோ்தல் ஆணையம், தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஜூன் மாதத்துக்கு ஒத்திவைத்தனா்.

## தமிழக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்: 2026-27 கல்வியாண்டு மாணவர் சேர்க்கை விண்ணப்ப பதிவு தொடக்கம்

**சென்னை, மே 8:**



2026-2027 ம் கல்வியாண்டில், தமிழ்நாட்டில் உள்ள 181 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 159 பாடப்பிரிவுகளில் 126959 (Shift-I - 101022 / Shift-II - 25937) சேர்க்கை இடங்கள் உள்ளன.

மாணவர்கள் தாங்கள் விருப்பப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் விருப்பப்பட்ட பாடப்பிரிவுகளுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கலாம். பொது மற்றும் இதர பிரிவினர் மாணவருக்கு விண்ணப்பக் கட்டணம் ஒரு மாணவருக்கு ரூ.48/-, பதிவுக் கட்டணம் ரூ.2/- மட்டும். SC/ST பிரிவினருக்கு விண்ணப்ப கட்டணம் ஏதுமில்லை. பதிவுக் கட்டணம் : ரூ.2/- மட்டும். இணையதளம் வழியாக விண்ணப்பம் பதிவுசெய்ய 2026-27-ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை விண்ணப்ப பதிவு 07.05.2026 தொடங்கி 29.05.2026 வரை நடைபெறுகிறது.

கட்டணம் செலுத்தும் முறை:-

விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை கீழ்க்கண்ட மின்னணு முறைகள் மூலம் இணைய தளம் வாயிலாகவே செலுத்தலாம்:

டெபிட் கார்டு (Debit Card)

கிரெடிட் கார்டு (Credit Card)

நெட் பேங்கிங் (Net Banking)

UPI (GPay, PhonePay)

மாணவர்கள் சேர்க்கை தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் பெற கல்லூரிக்கல்வி இயக்ககத்தில் செயல்படும் உதவி மையத்தைத் திங்கள் முதல் வெள்ளிக்கிழமைகளில் காலை 10:00 மணி முதல் மாலை 05:00 மணி வரை 044 -24343100 / 24342011 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## மு.க. ஸ்டாலினுடன் பிரேமலதா சந்திப்பு!



**சென்னை, மே 8:**

தமிழகசட்டப்பேரவைத் தேர்தலில், திமுக தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்ற தேமுதிக 10 தொகுதிகளில் போட்டியிட்டு 1 இடத்தில் வெற்றி பெற்றது. இருப்பினும், திமுக இந்தத் தேர்தலில் தோல்வியடைந்த நிலையில், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விருத்தாசலம் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். இந்த நிலையில், முதல்வர் பதவியை ராஜிநாமா செய்துள்ள திமுக தலைவர் மு.க. ஸ்டாலினை தேமுதிக தலைவர் பிரேமலதா விஜயகாந்த் புதன்கிழமை (மே 7) மாலை நேரில் சந்தித்து உரையாடியுள்ளார். இதுபற்றி, பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறப்பட்டதாவது: “சட்டமன்ற தேர்தல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, முன்னாள் தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலினை இன்று மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். ஜனநாயக மரபையும் அரசியல் நாகரிகத்தையும் மதிக்கும் இந்த சந்திப்பு, மக்கள் நலனே முதன்மை என்ற நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துகிறது” எனக் கூறப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில், தேமுதிக மாநிலங்களவை உறுப்பினர் சுதீஷ் மற்றும் விஜயபிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பச்சைத் துரோகம்; டி.ஆர். பாலு கண்டனம்!

**சென்னை, மே 8:**

“திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் போட்டியிட்டு, கூட்டணிக் கட்சித் தொண்டர்களின் உழைப்பால் வெற்றி பெற்ற 5 சட்டமன்ற உறுப்பினர்களை பணயம் வைத்து கயமையுடன் மாற்று அணிக்கு சென்றுள்ளனர். ஏதோ பெரிய அரசியல் ராஜதந்திர முடிவு எடுத்தது போல கொள்கை முலாம் பூசி நியாயப்படுத்த முயற்சிக்கிறார்கள். சந்தர்ப்பவாதத் திற்கு கொள்கை முகமூடி போடும் இந்த முயற்சி பல்லிளிக்கிறது. இது திமுக தலைமையிலான ஆட்சி அமையும் என்று நம்பி வாக்களித்த மக்களுக்கு செய்த பச்சைத் துரோகம்” என்று டி.ஆர். பாலு குற்றம்சாட்டினார். “எப்போதெல்லாம் காங்கிரஸுக்கு இக்கட்டான சூழல் ஏற்பட்டதோ, அப்போதெல்லாம் திமுக உடனிருந்தது. 2019 தேர்தலில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்மொழிந்தது திமுக. இரண்டு தேர்தல்களில் அதிக நாடாளு மன்ற உறுப்பினர்களை அனுப்பித் தந்தது திமுக கூட்டணி. இன்று அவை முறிந்து விட்டதாக காங்கிரஸ் கூறி இருப்பதை பார்க்கும்போது திகைப்பு ஏற்படவில்லை. குறுக்கு வழியில் அதிகாரம் தேடி பாஜக பல மாநிலங் களில் எதைச் செய்கிறதோ, அதையே காங்கிரஸ் தமிழ்நாட்டில் செய்திருக் கிறது” என்று அவர் வேதனையுடன் கூறினார். “தோல்வி எங்களுக்கு புதிதல்ல. துரோகமும் எங்களுக்கு புதிதல்ல. ஆனால் அவை நிரந்தரம் அல்ல என்பதும் எங்களுக்கு தெரியும். காலம் பதில் சொல்லும்” என்று டி.ஆர். பாலு குறிப்பிட்டுள்ளார்.

## மே.வங்கத்தில் லெனின் சிலை உடைப்பு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்

**சென்னை, மே 8:**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டி யன் விடுத்துள்ள அறிக்கையில், “மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி முறைகேடான வழிகளில் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியைத் தொடர்ந்து, அங்கு அக்கட்சியினர் திட்டமிட்ட வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பல இடங்களில் எதிர்க்கட்சிகளின் அலுவலகங்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, உலகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவரும், மாமேதையுமான லெனின் அவர்களின் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்கத்தைப் போலவே திரிபுராவிலும் இடதுசாரி கட்சி அலுவலகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பாஜகவின் இத்தகைய அராஜகப் போக்கும், வன்முறை அரசியலும் ஜனநாயகத்திற்கு எதிரானது. உழைக்கும் மக்களின் விடுதலைக்கான வழிகாட்டியான லெனினின் சிலையைச் சேதப்படுத்துவது என்பது ஒட்டுமொத்த தொழிலாளி வர்க்கத் தின் மீதான மாபெரும் தாக்குதலாகும். இத்தகைய வன்முறைச் செயல் களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஜனநாயக விரோதத் தாக்குதல்களை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது” என கூறப்பட்டுள்ளது.

## திருவிடந்தை நித்ய கல்யாண பெருமாள் கோவிலில் தேரோட்டம்

மாமல்லபுரம், மே 8:

மாமல்லபுரம் அடுத்த திருவிடந்தை நித்யகல்யாண பெருமாள் கோவிலில், சித்திரை பிரம்மோற்சவம், கடந்த 1-ந்தேதி துவங்கியது. தினமும் சிறப்பு பூஜைகள், சிறப்பு உற்சவங்கள், சுவாமி வீதியுலா நடைபெறுகிறது. விழாவின் முக்கிய உற்சவமான கருட சேவை நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிலையில் பிரம்மோற்சவ விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று விமரிசையாக நடைபெற்றது. ராஜ அலங்காரத்தில் தேவியருடன் பெருமாள் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இந்நிகழ்வில் மாமல்லபுரம், கோவளம், திருப்போரூர் பகுதிகளில் இருந்து வந்திருந்த ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து தேர் இழுத்தனர். 10-ந்தேதி இரவு தெப்ப உற்சவம் நடைபெறுகிறது.

## சிவகாசி பத்திரகாளி அம்மன் கோவில் சித்திரை திருவிழா: தீச்சட்டி எடுத்து வந்த பக்தர்கள்



சிவகாசி, மே 8:

சிவகாசி இந்துநாடார்கள் உறவின்முறை மகமை பண்டுக்கு சொந்தமான ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவிலில் சித்திரை பொங்கல் திருவிழா கடந்த மாதம் 28-ந்தேதி இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது. 11 நாள் நடைபெறும் சித்திரை பொங்கல் விழாவில் அம்மன் தினமும் ஒரு அலங்காரத்தில் வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக 9-வது நாள் திருவிழாவான இன்று கயிர்குத்து நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் உடம்பில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, மாறுவேடம் தரித்து, கையில் வேப்பிலை ஏந்தி கோவிலுக்கு சென்று வேப்பிலை படுக்கையில் உருண்டு வினோதமான முறையில் வழிபாடு நடத்தினர்.

வழிபாட்டின்போது பொங்கல் வைத்து, முளைப்பாரி, அக்னி சட்டி ஏந்தி, அலகு குத்தி தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நடைபெற உள்ளது.

## ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் சித்திரை தேர் திருவிழா கொடியேற்றம்

ஸ்ரீரங்கம், மே 8:

108 வைணவ தலங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம் என்று போற்றப்படுவதுமான ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் ஆண்டு முழுவதும் திருவிழா நடைபெறும். இந்த விழாக்களில் சித்திரை தேர் திருவிழாவும் ஒன்று.

அவ்வகையில் இந்த ஆண்டுக்கான விழா கடந்த 3-ந்தேதி காலை 9.30 மணி அளவில் வெள்ளை கோபுரம் அருகே உள்ள தேரில் முகூர்த்தக் கால் நடும் நிகழ்ச்சியோடு தொடங்கியது.

நேற்று சித்திரை தேர் திருவிழாவின் கொடியேற்றம் நடைபெற்றது. இதையொட்டி அதிகாலை 4 மணி அளவில் கருடக்கொடிக்கு பட்டாச்சாரியார்கள் மற்றும் அர்ச்சகர்களால் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு



மேளதாளம் முழங்க கொடியேற்றப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று வழிபட்டனர். இந்த விழா 11 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படும்.

விழாவையொட்டி தினமும் வாகன சேவை நடைபெறுகிறது. கற்பகம், யாழி, கருடன், அனு மந்தம், யானை, தங்க குதிரை உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் நம்பெருமாள் எழுந்தருளி வீதி உலா வந்து அருள்பாலிக்கிறார்.

விழாவின் சிகர நிகழ்ச்சியான சித்திரை தேரோட்டம் வருகிற 14-ந் தேதி நடக்கிறது. இதையொட்டி அன்று அதிகாலை 4 மணி அளவில் நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் மூலஸ்தானத்தில் இருந்து புறப்பட்டு 4.30 மணி அளவில் தேர்முட்டி மண்டபத்திற்கு வந்தடைகிறார். அதன்பின் 5 மணிக்கு தேரில் எழுந்தருளி வலம் வருகிறார்.

## ஏழுமலையான் தரிசனம்: 8 மணி நேரம் காத்திருப்பு

திருமலை, மே 8:

திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தாகள் தா்ம தரிசனத்தில் 8 மணி நேரம் காத்திருந்தனா்.

திருமலைக்கு வரும் பக்தா்களின் எண்ணிக்கை கோடை விடுமுறையை ஒட்டி அதிகரித்துள்ளது.

திருமலையில், புதன்கிழமை காலை நிலவரப்படி வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 10 அறைகளில் பக்தா்கள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனா். தா்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவா்கள்) 8 மணி நேரமும், ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் வழங்குவதை வெள்ளிக்கிழமை முதல் கோடை விடுமுறை முடியும் வரை தேவஸ்தானம் ரத்து செய்துள்ளது.



அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணி வரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பக்தா்களும் அவா்களின் பெற்றோா்களும், இரவு 10 மணிவரை அனைத்து பக்தா்களும் அனுமதிக்கப்படுகின்றனா். அலிபிரி வழியில் திவ்ய தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஏழுமலையானை செவ்வாய்க்கிழமை முழுவதும் 76,247 பக்தா்கள் தரிசனம் செய்தனா்; இவா்களில் 28,250 போ் தலைமுடி காணிக்கை செலுத்தினா். உண்டியல் மூலம் பக்தா்கள் சமா்ப்பித்த காணிக்கைகளைக் கணக்கிட்டதில், ரூ. 3.44 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

இனி தரிசன டிக்கெட்டுகள் இல்லாமல் ஏழுமலையான் தரிசனத்துக்காக திருமலைக்கு வரும் பக்தா்கள் காத்திருப்பு அறைகளில் காத்திருந்து மட்டுமே தரிசனத்துக்குச் செல்ல முடியும்.

எனவே பக்தா்கள் தங்கள் பயணத்தை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## உலக நன்மை வேண்டி ஒளிலாயம் சித்தர் பீடத்தில் சிறப்பு யாகம்

சீர்காழி, மே 8:

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே காரைமேடு ஒளிலாயம் 18 சித்தர்கள் பீடம் அமைந்துள்ளது. மறைந்த ராஜேந்திரா சுவாமிகள் நிர்மாணித்த இந்த ஒளிலாயத்தில் உள்ளூர் மட்டுமின்றி வெளிநாட்டினரும் வந்து வழிபாடு நடத்தி செல்வது வழக்கம்.

இந்நிலையில் உலக நன்மை வேண்டியும், வெயிலின் தாக்கம் குறைய வேண்டியும் ஒளிலாயம் 18 சித்தர்கள் பீடத்தில் சிறப்பு யாகம் மற்றும் பூஜை நடைபெற்றது.

30 யாக குண்டங்கள் அமைக்கப்பட்டு 108 மூலிகைகள் கொண்டும் 30 சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க, கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், ருத்ர ஹோமம் உள்ளிட்ட



பூஜைகளுடன் மகா யாகம் நடைபெற்றது.

யாகத்தைத் தொடர்ந்து ஒளிலாயத்தில் அருள்பாலிக்கும் சிவலிங்கத்துக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. சிறப்பு யாகத்தில் திரளான பக்தர்கள் பங்கேற்று வழிபட்டனர்.

முன்னதாக யாகத்தில் பங்கேற்ற கிராம மக்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டன.






## நலம் தரும் மருத்துவம்

### நாவல் பழம் சாப்பிடுபவரா நீங்க? - இந்தத் தப்பை மட்டும் செஞ்சிடாதீங்க, உயிருக்கே ஆபத்தாகலாம்!

கோடைக்காலத்தில் நாவல் பழங்களின் சீசன் தொடங்கிவிடும். சாலையோரங்களில் நாவல் பழங்கள் (NAVAL PAZHAM) குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. நாவல் பழங்களில் ஏராளமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளது என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

இந்த பழத்தில் வைட்டமின் சி, மெக்னீசியம், பொட்டாசியம், போலிக் ஆசிட் உள்ளிட்ட பல தாதுக்களும் நிறைந்துள்ளது. இது மட்டுமல்லவாது நாவல் பழம் மிகுந்த மருத்துவ குணம் கொண்டுள்ளது. நீரழிவு நோய்க்கு இந்த பழங்கள் சிறந்த தீர்வாக இருக்கின்றன. மருத்துவ குணம் கொண்டுள்ள எந்த ஒரு பழங்களையும் ஆரோக்கியமான மனிதர்கள் சாப்பிடுவதில் எந்த ஒரு சிக்கலும் இல்லை. அதே நேரத்தில் உடல் ஆரோக்கிய குறைபாடு உள்ளவர்கள் ஒரு சில பழங்களை சாப்பிடுவது அவர்களுக்கு உகந்ததாக இருக்காது. அந்த பழங்களில் உள்ள மருத்துவ குணங்கள் சாப்பிடும் நபருக்கு சில சமயங்களில் பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடும். இதுபோன்ற சூழ்நிலையில் ஒருவரின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடும். சாதாரணமாக நாவல் பழத்தினை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. இந்த பழத்தில் உள்ள புளிப்பு மற்றும் உவர்ப்பு தன்மை நமது வயிற்றில் அமிலத்தன்மையை ஏற்படுத்தி விடும். இதன் காரணமாக நெஞ்செரிச்சல், அஜீரணம், வாயு தொல்லை ஆகியவை ஏற்படலாம்.

நாவல் பழம் எப்பொழுது சாப்பிட்டாலும் தவறுதலாக கூட உடனே பால் அருந்தக்கூடாது. பாலிலும் நாவல் பழத்திலும் உள்ள வேதிப்பொருட்கள் நேரெதிர் நச்சுத்தன்மை வாய்ந்தது. இந்த இரண்டு பொருட்களும் ஒன்றாக சேர்ந்தால் நச்சுத்தன்மை ஏற்பட்டு வாந்தி வயிற்று வலி மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவை ஏற்படும். சுவாச பிரச்சனைகள் மற்றும் ஆஸ்துமா தொல்லை கொண்டவர்கள் நாவல் பழங்களை தவிர்த்து விடுங்கள். இதில் உடலை அதிகப்படியாக குளிர்விக்கும் வேதிப்பொருட்கள் உள்ளது. இவை நுரையீரலில் அதிகப்படியான சளியை தேங்க வைக்கிறது. இதனால் ஆஸ்துமா மற்றும் சுவாச கோளாறு உள்ளவர்கள் இந்த பழத்தினை சாப்பிடுவது மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். அதை போல் சளி இருமல் தொல்லை உள்ளவர்களும் நாவல் பழம் சாப்பிடக்கூடாது.

இந்த பழங்களில் அதிகப்படியான பொட்டாசியம் இருப்பதால் குறைந்த இரத்த அழுத்தம் உள்ளவர்களும், சிறுநீரக கோளாறு உள்ளவர்களும் சாப்பிடக்கூடாது.

நாவல் பழத்தில் உள்ள ஆக்சலேட்டுகள் கால்சியம் உறிஞ்சுவதை தடுக்கின்றன. இதனால், கர்ப்பிணி பெண்களின் வயிற்றில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுத்தும். நாவல் பழங்களில் ரத்த சர்க்கரையை விரிவாக குறைக்கும் மருத்துவ குணங்கள் உள்ளது.

## மர்மமான முறையில் அழியும் போபோஸ்: செவ்வாயின் நிலவுக்கு பெரும் ஆபத்து?

போபோஸிலிருந்து பிரியும் துகள்கள் செவ்வாய் கிரகத்தைச் சுற்றி வரத் தொடங்கி, மீண்டும் போபோஸ் மீதே அதிவேகமாக வந்து மோதும். இத்தகைய தொடர் மோதல்கள் போபோஸை முழுமையாக அழித்துவிடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

போபோஸிலிருந்து பிரியும் துகள்கள் செவ்வாய் கிரகத்தைச் சுற்றி வரத் தொடங்கி, மீண்டும் போபோஸ் மீதே அதிவேகமாக வந்து மோதும். இத்தகைய தொடர் மோதல்கள் போபோஸை முழுமையாக அழித்துவிடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

செவ்வாய் கிரகத்தின் ஈர்ப்பு விசை மற்றும் அலை விளைவுகளால் (TIDAL EFFECTS), அதன் நிலவுகளில் ஒன்றான போபோஸ் மெல்ல மெல்ல கிரகத்தை நோக்கி இழுக்கப்பட்டு வருகிறது. இறுதியில் இது சிதைந்து ஒரு தூசு வளையமாக (DEBRIS DISK) மாறும் என்பது விஞ்ஞானிகள் நீண்ட காலமாக அறிந்த ஒன்றே. ஆனால், இந்த அழிவு நாம் எதிர்பார்த்ததை விட மிக முன்னதாகவே தொடங்கும் என்று புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

பொதுவாக, விண்பொருள் ஒரு கிரகத்தை எவ்வளவு நெருங்கலாம் என்பதற்கு எல்லை உண்டு. இதுவே 'ரோச் எல்லை' எனப்படுகிறது. செவ்வாய் கிரகத்தைப் பொறுத்தவரை, அதன் ஆரத்தைப் போல 1.6 மடங்கு தொலைவில் (சுமார் 3,600 முதல் 5,500 கி.மீ) இந்த எல்லை உள்ளது. ஆனால், பிரான்சின் ஆய்வகத்தைச் சேர்ந்த ஹாரிசன் அக்ருசா மற்றும் பேட்ரிக் மைக்கேல் ஆகியோரின் ஆய்வின்படி, போபோஸ் இந்த



எல்லையைத் தொடுவதற்கு முன்பே சிதைந்து உடையும் எனத் தெரியவந்துள்ளது.

விஞ்ஞானிகள் 2 விதமான ஆய்வுகளை மேற்கொண்டனர். போபோஸின் வடிவம், அதன் பிணைப்புத் திறன் மற்றும் செவ்வாயின் ஈர்ப்பு விசை ஆகியவற்றைக் கணக்கிடுதல். போபோஸை ஒரு 'பாறைக்குவியல்' என வகைப்படுத்தி, அது கிரகத்தை நோக்கி நெருங்கும்போது அதன் ஒவ்வொரு துகளும் எப்படிச் செயல்படும் என்பதை ஆராய்தல். இந்த 2 ஆய்வுகளுமே ஒரே முடிவைத்தான் காட்டுகின்றன.

போபோஸின் 2 முனைகளிலிருந்து அதன் துகள்கள் உதிரத் தொடங்கும். செவ்வாய் கிரகத்தின் ஆரத்தைப் போல 2.25 மடங்கு தொலைவில் இருக்கும்போதே இந்தச் சிதைவு தொடங்கும்.

2.15 RM மற்றும் 2.13 RM தொலைவை எட்டும்போது சிதைவு பலமடங்கு அதிகரிக்கும். 2.09 RM தொலைவில், போபோஸின் துகள்கள் இரண்டு மிகப்பெரிய நீரோட்டங்கள் போலப் பிரியத் தொடங்கி, அதன் நிலைத் தன்மை முழுமையாகச் சிதைக்கும். ஆனால், இறுதிக் கட்டத்தை எட்டும் முன்பே ஒரு விபத்து நேரலாம். போபோஸிலிருந்து பிரியும் துகள்கள் செவ்வாய் கிரகத்தைச் சுற்றி வரத் தொடங்கி, மீண்டும் போபோஸ் மீதே அதிவேகமாக வந்து மோதும்.

இத்தகைய தொடர் மோதல்கள் போபோஸை முழுமையாக அழித்துவிடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இந்த அழிவு நிகழ்வதற்கு இன்னும் 2 கோடி முதல் 5 கோடி ஆண்டுகள் வரை ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையில், போபோஸின் உட்புற அமைப்பு மற்றும் அதன் உறுதித் தன்மையை ஆராய்வதற்காக ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (JAXA) இந்த ஆண்டு MMX (MARTIAN MOONS EXPLORATION) என்ற விண்கலத்தை ஏவத் தயாராகி வருகிறது. இந்தத் திட்டம் போபோஸின் இறுதி காலம் எப்போது என்பது குறித்த துல்லியமான தகவல்களை வழங்கக் கூடும்.

# நூலறுந்தப் பட்டங்கள்



"அம்மா அம்மா....."
"என்ன தம்பி... "
"என்னம்மா செஞ்சிட்டு இருக்கே எப்ப இருந்து கூப்பிட்டு இருக்கேன்.."
"இல்ல தம்பி எனக்கு உடம்புக்கு முடியல தலை சுற்றுவது போல் இருக்கு அதான் வீட்டிக்கு பின்னாடி உட்கார்ந்து கொண்டு இருந்தேன்.."

"உனக்கு இதே வேலையாக போச்சி எப்பப் பார்த்தாலும் உடம்பு சரியில்லை கை வலிக்குது கால் வலிக்குதுன்னு சொல்லிகிட்டே இருக்கே... அவ பாவம் எத்தனை வேலையைத்தான் செய்வாள் ... அவ வேலைக்கு வேறு போகனும் டைம் வேறு ஆச்சு... ஏம்மா... இப்படி செய்யற... எனக்கு உன்னாலே நிம்மதியே போச்சு..."
"இல்ல தம்பி சாப்பாடு எல்லாம் செஞ்சிட்டேம்பா...உம் பொண்டாட்டி டிபன்லே எடுத்து வச்சிட்டு இருக்கா அவ்வளவுதான் இதுக்கு போய் திட்டிட்டு இருக்கியேப்பா..."
"என்னம்மா எதை சொன்னாலும் ஏதாவது பதில் சொல்லிட்டே இருக்கே .. அந்த டிபனை நீ எடுத்து வச்சாயென்ன அவ புறப்படுவால்ல ஏதோ ஒன்னு சொல்லிட்டு ..."
"தம்பி எனக்கு மருந்து தீர்ந்து போச்சு பா... மருந்து ரெண்டு நாளா போடல அதனால தல சுத்திடுச்சுப்பா இல்லையென்றால் நானே எடுத்து வச்சுருவேன் கோவிச்சுக்காதப்பா..."
"என்னமா எது சொன்னாலும் ஏதோ ஒன்னு பதில் பேசிட்டே இருக்கே.. உன்னோட ஒரே தொந்தரவா போச்சு சாயந்திரம் வரப்ப வாங்கிட்டு வந்து தொலைகிறேன்.."
அந்தத் தாயின் மனது யாரோ சாட்டையால் அடித்தது போல் இருந்தது.

"சிரித்துக் கொண்டே சரிப்பா சாயந்திரம் வரப்ப மறக்காதே பா ..."
"சரி சரி வாங்கிட்டு வரேன் ..."

எல்லோரும் வீட்டை விட்டு கிளம்பிய பின் தனது ரூமில் சுவற்றில் ஃபோட்டோவில் தொங்கிக்கொண்டு இருந்த கணவரிடம் சென்றாள் .. கண்களில் கண்ணீர் அவளை அறியாமல் பூமியை நனைத்தது..
"ஏங்க என்னை விட்டுட்டு போயிட்டீங்க எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கலைங்க நம்ம பார்த்து பார்த்து வளர்த்த நம்ம பையன் எப்படி பேசுறான்..... நான் இருப்பதே தொல்லைக்கிறான் நானும் உங்களுடனே வந்துரட்டமா.... நீங்க இருக்கிற வரைக்கும் என்னை நல்லாத்தான் பாத்துட்டீங்க நான் மறந்துட்டாலும் கூட மருந்து நீங்க வாங்கிட்டு வந்து குடுப்பீங்க இப்ப நம்ம பையன் கிட்ட கேக்குறதுக்கு பயமா இருக்கு .."

பேசிக்கொண்டே இருந்த தாய் அப்படியே சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்தால். .... எனக்கு உங்கள் அருகில் இருக்கணும் போல் தோணுது உங்க தோளுல சாந்துக்கணும் போல இருக்கு இப்படியே நினைத்தவள் அப்படியே உட்கார்ந்து இருந்தால் ... 5:00 மணிக்கு எல்லாம் மகன் உள்ளே வந்தான்

" என்னம்மா கதவு திறந்தே கிடக்கு நாய் எதாச்சும் உள்ள வந்தா என்ன செய்வது கதவை சாத்தாமா உள்ள என்னதான் செஞ்சிட்டு இருக்கியோ.. அம்மா அம்மா... எங்கதான் இருக்க எந்த ரூமிலும் உன்னை காணோம் கதவு சாத்தாம ரூம்ல போய் தூங்கிட்டு இருக்கியா எப்ப பார்த்தாலும் தூங்கிட்டு தான்,,,"
பேசிக்கொண்டே வந்தவன் ... தாய் இருந்த நிலையைப் பார்த்து ஒரு கணம் திகைத்து நின்று விட்டான்.. மனதுக்குள் ஏதோ உறுத்தியது

"அம்மா அம்மா என்ன ஆச்சு நான் பேசிட்டே இருக்கேன் உனக்கு காது கேட்கலையா... என்று தாயைப் போய் தொட்டதும் அந்த தாய் அப்படியே சரிந்தாள் மகனின் மடியில்.,,,
"அம்மா அய்யய்யோ ...என்ன ஆச்சி நீ என்னை விட்டுப் போய் விட்டியா இனிமேல் நான் என்ன செய்வேன் ஏதோ கோபத்தில் நான் பேசி விட்டேன் அம்மா உன்னை விட்டால் எனக்கு யாருமா ஆதரவு,,,?
நான் பேசியது தவறுதான் என்னை மன்னித்துவிடு வந்துவிடுமா ....."

எப்படி எப்படியோ அழுதான் என்ன செய்வது நூலறுந்தப் பட்டங்கள் இனி பறக்கவா செய்யும், இருக்கும்போது கொண்டாடாமல் பறந்தப்பின் பரிதவித்து என்னபயன்,,,? யோசித்தப்படியே "அம்மா" என்ற அலறல் சத்தம் அக்கம் பக்கம் கேட்க ஊரே ஒன்றுக்கூடியது.

**இர.மனோன்மணி**
**கோவை**

# உடைந்த பிம்பங்கள்



அடர்ந்த கரிய நிற மேகத்தின் தாக்கத்தால் மூடப்பட்ட வானம் இருள் சூழ்ந்து காட்சியளிக்க, மின்னலும் இடியும் மாறி மாறிப் போரிட்டு உலகத்து மக்களைப் பயத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தன. அந்த வானத்தைப் போலவே தீபிகாவின் மனதும் கோபம், ஆற்றாமை, கவலை எனப் பல உணர்ச்சிகளால் இருண்டு போயிருந்தது. அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு சூன்யத்தில் அவள் நின்றிருந்தாள்.

"ஏய்! என்னைப் பார்ப்பதை விட்டுட்டு அங்கே என்ன பார்வை? கிளைமேட் சூப்பரா இருக்குல்ல!" கணவன் ரகுவின் குரல் செவியில் விழுந்தும் அவள் திரும்பிப் பார்க்கவில்லை.

"இந்த நேரத்துக்குச் சூடா ஒரு கப் காஃபியும், மசால் வடையும் சாப்பிட்டா பிரமாதமா இருக்கும் தீபி!"

அவன் தன் ஆசையை வெளிப்படுத்தியும் அவள் அசையவில்லை. அவளது மௌனம் ஏதோ ஒரு புயலின் அறிகுறி என்பதை உணர்ந்து, மெல்ல அவளருகே சென்று அமர்ந்தான்.

அவளது கண்கள் தூரத்து வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. "தீபி! இப்படியே ரொம்ப நேரமா அந்த வானத்தைப் பார்த்துட்டு இருந்தா, அது உன் அழகைக் கண்டு பொறாமைப்பட்டு உன்னை என்கிட்ட இருந்து திருடிட்டுப் போயிடப் போகுது. அப்புறம் நான் என் பொண்டாட்டிக்கு எங்கே போவேன்?" அவன் செல்லமாகக் கிண்டல் செய்தான்.

கணவனின் அந்த எதார்த்தமான பேச்சில் மெதுவாகக் கலைந்தாள் தீபிகா. "என்னம்மா, வானத்துல நடக்குற சண்டைக்குப் போட்டியா நீயும் இவ்வளவு கோபமா இருக்கே? நான்தான் அன்னைக்கே சொன்னேன்ல... அதையெல்லாம் விட்டுடுன்னு ..."

அவனது அந்தப் பெருந்தன்மையான உள்ளம் அவளை மயக்குவதற்குப் பதிலாக, அவளது குற்ற உணர்ச்சியைத் தூண்டி மேலும் பலவீனப்படுத்தியது. அவனது அன்பை உணராமல், அவனைக் காயப்படுத்திய தருணங்கள் அவள் நினைவில் நிழலாடின. கண்களில் முட்டிய கண்ணீர் துளிகள் முத்துக்களாய்ச் சிதறின.

சிறு வயதிலிருந்தே தீபிகாவுக்குத் தன் அண்ணன் கார்த்திக் என்றால் உயிர். அவனுக்காக எதையும் செய்வாள். திருமணமான பின்னும் அந்தப் பாசம் குறையவில்லை. ரகுவின் அன்பும், குழந்தைகளின் மழலையுமெனப் புதிய உலகம் விரிந்தாலும், தன் அண்ணனுக்காக அவள் இதயத்தில் ஒதுக்கிய இடம் எப்போதும் தனித்துவமானது.

ஆரம்பத்தில் தேனாக இனித்த தீபிகாவின் திருமண வாழ்க்கையில், இந்த அண்ணன் பாசம்தான் மெல்ல மெல்லச் சலசலப்பை ஏற்படுத்தியது. அண்ணன் என்ன செய்தாலும் அது சரியாகவே அவளுக்குத் தெரிந்தது.

ஒருமுறை குடும்ப விசேஷத்தில், ரகுவை கார்த்திக் எல்லார் முன்னிலையிலும் மதிக்காமல் நடத்தினான். அன்று இரவு ரகு வெடித்தான். "தீபிகா, உன் அண்ணன் நடந்துகிட்ட விதம் உனக்குச் சரியாத் தெரியுதா? வீட்டுப் பெண்ணை எடுத்த மாப்பிள்ளைன்னு கொஞ்சமாவது மரியாதை தர்றானா? நான் அங்கே அவமானப்பட்டு நிற்குறேன். உனக்கு இதெல்லாம் கண்ணுல விழாதா?"

அவளோ அதை மிகச் சாதாரணமாகக் கடந்து போனாள். "நீங்க கோபப்படுற அளவுக்கு அங்க ஒண்ணும் நடக்கல ரகு. அவன் விவரம் தெரியாமப் பேசியிருப்பான். இதுல போய்க் குறை சொல்ல முடியுமா?" என்றாள் பிடிவாதமாக.

ரகு அன்று கசப்புடன் சொன்னான், "பாசம் உன் கண்ணை மறைக்குது தீபி. அனுபவப்பட்டா தான் உனக்குப் புத்தி வரும்!"

காலம் உருண்டோடியது. அண்ணன் அண்ணன் என்று உருகிய தீபிகாவுக்கு, இப்போதுதான் அந்த மாற்றங்கள் தெரியத் தொடங்கின. கார்த்திக்கின் வாழ்வில் அவன் மனைவியும் பிள்ளைகளும் முதன்மையானவர்களாக மாற, தீபிகா அடுத்த நிலைக்குத் தள்ளப்பட்டாள். அவளது பாசத்திற்கு அங்கே மரியாதையில்லை என்பதை உணர்ந்தபோது இதயம் சுக்குநூறானது.


"நான் அவனுக்காக என்னவெல்லாம் செய்தேன் ரகு... அவனால் எப்படி இப்படி மாற முடிஞ்சது?" என்று அவள் விம்மினாள்.

ரகு அவளை அணைத்துக்கொண்டான். "நான்தான் அப்பவே சொன்னேனே தீபி! நீ எதையும் கேக்குற நிலையில இல்ல. அண்ணன் மேல வச்சிருந்த அந்த மாய பிம்பத்துல நீயே உன்னைக் கட்டிப் போட்டுக்கிட்ட. இனியும் அதையே யோசிச்சு உன் வாழ்க்கையைக் கெடுத்துக்காதே!"

"நீங்க அன்னைக்கே சொன்னீங்க... நான் தான் கேக்கல. இன்னைக்கு என் கண்ணு முன்னாடியே என் அண்ணன் ஒரு அந்நியனா நிக்குறான். எனக்கு யாருமே இல்லையா ரகு?" என்று கதறினாள்.

ரகு அவளைக் குத்திக்காட்டவில்லை. அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு, "நானும், நம்ம பிள்ளைகளும் இருக்குறது உன் கண்ணுக்குத் தெரியலையா? விடு தீபிகா... மனுஷங்க இப்படித்தான். எல்லா ஆம்பளைங்களும் பொண்டாட்டி பின்னாடியே போற சுயபுத்தி இல்லாதவங்க கிடையாது. இதோ பாரு, உன் அண்ணனுக்காக என்னை நீ எதிர்த்துப் பேசினப்பவும் நான் உன் கூடவே தானே இருந்தேன்? உன் மனசு கஷ்டப்படுமேன்னு தான் பல இடங்கள்ல நான் விட்டுக்கொடுத்துப் போனேன்" என்று நிதானமாகச் சொன்னான்.

அப்போதுதான் தீபிகாவுக்கு உண்மை உரைத்தது. தன் அண்ணனிடம் அவள் தேடிய அந்த அசைக்க முடியாத விசுவாசமும் பாசமும், உண்மையில் அவள் கணவன் ரகுவிடம்தான் இத்தனைக் காலமும் நிறைந்திருந்தது. வாழ்க்கை என்பது துரோகங்களால் மட்டும் முடிந்து போவது கிடையாது; அந்தத் துரோகங்களுக்கு மத்தியிலும் நம்மைக் கைவிடாமல் தாங்கிப் பிடிக்கும் ஒரு உண்மையான உறவில்தான் அது மீண்டும் உயிர்த்தெழுகிறது என்பதைத் தீபிகா உணர்ந்தாள். அவள் மனம் லேசானது. ஆறுதலாய் ரகுவின் தோளில் சாய்ந்து கொண்டாள்.



**K.ஆனந்த ஜோதி**

# மாயக்கண்ணன் லீலை (பாகம் -10)



**- எம்.எல்.பிரபா**
ஆதம்பாக்கம்.
சென்னை 88

கிருஷ்ணன், அகாசுரனுடைய வாயில் மரணத்திலிருந்து கன்றுகளையும், தன்னுடைய நண்பர்களையும், காப்பாற்றி அவர்களை யமுனை ஆற்றங்கரையில் மணலுக்கு அழைத்து வந்தான். நாம் இவ்விடத்திலேயே எல்லோரும் உணவு உண்ணலாம் .வெகு நேரம் ஆகிவிட்டது. பசியால் அனைவரும் களைத்திருப்போம். கன்றுகளும் தண்ணீர் குடித்துவிட்டு புற்களை மேய்ந்து கொண்டு இருக்கட்டும். 'வாருங்கள்!! வந்து அமருங்கள்' என்று கூறினான் .அதனைக் கேட்ட இடைச் சிறுவர்கள் வரிசையாக கிருஷ்ணரை சுற்றி அழகிய கண்களுடன் சிறுவர்கள் உட்கார்ந்தார்கள். தாமரைப் பூவின் நடுவில் கிருஷ்ணனும் பூவை சுற்றியுள்ள இதழ்களைப் போன்று சிறுவர்களும் உட்கார்ந்திருந்தார்கள். அந்த சிறுவர்கள் எல்லாரும் உணவு உண்ணும் போது தங்களுடைய உணவுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டார்கள். மகிழ்ச்சியுடன் ருசித்து, உணவை உண்டார்கள். ஆடைக்கும், வயிற்றுக்கும் இடையில் புல்லாங்குழலையும், கையின் பக்கத்தில் கொம்பூதி, பிரம்பு ,மற்றும் இடது கையில் தயிர்சாதமும் தொட்டுக்கொள்ள ஊறுகாயும் வைத்துக்கொண்டு கிருஷ்ணன் சாப்பிட ஆரம்பித்தான். நண்பர்களை பரிகாசம் செய்து கொண்டு அவர்களை சிரிக்கவும் வைத்தான். இந்தக் காட்சியை மேலே இருந்து தேவர்கள் பார்த்து மகிழ்ந்தார்கள். மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய கிருஷ்ணன்





விளையாட்டுப் பிள்ளையாய் மாறி உணவு உண்பதை ரசித்தார்கள். இவ்வாறாக கிருஷ்ணன் இடைச்சிறுவர்களுடன் மெய்மறந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, கன்றுகள் புல்லுக்காக ஆசைப்பட்டு காட்டின் உள்ளே வெகு தூரம் சென்றுவிட்டன. சிறுவர்கள், தங்கள் கன்றுகளை காணவில்லையே! என பயந்து போனார்கள். உடனே கிருஷ்ணன் 'நீங்கள் பயப்படாமல் உணவை உண்ணுங்கள் நான் காட்டின் உள்ளே சென்று கன்றுகளை பத்திரமாக கூட்டி வருகிறேன்' என்று கூறினான் .மலை, குகை, சந்து ,புதர் என கன்றுகளை தேடிச் சென்றான் கிருஷ்ணன். கன்றுகளை எங்கும் காணவில்லை.பின்னர் மீண்டும் ஆற்றங்கரைக்கு வந்தார். அங்கு இடைச் சிறுவர்களையும் காணவில்லை. மீண்டும் வனத்திற்குள் சென்று சிறுவர்களையும், கன்றுகளையும், தேடினான். வனத்தில் யாரையும் காணவில்லை. கிருஷ்ணருக்கு புரிந்து விட்டது .இது யாருடைய செயல்? என்று. உலகத்தையே காக்கும் பகவானுக்கு இது பிரம்மாவின் செயல் என்று அறிந்து கொள்ள முடியாதா என்ன? கிருஷ்ணன், தன்னுடன் வந்த சிறுவர்கள்,மற்றும் அவர்களுடைய தாய்மார்களுக்கும், கன்றுகளின் தாய் பசுவிற்கும், மகிழ்ச்சி அளிப்பதற்காகவும், பிரம்மாவிற்கு சிறந்த பாடம் கற்பிப்பதற்காகவும், தன்னையே இரு பிரிவாக பிரித்துக் கொண்டார். பாதி சிறுவர்களாகவும் ,பாதி கன்றுகள் ஆகவும் உருவெடுத்தார். தானே எல்லா கன்றுகள் ஆகியும், எல்லா சிறுவர்கள் ஆகியும், அவர்களோடு விளையாடி எல்லோருடனும் கோகுலத்திற்கு சென்றார். அவரவர் வீட்டிற்கு தனித்தனியே சிறுவர்களாகவும், கன்றுகளாகவும், புகுந்து எல்லா இடத்திலும் கிருஷ்ணனே இருந்தான். எந்த ஒரு வித்தியாசமும் இன்றி, எல்லாம் முன்பு போலவே இருந்தது. இது ஒரு மாயை என்று யாருக்கும் தெரியவில்லை. இவ்வாறாக ,பரமாத்மா கிருஷ்ணன் ஒரு வருடம் முழுவதும் தன்னுடைய லீலையை நடத்தினார். தொடரும்...

**தொடரும்..**

# கௌசிக சுப்ரமணியர்

பாண்டிச்சேரி பெயர் கூறியவுடன் பரவலாக அனைவரும் அறியப்பட்டது மதுபானம் ஆகும். ஆனால் அதை எல்லாம் தாண்டி ஆன்மீகம், கடவுள் நம்பிக்கை, மதமற்ற நிலை, மக்களிடையே பாசம், விருந்தோம்பல் என் நிறைய உண்டு.

அதை பற்றிய தெளிவான ஒரு தகவல் தான் இங்கு பதிவிடுகிறேன்.

இங்கு ரயில் நிலையம் அருகில் கௌசிக சுப்ரமணியர் ஆலயம் உள்ளது.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இந்த முருகன் கோவிலுக்கு நிலத்தை கொடுத்தவர் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த " முகமது கௌசி" என்பவர். இளவயதில் முருகன் மீது தீராக்காதல் கொண்டமையால் வருடந்தோறும் இங்கு மாசிமகத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். எந்த கிழமையில் மாசி மகம் வந்தாலும் அன்று உள்ளூர் விடுமுறை அறிவிப்பார்கள்.

திரு. கௌசிக் அவர்கள் இளவயதில் மாசி மக விழாவில் முருகன் வழிபாட்டிற்காக எந்த ஊர் முருகனாக இருந்தாலும் சரி முன்னிலையில் நின்று முருகன் தனக்கே உரியவன் என்று ஆராதிப்பார்.

அப்போது இங்கு பாண்டிச்சேரி மேயராக இருந்த திரு. எதுவார் குபேர்( கிறிஸ்தவ மதம்) அவர்கள் இவரிடம் என்ன வேண்டும் என கேட்க முருகனுக்கு கோவில் கட்டும் தனது அவாவினை கூறியுள்ளார்.

ஆளுநர். திரு. பி.டி. ஜாட்டி என்பவர் அடிக்கல் நாட்டி இம்முருகன் கோவில் கட்டி முடிக்கப்பட்டது. இவ்விஷயங்கள் அனைத்தும் கேள்விப்பட்ட காஞ்சிபுரம் சங்கராச்சாரியார் இக்கோவிலுக்கு "கௌசிக பாலசுப்பிரமணியர் திருக்கோவில்" என் பெயர் சூட்டினார்.

பாண்டிச்சேரி மக்களால் ," கௌச் கோவில்; பாய் முருகன் கோவில்" இன்றும் அழைக்கப்படுகிறது.

2003ல் திரு. கௌஸ் அவர்கள் வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார். அன்று முதல் அவரின் மகன் இக்கோவிலை நிர்வகித்து வருகின்றார்.

இன்றும் கோவிலின் பிரகாரத்தில் திரு. கௌஸ் அவர்களின் புகைப்படம் காணலாம்.

இக்கோவிலுக்கு திருமணமாகாதவர்கள் வந்தால் விரைவில் சுபசெய்தி கிடைக்கும்.. குழந்தை பேறு, குழந்தைகள் படிப்பு, வீடு கட்ட என அனைத்திற்கும்..... மூன்று வேளைகளிலும் நேரம் மற்றும் தேவைக்கு தகுந்தது போல நைவேத்தியங்கள் செய்யப்படுகிறது.


இங்கு மூலவரை பார்க்க சுவாமிமலை முருகன்( மூலவர்) மாதிரி இருக்கும். சுவாமிமலை யில் உயரம் அதிகம் மூலவர்.

நாள் கிழமை என்றால் நல்ல கூட்டம் இருக்கும்.. மிக முக்கியமாக நேரத்தை சரியாக கடைபிடிக்கிறார்கள். அவ்வளவு சுத்தம்........

நேற்று முகநூலில் ஸ்டோரி, திரு. அண்ணாமலையார் கோவிலில் நடந்த சிவராத்திரி நிகழ்ச்சியில் ஒரு அங்கமாக வீடியோ வந்திருந்ததை நான் பகிர்ந்தேன்.

அல்லா/ முருகன்/ இயேசு என யாரை வேண்டுமானாலும் நினையுங்கள். அந்த பக்தியில் உள்ள தூய்மையோடு நேர்மையாக வேண்டினீர்கள் என்றால் கண்டிப்பாக அவன் துணை உண்டு. கை கொடுப்பான்...

நன்றி



**பானு ஸ்ரீ**
பாண்டிச்சேரி

---

தினம் ஒரு தலைவர்கள்

# கமலா நேரு வரலாறு

கமலா நேரு (ஆகஸ்ட் 1, 1899 - பிப்ரவரி 28, 1936) என்பவர், இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், இந்தியாவின் முதல் பிரதமருமான ஜவஹர்லால் நேருவின் மனைவியும், இந்தியாவின் முதல் பெண் பிரதமராக இருந்த இந்திரா காந்தியின் தாயாரும் ஆவார். இவர் மிகவும் உண்மையானவராகவும், தேசபக்தி மிக்கவராகவும், எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவராகவும் இருந்தார்.

இளமைப்பருவம்

கமலா நேரு ஆகஸ்ட் 1, 1899 அன்று பிறந்தார். அவர் பழைய டில்லியில் காஷ்மீர் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது பெற்றோர் ராஜ்பதி- ஜவஹர்மால் கௌள் ஆவர். இவர் தன் பெற்றோருக்கு மூத்த பிள்ளை ஆவார். இவரது சகோதரர்கள் சாந்த் பகதூர் கௌள் மற்றும் பயிரியலாளர் ஆன கைலாச் நாத் கௌள். இவரது சகோதரி ஸ்வரூப் கத்ஜூ. இவர் தனது வீட்டிலிருந்து பண்டிட் மற்றும் மௌல்வியின் வழிகாட்டுதலின் மூலம் கல்வி பெற்றார்.

திருமணம்

கணவர் நேரு, மகள் இந்திராவுடன் கமலாநேரு -1918

இவருடைய பதினேழாம் வயதில் பண்டிட் ஜவஹர்லால் நேருவை மணந்தார். 1917 ஆம் ஆண்டில் இவருக்குப் பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு இந்திரா பிரியதர்ஷினி எனப் பெயர் சூட்டப்பட்டது. 1924 ஆம் ஆண்டில் ஒரு ஆண் குழந்தை பிறந்து ஒரு வாரத்திலேயே இறந்துவிட்டது.

நண்பர்கள்

கமலா நேரு சிறிது காலம் சபர்மதி ஆசிரமத்தில் தங்கியிருந்த போது அவருக்கு கஸ்தூரிபாய் காந்தியுடனும் பிரபாவதி தேவியுடனும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

இறப்பும் தாக்கமும்

பிப்ரவரி 28, 1936 அன்று கமலா நேரு காச நோய் பாதிப்பால் சுவிட்சர்லாந்திலுள்ள லாசன்னில் காலமானார். லாசக்னா இடுகாட்டில் இவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

இவருக்கு நினைவு செலுத்தும் வகையில் கமலா நேரு கல்லூரி, கமலா நேரு பூங்கா, கமலா நேரு தொழில்நுட்ப கழகம்(சுல்தான்பூர்), கமலா நேரு மருத்துவமனை ஆகியவற்றுக்குப் பெயரிடப்பட்டுள்ளன.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் மனைவி கமலா நேரு என்பது அனைவரும் அறிந்தது. ஆனால் நேருவின் பழங்குடியின மனைவி எனச் சொல்லப்பட்ட ஒருவர் அவரின் வாழ்நாள் முழுவதும் அந்தப் பட்டத்தை சுமந்து வாழ்ந்து மடிந்தார் என்பது காலம் கடத்திய கதை.

'நேருவின் பழங்குடியின மனைவி' என ஒதுக்கிவைக்கப்பட்ட 80 வயது நிறைந்த, புத்னி மஞ்சியாயின் (BUDHNI MANJHI-YAIN) என்ற சந்தால் பழங்குடியினப் பெண் கடந்த நவம்பர் 17ல் காலமானார். இவர் இறப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு உள்ளூர் ஊடகம் ஒன்றிடம் பேசுகையில்...

"அன்று நேரு வந்தார், மாலை அணிவித்து வரவேற்றேன். நேரு சென்றுவிட்டார். பின்னர், 'நேருவின் பழங்குடியின மனைவி' என அழைக்கப்பட்டேன்.பிறகு, என் சொந்த வாழ்க்கைக்காக நான் ஓடவேண்டியிருந்தது" என்று கூறியிருந்தார்.

நேருவோ இந்தியாவின் பிரதமர். புத்னியோ பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்தவர். அவர் ஏன் நேருவின் மனைவி என்று அழைக்கப்பட வேண்டும்? இதன் பின்னணியில் உள்ள அந்த விசித்திரக் கதையை அறிய பல ஆண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

இது நிகழ்ந்தது 1959-ல். அதாவது, அப்போது





இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு, ஜார்கண்டின் தன்பாத் மாவட்டத்தில், தாமோதர் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பஞ்செட் அணையின் திறப்பு விழாவுக்காக வருகை புரிந்தார். தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பரேஷன் (DVC) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், பிரதமர் நேருவை வரவேற்க, அதில் ஒப்பந்தப் பணியாளராக வேலை பார்த்து வந்த 16 வயது சிறுமி புத்னி மஞ்சியாயின் என அழைக்கப்பட்ட சந்தால் பழங்குடியினப் பெண் தேர்வுசெய்யப்பட்டிருந்தார்.

நிகழ்ச்சி நிரல்படி, புத்னி பிரதமர் நேருவுக்கு மாலை அணிவித்து வரவேற்றார். பின்னர் நேருவின் வேண்டுகோள்படி அந்த சிறுமியே அணையை திறந்தும் வைத்தார். அதன் பிறகு நடந்தவைதான் புத்னி மஞ்சியாயின் வாழ்வை முற்றிலுமாகப் புரட்டிப்போட்டது. வரலாற்று நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படும் அணை திறப்பு விழாவில், அணையை திறக்கும் வாய்ப்பு கிடைத்தும், புத்னியின் வாழ்வில் அது பாக்கியமான நிகழ்வாக அமையவில்லை.

காரணம், இவர் சார்ந்த சந்தால் பழங்குடி சமூகத்தில், பெண் ஒருவருக்கு மாலையிட்டாலே அந்த நபருடன் திருமணம் ஆகிவிட்டதாகக் கருதப்படுமாம். நேருவுக்கு புத்னி மஞ்சியாயின் தனது கரங்களால் மாலையிட்டதால், நேருவுடன் அவருக்குத் திருமணமாகிவிட்டதாகக் கருதி, பழங்குடியினர் அல்லாதவரை புத்னி மஞ்சியாயின் திருமணம் செய்ததாகவும் சொல்லப்பட்டு, அவர் சார்ந்த சந்தால் சமூகத்தில் இருந்து முற்றிலுமாக ஒதுக்கி வைக்கப்பட்டார். அத்துடன் புத்னி தான் பணிபுரிந்த தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பரேஷனில் இருந்தும் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

தன்னுடைய வாழ்வாதாரத்துக்காக மேற்குவங்கத்துக்கு இடம்பெயர்ந்த புத்னி மஞ்சியாயின், அங்கு புருலியா பகுதியில் நிலக்கரிச் சுரங்கத்தில் தினக்கூலியாய் வேலை பார்த்து வந்தார். இந்த நிலையில் தனக்கு அடைக்கலம் கொடுத்த நிலக்கரி சுரங்கத் தொழிலாளரான சுதிர் தத்தா என்பவரையே திருமணமும் செய்துகொண்டார். இந்த தம்பதிக்கு 3 குழந்தைகள் பிறந்தன.பல வருடங்களுக்குப் பிறகு1985-ல் ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த போது, மேற்குவங்க மாநிலம் அசன்சோல் பகுதிக்கு சென்றிருக்கிறார்.

அப்போது உள்ளூர் காங்கிரஸ் நிர்வாகிகள் மூலம் புத்னி மஞ்சியாயின் குறித்து அறிந்த ராஜீவ்காந்தி அவரை நேரில் சந்தித்தார். அப்போது புத்னி தனக்கு நேர்ந்த துயரத்தை ராஜீவ் காந்தியிடம் முழுமையாக கண்ணீருடன் விவரித்திருக்கிறார். ராஜீவ் காந்தியின் அறிவுறுத்தலில் தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பரேஷனில் மீண்டும் புத்னிக்கு வேலை வழங்கப்பட்டது. சுமார் 20 வருடங்கள் அதில் வேலை பார்த்த புத்னி மஞ்சியாயின் 2005-ல் பணி ஓய்வுபெற்றார்.

பழங்குடியின சமூகத்தைச் சார்ந்தவர்கள் விசித்திரமான சம்பிரதாயங்களை கடைபிடிப்பதுண்டு. மாலை அணிவித்ததால் மனைவி ஆகிவிட்டார் என அவர் சார்ந்த சமூகம் சொன்னதால், செய்யாத தவறுக்காக தன் வாழ்வையும் வாழ்விடத்தையும் இழந்து, தனது குடும்பத்தை பிரிந்து நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார் புத்னி. நேருவின் பழங்குடியின மனைவி எனும் பட்டத்தை வாழ்நாள் முழுதும் சுமந்து வாழ்ந்தார் என்பது காலத்தால் கடத்தப்பட்ட கதையாகவே இருந்தாலும், ஒரு பெண்ணிடம் இருந்து அவரின் வாழ்வுரிமையை பறித்தது ஏற்க முடியாத ஒன்றாகவே இதில் பார்க்கப்படுகிறது.

# டிரைவர் இல்லாமல் கார் ஓட பயணம் செய்த நடிகை மீனா





தனது 3 வயதிலேயே குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் அறிமுகமாகி மக்களால் கொண்டாடப்படும் நாயகியாக வலம் வந்தவர் தான் நடிகை மீனா.
அன்புள்ள ரஜினிகாந்த் படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்து பலரது கவனத்தையும் பெற்றார். பின் கொஞ்சம் இடைவேளைக்கு பிறகு என் ராசாவின் மனசிலே படத்தில் நாயகியாக அறிமுகமாக அவரது பயணம் வெற்றிப் பயணமாக அமைந்தது.

ரஜினிகாந்த், கமல்ஹாசன், சரத்குமார், அஜித்குமார் என பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்திருக்கிறார். தமிழ் மட்டுமில்லாது தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிப் படங்களிலும் நடித்துள்ளார்.
இப்போது தனது கதாபாத்திரத்திற்கு முக்கியம் உள்ள படங்களாக தேர்வு செய்து நடித்து வருகிறார்.

வீடியோ

நடிகை மீனா படங்களில் நடிப்பதை தாண்டி சின்னத்திரை நிகழ்ச்சிகள், தனியார் நிகழ்ச்சிகள் கலந்துகொள்வது, போட்டோ ஷூட் நடத்துவது என பிஸியாக தான் உள்ளார். இதற்கு இடையில் கொஞ்சம் ரிலாக்ஸ் செய்ய சுற்றுலாவும் செல்கிறார்.

அண்மையில் தானும் கார் ஓட்டாமல், டிரைவரும் இல்லாமல் கார் பயணம் செய்துள்ளார், அந்த வீடியோவையும் வெளியிட்டுள்ளார்.



நடிகை கயாடு லோஹர் தென்னிந்திய சினிமாவில் முக்கிய நடிகையாக வளர்ந்து வருகிறார். டிராகன் படத்தின் மூலம் பிரபலம் ஆன அவருக்கு தெலுங்கு, மலையாளத்திலும் அதிகம் வாய்ப்புகள் தற்போது வந்து கொண்டிருக்கிறது.
தாராள கிளாமர் காட்டி ரசிகர்களை கயாடு லோஹர் கவர்ந்து வந்தார். எந்த நிகழ்ச்சிக்கு போனாலும் குட்டையான உடையில் கிளாமர் ஆக தான் சென்று வந்தார் அவர். ஆனால் தற்போது ஹோம்லி லுக்கில் தான் அவர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.
சேலையில் அவரது லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# 'பெத்தி' படத்தின் எடிட்டிங் பணி நிறைவு!! திரையில் எப்போது ?





தெலுங்கில் முன்னணி நடிகரான ராம் சரண் நடித்த பெத்தி படத்தின் எடிட்டிங் பணிகள் நிறைவடைந்துள்ளதாக படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இயக்குனர் புஜ்ஜி பாபு சனா இயக்கத்தில் 'பெத்தி' படம் பலமுறை வெளியிட மாற்றி அமைக்கப்பட்ட நிலையில் வரும் ஜூன் 4 ஆம் தேதி வெளியாக இருக்கிறது.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் மற்றும் சுகுமார் ரைட்டிங்ஸ் இணைத்து தயாரிக்கும் 'பெத்தி' என்னும் பான் இந்தியா படத்தில் ராம் சரண் வேறொரு தோற்றத்தில் நடித்துள்ளார்.

உள்ளூர் விளையாட்டு கதைக்களத்தை மையமாக வைத்து உருவாகும் இந்த படத்திற்காக தன் உடலை கட்டுக்கோப்பாக வைக்க உடற்பயிற்சி செய்யும் அவரது புகைப்படத்தை வெளியிட்டபோது "இந்தியாவின் ஹல்க்" என்று அவரது ரசிகர்கள் அவருக்கு பெயர் சூட்டி கொண்டாடினர். இந்த வெற்றி படத்திற்காக ஏ.ஆர் ரஹ்மான் இசை அமைத்து சிக்கிரி எனும் பாடல் பெரிய வெற்றி பெற்றது.

இப்படத்தில் ராம் சரணுடன் இணைந்து கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ்குமார் மற்றும் ஜான்வி கபூர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்தின் எடிட்டிங் நிறைவடைந்த நிலையில் ஜூன் 4 ஆம் தேதி அனைவரும் திரையில் வந்து பார்க்க வேண்டுமென அப்படக்குழு சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சன் தொலைக்காட்சியில் நிறைய சீரியல்கள் வெற்றிகரமாக ஒளிபரப்பாகி வருகிறது.

ஒவ்வொரு சீரியலுக்கும் ரசிகர்கள் கூட்டம் தனித்தனியாக உள்ளது, அப்படி கடந்த சில மாதங்களுக்கு முன் புதியதாக தொடங்கப்பட்ட சீரியல் தான் இரு மலர்கள். இந்த சீரியலில் அதிகம் இளம் நடிகர்கள் நடிக்கிறார்கள்.

இதில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் தான் ஜீவிதா. இவர் சமீபத்தில் பூ போட்ட வெள்ளை நிற புடவையில் எடுத்த அழகிய போட்டோ ஷூட்டை காண்போம்.



# மே 22-ல் ஓடிடி தளத்தில் வெளியாகும் "வாரண்ட்"




விலங்கு, மாமன் பட இயக்குனர் பிரசாந்த் பாண்டியராஜ் முதன்மை கதாபாத்திரத்தில் நடிகராக அறிமுகமாகும் புதிய தொடர் (சீரீஸ்) வாரண்ட்.
இந்த தொடரில் முன்னணி கதாபாத்திரத்தில் பிரசாந்த் பாண்டியராஜ் நடிக்கிறார். 'விலங்கு' என்ற கல்ட் ஹிட் தொடரையும் 'மாமன்' திரைப்படத்தையும் இயக்கிய இவர், இந்த தொடரில் நடிப்பதன் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.
சிவன் பிக்சர்ஸ் மற்றும் எஸ் ஸ்டுடியோஸ் தயாரிப்பில், புதுமுக இயக்குனர் விக்னேஷ் நடராஜன் இயக்கத்தில் உருவாகும் இந்த தொடருக்கு சாம் C.S. இசையமைத்துள்ளார்.
இந்த தொடரின் ஷோ ரன்னராகவும் நடிகர் தேர்வையும் பிரசாந்த் பாண்டியராஜ் மேற்கொண்டுள்ளார். மேலும், பாலாஜி சக்திவேல், கௌசல்யா, காளி வெங்கட், நம்ரிதா MV, அருள் ஜோதி, அருள் தாஸ், சாயா தேவி உள்ளிட்ட பலர் இணைந்து, கதைக்கு ஆழத்தையும் நம்பகத்தன்மையையும் வழங்குகின்றனர்.


'வாரண்ட்' தொடர், அன்றாட போலீஸ் வழக்குகளின் கவனிக்கப்படாத உலகை ஆராய்கிறது, அவை மெதுவாக ஆபத்தான நிலைக்கு மாறும் விதத்தையும் காட்டுகிறது.
இந்தக் கதை, கோட்டை கருப்புசாமி என்ற இரண்டாம் நிலை காவலரை மையமாகக் கொண்டு நகர்கிறது. அவரின் அமைதியான அவமானங்களும் பயமும், அவர் சட்டத்தை எவ்வாறு அமல்படுத்துகிறார் என்பதைக் கட்டமைக்கின்றன.
இதன் மூலம் அதிகாரம், ஆட்சித்தன்மை மற்றும் நீதி எப்போது மங்குகிறது என்பதைக் குறித்து கேள்விகளை எழுப்புகிறது.
இந்த தொடர் ZEE5-ல் இம்மாதம் 22ம் தேதி வெளியாகிறது.

# ஆகஸ்டில் வெளியாகும் துல்கரின் 'ஐ அம் கேம்'!

துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகி வரும் ஒரு ஆக்ஷன் த்ரில்லர் படம் "ஐ அம் கேம்". ஆர்டிஎக்ஸ் படப்புகழ் நஹாஸ் ஹிதாயத் இப்படத்தை இயக்கியுள்ளார். இந்த படத்தில் ஆண்டனி வர்கீஸ், மிஷ்கின், கயாடு லோஹர், கதிர், பார்த் திவாரி மற்றும் சம்யுக்தா விஸ்வநாதன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.
ஜேக்ஸ் பிஜாய் படத்திற்கு இசையமைத்துள்ளார். தனது திரை வாழ்க்கையில் இதுவரை நடித்திருக்கும் படங்களில் மிகவும் ஸ்டைலிஷான படமாக இப்படம் இருக்கும் என நடிகர் துல்கர் சல்மான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இப்படம் ஆகஸ்ட் மாதம் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. மலையாளம், தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் பான்-இந்திய படமாக வெளியாகவுள்ளது.



# நடிகர் அக்ஷய் குமாருக்கு கண்பார்வை அறுவை சிகிச்சை



பாலிவுட் சினிமாவின் நட்சத்திர நாயகனாக வலம் வரும் அக்ஷய் குமார், கண்பார்வை தொடர்பாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிங் இஸ் கிங் என்ற படத்தை இயக்கிய அனீஸ் பாஸ்மி இயக்குநருடன், பதினைந்து ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் நடிகர் அக்ஷய் குமார் இணைந்துள்ளார்.

இந்த படத்தில் கதா நாயகிகளாக வித்யா பாலன் மற்றும் ராஷி கண்ணா நடித்துள்ள நிலையில், கேரளாவில் நடைபெற்று வந்த படப்பிடிப்பு முடிவடைந்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

இதனையடுத்து கேரளாவில் இருந்து கிளம்பியுள்ள அக்ஷய் குமார், சிறிய அளவிலான கண்பார்வை அறுவை சிகிச்சையை முடித்துவிட்டு, இரண்டு முதல் மூன்று வாரங்கள் தனது குடும்பத்துடன் சேர்ந்து நேரத்தை செலவிட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

திரையுலக பிரபலங்கள் தங்களது லேட்டஸ்ட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவு செய்வார்கள். அந்த வகையில் பிரபல சின்னத்திரை நடிகை அட்சயா ராய் தனது இன்ஸ்டாகிராமில் தனது சமீபத்திய புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். நடிகை அட்சயா ராய் விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் அய்யனார் துணை சீரியலில் வானதி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கேங்ஸ்டராக நாகார்ஜுனா... முதல்வராக தபு...





தெலுங்கு சினிமாவின் மூத்த மற்றும் முன்னணி நடிகர் நாகர்ஜுனா. இதுவரை 99 படங்களில் நடித்துவிட்டார். தற்போது 100வது படத்தில் நடிக்கிறார். இதை தமிழில் ʼநித்தம் ஒரு வானம்' படத்தை இயக்கிய ரா.கார்த்திக் இயக்குகிறார். நாகார்ஜுனாவின் அன்னபூர்ணா ஸ்டுடியோவே தயாரிக்கின்றனர். தேவிஸ்ரீபிரசாந்த் இசையமைக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகிறது. இதில் தபு , ஐஸ்வர்யா ராஜேஷ், சுஷ்மிதா பட் ஆகியோர் முதன்மை வேடத்தில் நடிக்கின்றனர். இப்படம் பீரியட் காலகட்டத்தில் உருவாகிறதாம். இதில் நாகர்ஜுனா ஒரு கேங்ஸ்டர் கதாபாத்திரத்திலும், நடிகை தபு முதல்வர் கதாபாத்திரத்திலும் நடிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

# நல்லதே நடக்கும்.. கான்ஃபிடென்டா இருப்போம்..!



தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் 108 தொகுதிகளில் வென்று தனிபெரும்பான்மையான கட்சி என்கிற அந்தஸ்தை தவெக பெற்றுள்ளது.

ஆனால், ஆட்சி அமைப்பதற்கு பெரும்பான்மை இல்லாததால் தவெக மற்ற கட்சிகளிடம் ஆதரவுக்கோரி தவித்து வருகிறது.

இதனால், விஜய் தலைமையிலான ஆட்சி தமிழகத்தில் இருக்குமா? விஜய் முதலமைச்சர் ஆவாரா?

என்கிற கேள்வி அவர்களின் தொண்டர்கள், ரசிகர்கள் மத்தியில் பெரும் கலக்கத்தை எழுப்பியுள்ளது.

இந்நிலையில், இயக்குனர் வெங்கட் பிரபு தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர்," நல்லவங்கள ஆண்டவன் சோதிப்பான் கைவிட மாட்டான்!!! நல்லதே நடக்கும்.. கான்ஃபிடென்டா இருப்போம்" என குறிப்பிட்டுள்ளார்.

# விஷ்ணு விஷால் நடிக்கும் இரண்டு வானம் கதை இதுதான்: இயக்குனர் தகவல்

விஷ்ணு விஷால் காதல் படங்களில் நடிப்பது அபூர்வமானது. ஆக்ஷன், காமெடி மற்றும் கிரைம் திரில்லர் படங்களிலேயே அதிகம் நடித்து வருகிறார். இந்த நிலையில் அவர் நடித்து வரும் ரொமான்டிக் காதல் படம் 'இரண்டு வானம்'.'முண்டாசுப்பட்டி' மற்றும் 'ராட்சசன்' படங்களை இயக்கிய ராம்குமார் இயக்கி உள்ள படம். விஷ்ணு விஷால் மற்றும் ராம்குமார் இணையும் மூன்றாவது படம் இதுவாகும்.

மமிதா பைஜு நாயகியாக நடித்துள்ளனர். இவர்கள் தவிர முனீஷ்காந்த், காயத்ரி ஆகியோரும் நடித்துள்ளனர். திபு நினன் தாமஸ் இசையமைத்துள்ளார். சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரித்துள்ளது. படத்தின் பணிகள் முடிந்து ரிலீசுக்கு தயாராகி உள்ளது. அடுத்த மாதம் வெளியாகும் என்று தெரிகிறது. படம் பற்றி இயக்குனர் ராம்குமார் கூறியிருப்பதாவது: என் முதல் படம் 'முண்டாசுப்பட்டி' காமெடி, சின்னதாக சோஷியல் மெசேஜுடன் பீரியட் பேன்டசியாக அமைந்த படம். இரண்டாவது படம் 'ராட்சசன்' த்ரில்லராக உருவானது. இந்த படம் காதலை பின்னணியாக கொண்டு உருவாகி உள்ளது. சமூக நீதியை மிகவும் முக்கியமாக நினைக்கிற ஒரு பெண்ணும், வாழ்க்கையை எப்போதும் கலகலப்பாக, ஜாலியாக எடுத்துக்கொள்ள விரும்பும் ஒரு பையனும் ஒரு புள்ளியில் சந்திக்கிறார்கள். முரண்பாடுகள் மிக்க இவர்கள் எப்படி காதலிக்கிறார்கள், ஒன்று சேர்கிறார்கள் என்பதுதான் படத்தின் கதை.

காதல் என்பதையே அறியாத ஒருவனுக்குக் கிடைக்கிற பெண்ணின் அன்பு அவனை எந்த அளவுக்கு மாற்றுகிறது, அதற்குப் பிறகு அவன் அந்தப் பெண்ணின் வாழ்க்கையை மாறுவதற்கு எப்படித் துணையாக இருக்கிறான் என்பதும் இதில் கதையாகிறது. வாழ்க்கையில் அன்பு கிடைக்கிற போது ஒவ்வொருவரும் எப்படியெல்லாம் மாற்றத்தை எதிர்கொள்ள முடிகிறது என்பதையும் இந்த படம் பேசுகிறது. என்றார்.



# 25வது நாளில் 66 கோடி வசூலித்த லவ் இன்சூரன்ஸ் கம்பெனி




விக்னேஷ் சிவன் இயக்கத்தில் அனிருத் இசை அமைப்பில் பிரதீப் ரங்கநாதன், கிரித்தி ஷெட்டி, எஸ்ஜே சூர்யா மற்றும் பலர் நடிப்பில் வெளிவந்த திரைப்படம் லவ் இன்சூரன்ஸ் கம்பெனி. இந்தப் படம் வெளிவந்து இப்போது 25 நாட்களை தொட்டுள்ளது. 25வது நாளில் 66 கோடியை வசூலித்துள்ளதாக தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

சுமார் 100 கோடி பட்ஜெட்டில் தயாரானதாக சொல்லப்பட்டுள்ள இப்படம் 66 கோடியை மட்டுமே வசூலித்துள்ளது. பிரதீப் ரங்கநாதன் நடித்து இதற்கு முன்பு வெளியான லவ்டுடே, டிராகன், டியூட் ஆகிய படங்கள் வரிசையாக 100 கோடி ரூபாய் வசூலை கடந்தன. ஆனால் இந்த படத்திற்கு 100 கோடி வசூலை கடக்க முடியாத ஒரு நிலையே ஏற்பட்டுள்ளது. வியாபார ரீதியாக இப்படம் ஒரு தோல்விப் பணம் என்று பாக்ஸ் ஆபீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படத்தின் தியேட்டர் ஓட்டம் ஏறக்குறைய முடிவு நிலைக்கு வந்துவிட்டது நேற்று இப்படம் ஓடிடி தளத்தில் வெளியாகி உள்ளது.

சின்னத்திரையில் வெற்றிகரமாக ஒளிபரப்பாகி வரும் சீரியல் சிறகடிக்க ஆசை. இந்த சீரியலில் சிந்தாமணியின் மகளாக நடித்து நல்ல வரவேற்பை பெற்றுள்ளார் நடிகை ப்ரீத்தி. இவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய லேட்டஸ்ட் புகைப்படங்களை பதிவு செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார். அந்த வகையில் தற்போது தனது பிறந்தநாள் கொண்டாட புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். சிறகடிக்க ஆசை சீரியல் நடிகை ப்ரீத்தி வெளியிட்டுள்ள புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.






### "பணிவே பண்பாடு"

பெருமை பேசித் திரியும்
உலகில் பணிவு என்றும்
பேசாமல் வெல்லும்!

மலர்கள் தலைகுனிந்து
நிற்கும் அதனால்தான்
மணமெங்கும் பரவும்!

மனிதன் தாழ்ந்து
நடக்கையில் மதிப்பு
அவனுக்குத் தானே
பெருகும்!

அறிவு சேர்ந்து அடக்கம்
சேராவிடில் அறிவும் அங்கே
வெறும் சுமைதான்!

பணிவு சேர்ந்த அறிவு
மட்டும் பாரினை வெல்லும்
சக்தியாகும்!

மலை போலுயர்ந்த மரங்கூட
முறியும் ஓர்நாள் சடுதியில்!

மெல்ல நெகிழும் புல் மட்டும்
நிலைத்திருக்கும்
சூறாவளியில்!

பணிவு என்பது பலவீனமல்ல
அதுவே உள்ளத்தின் வலிமை!

அதையணிந்த மனிதன்
என்றும் அடைவான்
உயர்வை வென்று!

பணிவே பண்பாடு என்றால்
அதுவே வாழ்வின் அழகு!



அதைக்காக்கும்
மனிதவாழ்வு
அற்புதம்
நிகழ்த்தும்
அணிவகுப்பு!

**முகில்தினகரன்**
கோயமுத்தூர்

### பிச்சையிலும் உதவி செய..!

பிச்சை யெடுக்குமாம்
பெருமாளு..! அதைத் தட்டிப்
பறிக்குமாம் அனுமாரு.!
பிச்சைப் புகினும்
கற்கை நன்றே.. என்பது
ஔவையின் மொழிபாரு!

பிச்சை எடுத்தும்
சத்தியம் காத்தது
அரிச்சந்திரன் வரலாறு.!
பிச்சையெடுத்தேனும் உதவி
புரிவது முன்னோர் நடந்த
வழிபாரு.!

தனக்கு மிஞ்சிதான் தானம்..
தருமம்.. என்பது தன்னல
மொழியாகும்!
தனக்குப் பசித்தாலும்
பிள்ளைக்கு ஊட்டும் தாயின்
அன்பின் குணமாகும்.!

இரைக்கிடைத்தாலும்
இல்லையென்றாலும் உறவை
நினைப்பது காக்கைகளாம்..
இரையாய் புழுவை வைத்தே
மீனைப் பிடிப்பது மனிதனின்
தந்திரமாம்!

கர்ணனைப்போல கவச
குண்டலத்தை தந்தது
அறத்தின் பண்பாகும்!
குசேலனுக்கு அவல்
பொரிக்காக.. கண்ணன்
தந்தது நிதியாகும்.!

இல்லையென்றாலும் நல்ல
வார்த்தைகள் தந்தது தமிழ்
பண்பாடாம்! தொல்லைகள்
ஏற்றும் தொடர்ந்து
ஏழைக்கு.. தந்து உதவுவதே
கடப்பாடாம்!

**வே.கல்யாண்குமார்.**



### அடுத்த தலைமுறைக்கு!

ஒரு முடிவு எடுத்து
இளைஞா... போராடுவோம்–
நாம் ஊரெங்கும் ஒன்றுபட்டு
வென்று காட்டுவோம்– நேற்று
இன்று ஆண்டவர்கள்
நம்மை மறந்து
விட்டாலென்ன?
எப்போதும் நம்முடன்
இருக்கும் ஆண்டவன்
நம்மை கைவிட மாட்டான்!

இளைஞனே எதிர்நீச்சலில்...
எதுவும் வரலாம் எனிந்த
வாழ்க்கையென்று
நினைப்பும் தரலாம்
ஆனாலும் தடையுடைத்து
முன்னேறு தடம் பதித்து
வரலாற்றில் தரணிக்கு
வீரத்தை சொல்ல!

சத்திய சோதனையில்...
சங்கடங்கள் வரலாம்
சாம்ராஜ்ய
போர்முனை
சில நேரம் சரிவுகள்
தரலாம்
இருப்பினும்
துணிவுடன்
ஆர்பரித்து எழு
அலையும் தாண்டி
கரை தனை சேரும்
படகாய்!

வாழ்ந்தது போதும்...
என்ற சலிப்பு எதற்கு?
வசந்தமே காணாத போது
வருத்தங்கள் எதற்கு?
வெற்றியை தொடும்
தருவாயில் யுத்தத்தின் மீது
வெறுப்பு எதற்கு?
நெருப்பாற்று நீச்சலில்
நீர் முதலை பயம் எதற்கு?

பட்டாம்பூச்சி பிடித்து...
விளையாட இது நேரமல்ல
நம் பரம்பரைக்கு வரலாறு
தேடாமல் படுத்து கிடப்பது
முறையல்ல நம் இனத்தில்
எவரும் கோழையல்ல
அடுத்த தலைமுறைக்கு
தரும் விடியலில் யாரும்
நாளை நம்மில் ஏழையல்ல!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்

### கண்ணீர் அஞ்சலி!

வானம்பாடியாய்....
கானம்பாடி பறந்த குயில்
கானகத்தில் உறைந்து
விட்டது

வசந்தத்தின் ரோஜா
வாழ்வை துறந்து விட்டது
வாடி உதிர்ந்து விட்டது

கோவில் புறா ஒன்று
கூடு விட்டு பறந்து விட்டது
குடும்பத்தை துயரில் விட்டது

காலை வரும் கதிரவனும்
கருப்பு தினத்தை தந்து
விட்டது
கண்ணீரில் மூழ்க விட்டது

அன்பு ராஜம் ஈன்றெடுத்த
ராஜ்ஜிய பெண்ணரசி
கடவுளோடு சேர்ந்து விட்டது

உன் ஜீவதுடிப்பு நின்றதும்
இயற்கை சிலையாகி விட்டது
கண்ணீர் கடலாகி விட்டது

உன் மறைவின் துயரில்
நினைவுகள் பாடமாகி விட்டது
எழில் மனம் ஓடமாகி விட்டது

மங்கையர் திலகம் மேரி
மண்ணில் மறைந்து விட்டது
மௌனத்தில் ஆழ்த்தி
விட்டது!

ஆழ்ந்த வருத்தத்துடன்
**கவிஞர்.புதுயுகம்**
பண்ணந்தூர்



### தூளி

தன் ரத்தத்தைப் பாலாக்கிக்
கொடுத்து தூங்க வைத்துச்
சென்ற அம்மாவிற்குப்
பின் ரத்தத்தைப் பாலாகக்
குடித்து தூக்கம் கலைத்துச்
செல்கிறது ஒரு கொசு
அம்மாவின் வாசனையில்



மீண்டும்
அப்படியே
தூங்கிப்
போகிறது
குழந்தை
அடுத்து
வரும்
கொசுவை மறந்து.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.



### ஹைக்கூ

அமாவாசை நாளில்
நிலவு எதிர் வீட்டுச்சன்னலில்

கடல் கரைக்கு அனுப்பும்
காதல் கடிதம் அலைகள்...

மரபுக் கவிதை எதிர்வீட்டு
சன்னலில் என்னவள்...

உயிரற்ற பொருளையும்
தாக்கியது வைரஸ் கணினி

ஒலியைவிட ஒளிக்கு
வேகம் அதிகம்
பார்வை போதும்

விதவை வானம்
மறுநாளே மறுமணம்
பிறை நிலவு

முகம் பார்க்க வேண்டும்
என்னவளே உன்
முகத்தைக் காட்டு....

மானம் காக்கும் மலர்
வானம் பார்க்கும் பூமியில்
பருத்திப்பூ

வண்ணம் மாற வில்லை
மழையில் நனைந்தும்
வண்ணத்துப்பூச்சி

வண்ணம் மாறியது
கட்சி தாவியது
அந்தி வானம்

கோடை மழை
குதூகலப் பயணம்
திரும்புமா? குழந்தைப்பருவம்.

சாலையில் கவனம்
வழியில் மரணக்குழி
செய்தியாகி விடுவாய்

சந்திரன் அல்லி
நான் அவள் காதல்

புத்தாடை நெய்தும்
நெசவாளி வாழ்க்கை
கந்தல்


தோற்றத்தை விட
குரல் அழகுகுயில்

ஏக்கத்தில் குழந்தை
உயரத்தில் பஞ்சுமிட்டாய்
வான் மேகம்.

ஆயத்தம் டயர் வண்டி ஓட்டி
நாளைய விமானி

பிறரின் உழைப்பில்
பிரகாசிக்கும்
சோம்பேறி முதலாளி

பறிக்க மனமில்லை
அழகாய் மலர்ந்தும்
விதைத்தது அவள்



பறக்காமல்
நில்
பிடிக்க ஆசை
பட்டாம்பூச்சி!

**கவிஞர்**
**இரா .இரவி**

### ஹைக்கூக்கள்

தீவிரமாய்த் தேடுகிறேன்/
இரு மழைகளுக்கு இடையே/
தென்பட்ட சூரியனை./

மறைந்து விட்டது/
மூன்றாம் மின்னல்
வெட்டுமுன்/ மழைவில்./

சூரியனை மறைத்த மேகம்/
நிலவையும் மூடிய பின்னரே/
பொழிகிறது மழை./

கோதாவரி வேகம் எடுத்திட/
விழுந்து உடைந்து ஓடுகிறது/
மேற்குத் தொடர்ச்சி மலை./

சிவாலயத்தில்/ குளிருக்கு
விடை கொடுக்கும்/
இளவேனில்./

நிலவற்ற இரவு/
மின்மினியின் வழி நடத்தலில்/
அடர் இருள்./

உறங்கும் சிறுவர்கள்/
எழுமுன் சமைக்க வேண்டும்/
ஒழுகும் இடங்களில்
பாத்திரங்கள்./

சிறகுகள் முளைப்பதற்குள்/
தீட்டப்படும் வண்ணங்களை/
கண்டு கொள்வதில்லை
பட்டாம்பூச்சிகள்./

நூல் இழையில் /தப்பியது/
கைப்பந்து வீச்சிலிருந்து/
சிலந்தி வலை./

மூலிகை மலை/ செடிகளின்
இருசொற் பெயரீட்டை./
அறியாமல் மேயும்
ஆடுகள்/

டிசம்பர் பூவின்/
மொட்டை ரசிக்கையில்/
மெல்ல மலர்கிறது



ஜனவரி/ சருகுகளை
மிதிக்காதீர்/
பட்டாம்பூச்சி கூட்டத்தை
வரைந்து/ கொண்டுள்ளேன்./

கடத்தப்பட்ட கடவுள்
நிறைவேறா வேண்டுதல்கள்
நிலுவையில்.

மழை இல்லா நாட்களில்/
நிரம்புவதில்லை நீர்நிலைகள்/
மற்றும் யாசகனின் பாத்திரம்./

ஜென் துறவியின்
வருகைக்காய்/ காத்திருக்கும்/
தியான நிலை ஆசனங்கள்./

தியான நிலை புத்தன்/
மேலேறி இறங்குகிறது/
வெயில்./

ஒளியில் கலந்த இருளை/
பிரித்தெடுக்க முயல்கையில்/
மீண்டும் மின்வெட்டு./


அணைந்த மெழுகுவர்த்தி/
வெளியேற வழியின்றி
தவித்திடும்/ அணைத்த
காற்று./

நடைப் பயிற்சி நேரம்/
குறைவதும் கூடுவதுமாய்/
உடல் பருமன்./



காட்டுத் தீ / குறித்து
எழுதுகையில்/சுடுகிறது
கை/

**முனைவர்**
**வே.புகழேந்தி,**
பெங்களுரு



பேசத்துடிக்கும்
அதே சமயத்தில்
பேசாத உன் மௌனமான
உதடுகளை கண்டேன்
பேசாமல் இருந்த போதும்
எனை பார்த்ததும்
கள்ளத்தனமாய்
மெல்லமாய் சிரித்து
தொலைத்தாய் ஏனோ
அன்றைய இரவு
உறக்கம் வரப் போவதுமில்லை
விடியப் போவதுமில்லை!

ஒரு பாட்டில் கிங் பிஸ்ஸர்
மதுபான போதையை
ஒத்தது கிறங்கடிக்கும்
உன் ஒரு துளி பார்வை!

உன் கிறங்கடிக்கும்
பார்வையில் மூழ்கி
முத்தெடுக்க முடியுமா என்ன?!

நீ மாயமும் செய்ய வில்லை
மந்திரமும் செய்யவில்லை
ஏனோ மதி மயங்கி
கிடக்கிறேன்–உன்
மயக்கும் காதலில்!

இதற்கு பிறகும் திருந்தாமல்
உன்னையே காதல் செய்ய
சொல்கிறது
திருந்தாத இதயம்!

கடவுளே இன்னும் கொஞ்சம்
வாழ வேண்டும் உறுதியாய்
மறதி வேண்டும்
மரணத்திலிருந்து விடுபட!
தப்பித் தவறி கூட
மீண்டுமொருமுறை
அவள் பற்றிய
நினைவுகள்
வந்து விட கூடாது!

உன்னை ஒருபோதும்
வெறுக்க மாட்டேன்–
ஆனால்
உன்னை பற்றிய நினைவுகள்
மட்டும் மனதிலிருந்து நீங்க
வேண்டும் ஏனெனில்
மரணம் என்னை
தழுவாமல் இருக்க!

உன்னை விட்டு
விலகுவதும் இல்லை
தூரம் செல்வதும் இல்லை
அந்த இரட்சகனை போல
என்றும் உன்னை காப்பேன்!

அதிகம் யோசிக்காதே
உன்னை நேசிக்க
எப்போதும் நானிருக்கிறேன்!

அந்த பொல்லாத
பார்வையின் மீது
என்ன இருக்கிறதோ
தெரியவில்லை போர்வை
மூடி படுத்தாலும் பாவை உன்
பக்கம் இழுக்கிறதே!

இதற்கு மேலும்
ஆசைப்படுவேன்
உன் காதலின் மீது!

ஜோதியாகிட வேண்டும்
உன் கண்களின்
பார்வைக்குள்!

நீ ஒருத்தி மட்டும் போதுமடி
இப்பிரபஞ்சத்தில்
நான் மகிழ்வாய் வாழ!

அவளில்லாத வாழ்க்கையில்
இப்பிரபஞ்சம்அழகற்றது
தான்!




அரக்கியே–எனை
அடக்கி ஆண்ட
பிறகும்–ஏனடி முறுக்கி
திரிகிறாய்?!

**லி.நௌஷாத் கான்**

## நூல் விமர்சனம்

நூல்: மடியேந்தும் நிலங்கள்
(ஹைக்கூ கவிதைகள்)
நூல் ஆசிரியர் :
கவிஞர் அய்யனார் ஈடாடி
நூல் மதிப்புரை:
கவிஞர் இரா.இரவி
வெளியீடு:அகநி பதிப்பகம்
3, பாடசாலை வீதி,
அம்மையப்பட்டு,
வந்தவாசி 604 408
திருவண்ணாமலை மாவட்டம்
பக்கங்கள் 64. விலை ரூ.60




நூலாசிரியர் கவிஞர் அய்யனார் ஈடாடி அவர்கள் கிராமிய மொழியில் ஹைக்கூ கவிதை விருந்து வைத்துள்ளார், அகநி பதிப்பகம் கவிஞர் மு. முருகேஷ் அவர்கள் சிறப்பான அணிந்துரை நல்கி உள்ளார். வட்டத்தின் பாதியை வரைய வா! என்று தலைப்பிட்டுள்ளார்,

பூக்கூடையில்அப்பாவின் முகம் தெரிந்தது சிரிக்கும் மலர்களில்! நூலில் முதல் ஹைக்கூ முத்தாய்ப்பாக அப்பாவின் முகத்தை சிரிக்கும் மலர்களில் பார்ப்பதை காட்சிப்படுத்தி உள்ளார். பாராட்டுகள். கழுத்தை நெறிக்கும் கத்திரி வெயில் கிழிந்த முகட்டு ஓலை! கோடை காலத்தில் கொளுத்தும் வெயில் காலத்தில் வீட்டு குடிசையில் ஓட்டை இருந்தால் அதன் வழியாக சூரியன் வந்து சுட்டெரிக்கும். வீட்டின் வறுமையை உணர்த்திடும் ஹைக்கூ நன்று. நார்கட்டிலில் உடம்பெல்லாம் அச்சுகள்அரைகுறை தூக்கம்! கிராமத்தில் பெரும்பாலும் நார்கட்டிலில் தான் ங்குவார்கள். நகரத்து மெத்தைகள் வாங்க பணம் இருப்பதில்லை. நார் கட்டிலில் படுப்பவர்களுக்கு உடம்பில் அச்சு விழும். தூக்கம் குறையும் என்பதை உணர்த்தி உள்ளார்.

கொப்புகள் ஒடிந்தன மூளியானது மரங்கள் சித்திரைச் சுழி! மரத்தின் கொப்புகள் காற்றின் காரணமாக முறிந்து விடுகின்றன. ஈடாடி மூளியானது மரங்கள் என்கிறார். கிராமத்து வழக்குச் சொற்கள் வைத்தே பல ஹைக்கூ கவிதைகள் வடித்துள்ளார்– கிராமத்து மொழி புரிந்தவர்களுக்கு மிக எளிதாக புரிந்து விடும். வியாபாரத்துக்கு சென்று வந்த பாட்டியின் சுருக்குப்பை அவிழ்க்கும் மழலையின் கை!

கிராமத்தில் பாட்டி வைத்திருக்கும் சுருக்குப்பையை அவிழ்த்து பணம் எடுக்கும் பேத்தியை படம்பிடித்துக் காட்டி வெற்றி பெறுகின்றார் நூலாசிரியர் கவிஞர் அய்யனார் ஈடாடி அவர்கள். கறவைக்காரர் வருகிறார் முண்டியடித்துக் குடிக்கும் இளங்கன்று வத்தும் பால் மாடு! பால் கறப்பவர் வருமுன்னே முண்டியடித்து இருக்கும் பாலை குடித்து விடுகிறது இளங்கன்று. பாலும் வத்தி விடுகின்றது. பசுவின் நிலையை எடுத்து இயம்பி உள்ளார்.

வெடித்து சிதறியது சிவகாசி வேட்டு முச்சந்தியில் சவம்! பிண ஊர்வலத்தின் போது வெடி போடும் பழக்கம் இன்றும் தொடர்கின்றது. சில நேரம் விபத்து கூட நேர்ந்து விடுவதுண்டு. கொஞ்சம் வயதான பிணம் என்றால் வேட்டுப் போட்டு அமர்க்களப்படுத்தி விடுவார்கள். அதனை உற்றுநோக்கி வடித்த ஹைக்கூ நன்றி.

வேட்டியை பறிகொடுத்தான் குளத்து மீன்களிடம் மீன்பிடி திருவிழா! மீன்பிடி திருவிழா என்றால் குளத்தில் போட்டிப் போட்டு ஒரே நேரத்தில் பலர் குதிப்பார்கள். இந்த தள்ளுமுள்ளுவில் ஒருவன் மீன் பிடிக்காமல். பிடிக்க வீசிய வேட்டியை பறிகொடுத்தான் என்ற நிலையை உணர்த்தி உள்ளார். வேட்டி நட்டமான வேதனையில் அவன். ஆனால் பலர் மீன்கள் பிடித்த மகிழ்ச்சியில் இருப்பர். இருப்பிடத்தை இழக்கிறது நெடிய கிருதுமா நதி அலங்கரிக்கும் நெகிழிகள்! ஆம். எங்கு பார்த்தாலும் நெகிழி மயம், நெடிய கிருதுமா நதியையும் விட்டு வைக்கவில்லை. பயன்படுத்திய நெகிழியை கண்டபடி வீசி மாசுபடுத்தி வரும் அவலத்தை ஹைக்கூவில் சுட்டி உள்ளார். பாராட்டுகள். வெட்டி வைத்த வாழைத்தார் ஊதிப் பழுக்கிறது.மூடிய உழவர் சந்தையால்! வாழைத்தார் வெட்டி வந்து வைத்து உள்ளனர். விற்க முடியாமல் உழவர் சந்தை மூடி இருப்பதால் அந்த வாழைத்தார்கள் ஊதி பழுக்கிறது. வீணாகிறது என்று வியாபாரியின் வேதனையை உணர்த்தி உள்ளார். சாக்கடையிலும் கூட தனியாக ஓடியது மேலத்தெருவும் கீழத்தெருவும்! சாக்கடை கூட இரண்டு தெருவும் ஒன்று சேரவில்லை. மனிதர்களைப் போலவே சாக்கடையும் பிரிந்து ஓடுகின்றன, மன ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளார். மேலத்தெரு, கீழத்தெரு மனிதர்கள் வேறுபாடு காட்டாமல் ஒன்றிணைய வேண்டும் என்ற ஆதங்கத்தை ஹைக்கூவின் மூலம் உணர்த்தி உள்ளார்.

முண்டி தவிக்கிறது நாக்கு பல்லிடுக்கினுள் சிக்கிய வெள்ளாட்டு எலும்பு! அசைவ உணவு உண்டு முடித்தபின்னர், எலும்பு பல் இடுக்கில் சிக்கி விட்டால் நாக்கு சும்மா இருக்காது. அதனை இயல்பாக சுட்டிக்காட்டியபடியே இருக்கும் குச்சி வைத்து அந்த எலும்பை அகற்றிட வைத்து விடும். அந்த நிகழ்வைக் கூட ஒரு ஹைக்கூவாக வடித்து விட்டார். சாயும் மரத்தின் இறுதி மூச்சு சடசட ரீங்காரம் மரம் வயதாகி சாயும் தருணத்தில் சடசட என சத்தமிட்டு சாயும். பெரிய காற்றும் சாய்த்திடும். அந்த சடசட சத்தத்தை இறுதி மூச்சு என்கிறார். நூலாசிரியர் கவிஞர் அய்யனார் ஈடாடி அவர்கள் பிறந்து வளர்ந்தது எல்லாம் கிராமம் என்பதால் கிராமத்தை உற்றுநோக்கி கிராமிய மொழியிலேயே ஹைக்கூ விருந்து வைத்துள்ளார். பாராட்டுகள்.




### "அன்பு மொழி கன்னல் போலே"

அன்பு மொழி கன்னல்
போலே அறுதி வரை
இனிமை தரும்?
உச்சரிக்கும் ஒவ்வோர்
சொல்லிலும் உயிரின் மணம்
உற்சாக ஊற்றே!

காற்றில் வீசும் மென்மை
போல கண்களில் ஒளி
தீண்டும்? அன்பு கலந்த
வார்த்தையால்
ஆத்திர மனமும் ஆறும்!

கன்னல் சாற்றுச் சுவையினை
காலம் கூட நின்று கேட்கும்!
அன்பு மொழித் தடவலிலே
ஆயிரம் காயம்
ஆறிப்போகும்!

வெறுப்புக் கொண்ட இதயம்
கூட வெயிலில் நிழல்
காணும்! அன்பு மொழி
உரைக்கும் நேரம்
வெறுப்பும் வழி மாறும்!

மனிதமனத்தை உருகச்
செய்யும் மாமந்திரம்
அன்பொன்றே! அன்பு மொழி
கன்னல்
போலே
அமுதம் தரும்
உயிர்க்கெலாம்!



முகில் தினகரன்
கோயமுத்தூர்

### "நேர்மையைக் காட்டி நிமிர்ந்திடு"

நேர்மையைக் காட்டி
நிமிர்ந்திடு!
இடர்கள் வந்தாலும்
தளர்ந்திடாதே!
உண்மை வழியில் நடந்திடு!
உலகம் மதிக்க வாழ்ந்திடு!

சின்னச் சோதனை வந்தாலும்
சிந்தையைச் சிதறவிடாதே!
சரிவுகள் சூழ்ந்தாலும்
நின்றாலும் சாய்ந்திடாதே...
ஓய்ந்திடாதே!

பொய்யின் ஒளி மின்னும்
நொடியில் பொருள் இருப்பது
போல தோன்றும்...
நேர்மையின் தீபம் ஏற்றினால்
நெஞ்சில் நிம்மதி குடியேறும்!

தூயமனம் தான்
துணையுனக்கு
நேயகுணம் தான்
நெறியுனக்கு நேர்மை பூசி
வாழும் வாழ்க்கை
நேற்றும் இன்றும் நாளையும்
வெல்லும்!

நேர்மையைக் காட்டி
நிமிர்ந்திடு, நேர்வழி மாறாது
வாழ்ந்திடு! உயர்வுகள்
தேடி வரும்? அயர்வுகள்
அதுவாய்க் கரைந்திடும்!

முகில் தினகரன்
கோயமுத்தூர்



மெல்ல அலர்த்திக் கொண்டு
நீ. இருளில் பரவும்
நட்சத்திர ஒளியாய்..
இசை கூட்டும் உன்
அதரங்களில் மீட்டப்பட்டு
என் மாடிப் புறாக்கள்
விழித்துப் பார்க்கின்றன..
பனித் துளிகள் மேல் படாமல்
என் பாதங்கள் சற்றே
ஓரடி உயரத்தில்..
என்னை இறக்கி விடு
கொஞ்சம்..
பூமியில்
எனக்கு
வேலைகள்
காத்துக்
கிடக்கின்றன..



ரிஷபன்




நிலவே வெள்ளி நிலவே
நீ ஒன்றும் புதிதல்ல
அன்று பார்த்தும்
இன்று பார்ப்பதும்
நாளை என்றில்லை
என்றும் பார்ப்பதும்
உன்னையே நிலவே

அழகுக்கு உன்னை
காதலிக்கு சொன்னேன்
பொம்மை போலும் உன்னை
குழந்தைக்கு சொன்னேன்
கோபத்தில் பெண் மனம்
தேய்பிறை ஆகிகிறது
அன்பொன்று கூடினால்
வளர்பிறை நிலவாகிறது
நிலவே நீயும் பெண்தானோ ?

மூன்றாம் பிறை அழகை
ரசிக்காத கண்கள்
கண்கள் ஆமோ?
பிறை அழகின் முழு அழகும்
கண் நிறையும் காட்சியன்றோ
இரு கண்கள் போதாதே
நிலவே உனைக்காண

மூன்றாம் பிறை ஓர் அழகு
முழு நிலவு அதனினும்
பெரும் அழகு காண கண்
கோடி வேண்டும்
பௌர்ணமி
முழு நிலவு
சித்திரை முழு
நிலவு
அழகுக்கு
அழகு பேரழகு



ஓம் குமார்
P N



### மரம் அது வரம்

பூமித்தாயின் கருவறையில்
வளர்ந்து வந்த அதிசயம்

கண்ணுள் அடங்கிய
விதையில் காத்திருக்கும்
அற்புதம்

மண்ணுள் மறைந்து
வாங்கிய நீரைத் தாங்கி
வான் முட்டி வளர்ந்து
வற்றாது வளம் தரும்

கிளை பரப்பி இலை
துளிர்த்து பூ விரித்து
காயும் கனியும் பரிசாக்கும்

உயிர் வளியை
உற்பத்தி செய்து
மூச்சுக்காற்றுக்கு மூலமாகி
உடல் வளர்க்க உணவாகி
நோய் தீர்க்க மருந்தாகி

பூச்சியும் புழுவும்
பறவையும் விலங்கும்
பாதுகாப்புக்குத் தேடி வரும்

தேடி வருவோர்க்கு
நிழல் தந்து
வெயிலின் கொடுமையை
உணர வைக்கும்

வைக்கும் மரத்தை விட
வெட்டும் மரம் அதிகமாக
வான் மழையின்
வளம் தடுக்கும்

கிடைக்கும் இடமெல்லாம்
துளிர்க்கும் வெட்டும்
மரமெல்லாம் தளிர்க்கும்

வெட்டும் கத்திக்கும் உடல்
தந்து உயிரைப் போக்கித்
தியாகியாகும்

மரத்தின் பயனை
நாடுகிறோம் வலியின்
துயரை யார் அறிவார்?

வெட்டும் மரத்தின்
வேதனையை
எட்டும் அறிவில் புரிந்து
கொண்டால்
மழையும்
என்றும்
பயனாகும்
மரமும் நமக்கு
வரமாகும்.



தமிழ்நிலா

### புகைப்படங்கள்

நிலை நிறுத்த
முடியாத நினைவுகளை
மறதியென்னும்
கருமேகங்கள்
மறைத்து விடாமல்
காக்கும் காட்சிகருவூலம்!


இறந்தகாலத்தை
தட்டி எழுப்பி
உயிர்ப்பித்து
புத்துணர்ச்சியூட்டும்
காகிதச்சுவடுகள்!

இயற்கை எழில்களை
இந்தச்செயற்கை
அணைக்கட்டுகள்
நிழலாய்த்தேக்கி வைத்து
திரைச்சீலையாய்
விரிக்கும் வியப்பே வியப்பு!

பதிவு
செய்யப்பட்ட
வசந்தகால
இனிய
நினைவுகள்
நிகழ்கால
விரக்திகளை
வீழ்த்தி
உற்சாகமளிக்கும்
வண்ணக்கலை
நயமாய்ப்புகைப்படங்கள்!



கவிஞர் த.அனந்தராமன்
துறையூர்



### கொஞ்சம் ஹைக்கூ..

இரவெல்லாம் எரிகின்றன
தெருவிளக்குகள்
வானில் நிலவு

(2) பெருக்குகையில் உதிர்ந்த
விளக்குமாறு கட்டுகையில்
தப்பிக்கின்றன எறும்புகள்.

(3) அரசு விடுமுறை
திட்டமிட்டுச் செய்வதற்குள்
கழியும் அரை நாள்.

(4) சாலையில் விபத்து
பத்து நிமிடங்கள்
பறக்கின்றன எல்லாம்.

(5) நல்ல வெயில்
நிற்கிறார்கள கரும்புச்
சாறுக்கு
டீக்கடையில் கூட்டம்.

(6) பெருமிதத்தில் காந்தம்
இரும்பை ஈர்ப்பதால்
காந்தமாகும் இரும்பு.

(7) உதிர்ந்த மலர்கள்
சருகுகளைப் பார்த்தபடி
அரும்பு விடுகிறது செடி.

(8) கதவிடுக்கில் நசுங்கிய
பல்லி யாருக்கு
கௌளி சொன்னதோ?

(9) குளிர் பானக்கடையில்
தாகம் தணியக் குடிக்கிறார்
முதியவர் தண்ணீரை.

(10) உதிர்ந்த சிறகு
இறந்த பறவையா?
பறந்த பறவையா?



ஹரணி தஞ்சாவூர்

# கோடைகாலத்தை சமாளிக்க....

## கூல் காபி வித் ஐஸ் கிரீம்





*சுட்டெரிக்கும் வெயிலை சமாளிக்க 'சில்'லென 3 ஐடியாக்கள்: வீட்டிலேயே அசத்தலாம் வாங்க!*

**கூல் காபி வித் ஐஸ் கிரீம்:**
பால் ஒரு கப்
இன்ஸ்டன்ட் காபித்தூள் 2 ஸ்பூன்
சர்க்கரை 1 ஸ்பூன்
சாக்லேட் சிரப் அலங்கரிப்பதற்கு
வெண்ணிலா ஐஸ்கிரீம் 2 கப்
ஐஸ் கட்டிகள் 1 ஸ்பூன்

காபித்தூள், பால், சர்க்கரை, ஐஸ்கட்டிகள் ஆகிய அனைத்தையும் மிக்ஸியில் போட்டு நன்கு அடித்துக்கொள்ளவும். பின்பு அதில் சாக்லேட் சிரப் மற்றும் ஐஸ்கிரீம் சேர்த்து குளிரக் குளிர பரிமாறவும்.

**கூல் கூல் ஷேக்:**
வெண்ணிலா ஐஸ்கிரீம் 4 ஸ்பூன்
இளநீர் வழுக்கை 1/2 கப்
பாதாம் பிசின் 4
குளிர்ந்த பால் 1 கப்
சர்க்கரை 2 ஸ்பூன்
ரோஸ் எசென்ஸ் 1 ஸ்பூன்

பாதாம் பிசினை ஒரு கிண்ணத்தில் போட்டு 2 மணி நேரம் ஊறவிடவும். இளநீர் வழுக்கையை சிறிது தண்ணீர் சேர்த்து மிக்ஸியில் நன்கு அரைக்கவும். அத்துடன் பால், சர்க்கரை இரண்டையும் சேர்த்து நன்கு அரைக்கவும். கடைசியாக ரோஸ் எசென்ஸ், 4 ஸ்பூன் வெண்ணிலா ஐஸ்கிரீம் இரண்டையும் சேர்த்து நுரை வரும் வரை அடிக்கவும்.

ஒரு டம்ளரில் முதலில் பாதாம் பிசின் 1 ஸ்பூன் போட்டு அடுத்ததாக அரைத்து வைத்ததை சேர்த்துவிடவும். கடைசியாக டம்ளரின் மேல் பகுதியில் ஒரு பக்கம் பாதாம் பிசின் 1 ஸ்பூன் , மற்றொரு பக்கம் வெண்ணிலா ஐஸ்கிரீம் 1 ஸ்பூன் போட்டு பரிமாற ஆஹா என்ன சுகம்! என்ன ருசி! அருமையான கூல் கூல் ஷேக் தயார்.

**மலாய் குல்பி:**
பால் 1/2 லிட்டர்
சர்க்கரை 2 ஸ்பூன்
ஏலப்பொடி 1/2 ஸ்பூன்
பாதாம், பிஸ்தா பொடித்தது 2 ஸ்பூன்

பாலை அடிக் கனமான பாத்திரத்தில் ஊற்றி மிதமான தீயில் வைத்து பாதியாக வற்றும் வரை சுண்டக் காய்ச்சவும். அதில் சர்க்கரை மற்றும் ஏலப்பொடி சேர்த்து மேலும் சிறிது நேரம் கொதிக்க விட்டு சிறிது கெட்டியானதும் அடுப்பை அணைத்துவிட்டு ஆறவிடவும்.

## பால் சேமியா ஃபலூடா





*வெயிலுக்கு இதமான விருந்து: பால் சேமியா ஃபலூடா & மாங்காய் ஐஸ்கிரீம்!*

கொஞ்சம் பாலும் சேமியாவும் இருந்தாலே வெயிலுக்கு ஜில்லுனு ஃபலூடா தயார் செய்யலாமா ... எப்படி தெரியுமா?

**பால் சேமியா ஃபலூடா**
**தேவையான பொருட்கள்:**
காய்ச்சி ஆறவைத்த பால் 2 கப்
சேமியா ¼ கப்
சப்ஜா விதைகள் 1 டீஸ்பூன்
ரோஸ் சிரப் அல்லது குல்கந்த் 2 டேபிள்ஸ்பூன்
சர்க்கரை 2 டேபிள்ஸ்பூன் (தேவைக்கேற்ப)
ஐஸ்கிரீம் (வெண்ணிலா / ஸ்ட்ராபெரி) 1 ஸ்கூப்
முந்திரி, பாதாம், உலர் திராட்சை 1 கப்

செய்முறை:

முதலில் சப்ஜா விதைகளை 10 நிமிடங்கள் தண்ணீரில் ஊறவைக்கவும். மிதமான தீயில் சேமியாவை வெறும் பாத்திரத்தில் வறுத்து எடுக்கவும்.

பின்னர் வறுத்த சேமியாவை ஒரு கப் பாலில் வேகவைக்கவும். மீதமுள்ள பாலில் சர்க்கரை சேர்த்து கரையவிடவும்.

பிறகு அதில் வேகவைத்த சேமியா மற்றும் ஊறவைத்த சப்ஜா விதைகளை சேர்க்கவும். அதன் மீது ரோஸ் சிரப் அல்லது குல்கந்த் சேர்த்து நன்றாக கலக்கவும். இந்த கலவையை குளிரவைக்கவும்.

பரிமாறும்போது, உயரமான கண்ணாடி டம்ளரில் ஊற்றி, மேலே ஒரு ஸ்கூப் ஐஸ்கிரீம் வைக்கவும். மேலும் முந்திரி, பாதாம், உலர் திராட்சை போன்றவற்றை தூவி, ஸ்ட்ராவுடன் பரிமாறலாம்.

**கச்சா மேங்கோ ஐஸ்கிரீம்**
**தேவையான பொருட்கள்:**
துருவிய மாங்காய் 1 கப்
பால் 1 கப்
விப்ட் க்ரீம் 1 கப்
சேமியா 2 ஸ்பூன்
சர்க்கரை 1 கப்
வெண்ணிலா எசன்ஸ் ¼ ஸ்பூன்

## பச்சை மிளகாய் ஐஸ்கிரீம்



*வித்தியாசமான காம்பினேஷனில் பச்சை மிளகாய் ஐஸ்கிரீம் செய்யலாம் வாங்க!*

பச்சை மிளகாய் ஐஸ்கிரீம் (Green Chilli Ice Cream) என்பது காரமும் இனிப்பும் கலந்த ஒரு வித்தியாசமான மற்றும் சுவாரஸ்யமான சுவை அனுபவமாகும். இதை வீட்டிலேயே எப்படி செய்வது என்பதற்கான எளிய முறை இதோ:

**தேவையான பொருட்கள்:**
பால்: 2 கப் (முழு கொழுப்புள்ள பால் சிறந்தது)
ஃப்ரெஷ் கிரீம்: 1 கப்
சர்க்கரை: 1/2 கப் (உங்கள் இனிப்புச் சுவைக்கேற்ப)
பச்சை மிளகாய்: 3 முதல் 4 (விதைகளை நீக்கியது)
வெண்ணிலா எசன்ஸ்: 1 தேக்கரண்டி (விருப்பப்பட்டால்)
மக்காச்சோள மாவு: 1 மேசைக்கரண்டி.

செய்முறை விளக்கம்:

மிளகாய் தயாரிப்பு: பச்சை மிளகாயைக் கீறி, அதிலுள்ள காரமான விதைகளை முழுமையாக நீக்கிவிடவும். பின் அதை மிகச் சிறிய துண்டுகளாக நறுக்கவும் அல்லது சிறிது பாலுடன் சேர்த்து விழுதாக அரைத்துக் கொள்ளவும். பாலை காய்ச்சுதல்: ஒரு கனமான பாத்திரத்தில் பாலை ஊற்றி மிதமான தீயில் காய்ச்சவும். பால் பாதியாக வற்றும் வரை கிளறவும். சர்க்கரை மற்றும் மாவு சேர்த்தல்: பாலில் சர்க்கரையைச் சேர்த்து கரைக்கவும். மக்காச்சோள மாவைச் சிறிது ஆறிய பாலில் கரைத்து, கொதிக்கும் பாலில் ஊற்றிக்கிளறினால் பால் திக்காக மாறும்.

# கோடை வெயிலை வெல்லலாம்! உடலை குளிர்ச்சியாக வைக்க 5 இயற்கை வழிமுறைகள்!

### கோடை வெயிலை வெல்ல 5 இயற்கை ரகசியங்கள்!



*பயன் (Value): "இந்தக் கட்டுரையை வாசிப்பதன் மூலம், விலையுயர்ந்த குளிர்பானங்களைத் தவிர்த்து, நம் வீட்டிலேயே இருக்கும் பொருட்களைக் கொண்டு உடல் வெப்பத்தை எப்படிக் குறைக்கலாம் என்பதையும், கோடை கால நோய்களில் இருந்து உங்களை எப்படிக் காத்துக் கொள்ளலாம் என்பதையும் அறிந்துகொள்வீர்கள்."*

**1. பான பானையில் ஊறிய வெட்டிவேர் குடிநீர்**

ஃப்ரிட்ஜ் தண்ணீரை விட, மண்பானை தண்ணீர் உடலுக்கு மிகச்சிறந்தது.

பயிற்சி: ஒரு மண்பானைத் தண்ணீரில் சிறிதளவு வெட்டிவேர் மற்றும் நன்னாரி வேர் போட்டு வையுங்கள்.

பலன்: இது உடல் சூட்டை உடனடியாகக் குறைப்பதோடு, ஒரு இயற்கை நறுமணத்தைத் தந்து மனதை அமைதிப்படுத்தும்.

**2. நுங்கு மற்றும் இளநீர்** *(The Natural Coolants)*

மேலும் கண்டறிக

இயற்கை நமக்காகவே இந்த மாதங்களில் கொடுத்திருக்கும் வரப்பிரசாதம் இவை.

பயிற்சி: வாரத்தில் 3 முறையாவது இளநீர் அல்லது நுங்கு சாப்பிடுங்கள்.

ரகசியம்: நுங்கின் மேல் இருக்கும் மெல்லிய தோலை நீக்காமல் சாப்பிடுவது வயிற்றுப் புண்களை (Ulcers) ஆற்றும்.

**3. வெங்காயமும் பழைய சோறும்** *(Probiotic Power)*

நமது முன்னோர்களின் ஆரோக்கிய ரகசியம் இது.

பயிற்சி: காலையில் 'நீராகாரம்' (பழைய சோறு தண்ணீர்) உடன் சின்ன வெங்காயம் சேர்த்துச் சாப்பிடுங்கள்.

பலன்: சின்ன வெங்காயம் உடல் வெப்பத்தை உறிஞ்சும் தன்மை கொண்டது. இது கோடை காலத்தில் ஏற்படும் அம்மை போன்ற நோய்கள் வராமல் தடுக்கும்.

**4. கற்றாழை ஜூஸ்** *(Aloe Vera)*

கற்றாழை ஒரு மிகச்சிறந்த 'ஹீட் அப்சார்பர்' (Heat Absorber).

பயிற்சி: சுத்தமான கற்றாழை ஜெல்லினை 7 முறை நன்றாகக் கழுவி, மோர் அல்லது பனங்கற்கண்டு சேர்த்து அரைத்துக் குடிக்கலாம்.

பலன்: இது பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல் மற்றும் உடல் எரிச்சலைச் சரி செய்யும்.

**5. வெளிப்பூச்சு – சந்தனம் மற்றும் கஸ்தூரி மஞ்சள்**

உடல் சூடு காரணமாக முகத்தில் பருக்கள் அல்லது வேர்க்குரு ஏற்படலாம்.

பயிற்சி: சுத்தமான சந்தனத்தை பன்னீரில் குழைத்து நெற்றி மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவலாம்.

பலன்: இது நரம்பு மண்டலத்தைக் குளிர்ச்சியாக்கி, நாம் ஏற்கனவே பேசிய அந்த "ஆழ்மன அமைதிக்கு" வழிவகுக்கும்.






















ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.








































**ATTENTION**

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடைடயோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

திருமுடிவாக்கம் அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு

**ஆட்கள் தேவை**

ஆண்கள் மட்டும்

வயது: 18 முதல் 35 வரை

கல்வி தகுதி
10 முதல் any Degree

தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
18,000 முதல் 22,000 /-

தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336

மெயில் : hrsarathagroup@gmail.com




**WANTED**

READYMADE SHOWROOM:
• Sales Man / Sales Girl

RESTAURANT:
• Briyani Master
• Chinese Master
• Atho Master
• Chef
• Helper

OTHER POSITIONS:
• Accounts
• Billing
• Internet Engineer

PLACE: T NAGAR, NAVALUR

CALL / WHAT'SAPP:
7550123560
6369528629


































## Special Invitation

to retired seniors housewives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity


- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்







## எல்லா புகழும் இறைவனுக்கே...

சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள், தங்கள் அனைத்து செல்வங்களையும் துரியோதனனிடம் பறிகொடுத்தார்கள். அப்போது கர்ணனை அழைத்த துரியோதனன், “கர்ணா.. இனி இவர்களின் அனைத்துச் சொத்துக்களும் நமக்கே சொந்தம். அக்னி பகவானின் பரிசாக அர்ஜுனன் பெற்ற காண்டீவ வில்லை இனி நீ எடுத்துக் கொள்..” என்றான். ஆனால் கர்ணனோ காண்டீவத்தை வாங்க மறுத்து விட்டான்.

“நான் எனது வலிமையிலும் திறமையிலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். அவற்றைக் கொண்டு அர்ஜுனனை வெல்வேன். தேவர்களின் அருளால் கிட்டிய இந்த வில் எனக்குத் தேவையில்லை..” என்று சொன்னான் கர்ணன்.

“ஆஹா.. நீயல்லவோ சுத்த வீரன்.. அர்ஜுனன் காண்டீவத்தை நம்புகிறான். நீ உன் திறமையை நம்புகிறாய்” என்று கர்ணனைத் துரியோதனன் பாராட்டினான்.
அர்ஜுனன் வனவாச காலத்தில் இந்தச் சம்பவத்தை வியாசரிடம் சொல்லி மிகவும் வருந்தினான். இதைக் கேட்டுச் சிரித்த வியாசர், “கர்ணன் காண்டீவத்தை வாங்க மறுத்ததற்கு வேறு காரணம் உள்ளது. அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை” என்றார்.
“அது என்ன?” என்று கேட்டான் அர்ஜுனன்.

“நேரம் வரும் போது சொல்கிறேன்” என்றார் வியாசர்.

பல ஆண்டுகள் கழிந்தன. மகாபாரத யுத்தம் முடிந்து, தர்மபுத்திரர் முடிசூடிய பின், கண்ணனைச் சந்திக்க அர்ஜுனன் துவாரகைக்குச் சென்றான்.

“அர்ஜுனா.. நான் எனது அவதாரத்தை முடித்துக் கொண்டு வைகுண்டம் செல்லவுள்ளேன். அதனால் எனது அரண்மனையிலுள்ள பெண்களை எல்லாம் நீ பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு இந்திரப்ரஸ்தத்துக்குச் சென்று விடு” என்று கூறினான் கண்ணன்.
கனத்த மனத்துடன் கண்ணனிடமிருந்து விடை பெற்ற அர்ஜுனன், தனது தேரில் பெண்களை அழைத்துக் கொண்டு சென்றான். வழியில் சில கொள்ளையர்கள் தேரை நிறுத்தி அர்ஜுனனைத் தாக்கினார்கள்.
அவர்களைப் பதிலுக்குத் தாக்குவதற்காகக் காண்டீவத்தை எடுக்க முற்பட்டான் அர்ஜுனன். ஆனால் அவனால் காண்டீவத்தைத் தூக்க முடியவில்லை. பற்பல பேரரசர்களை வீழ்த்தியவனும், யாராலும் வீழ்த்தமுடியாதவன் என்று போற்றப்படுபவனும், வில் விஜயன் எனப் பெயர் பெற்றவனுமாகிய அர்ஜுனனை அந்தச் சாதாரணத் திருடர்கள் வீழ்த்தி விட்டார்கள்.

தன் வாழ்வில் முதன்முறையாகத் தோல்வியைச் சந்தித்தான் அர்ஜுனன். அதுவும் சாதாரணத் திருடர்களிடம்.. வெட்கத்தால் தலைகுனிந்த நிலையில், இந்திரப்ரஸ்தத்துக்கு நடந்தான் அர்ஜுனன்.



அப்போது அவன் எதிரில் வந்தார் வேத வியாசர்.
“அர்ஜுனா.. நீயும் உன் சகோதரர்களும் பூமியில் இருந்து புறப்படுவதற்கான காலம் வந்து விட்டது. இப்போது நடந்த சம்பவம் அதை நினைவூட்டவே ஏற்பட்டது..” என்று கூறினார் வியாசர்.
“கண்ணனே புறப்பட்ட பின், நாங்கள் பூமியில் இருந்து என்ன செய்யப் போகிறோம். நாங்களும் புறப்படத் தாயார். ஆனால், என் மனதில் பெரும் ஐயம் எழுந்துள்ளது.. இதுவரை நான் காண்டீவத்தைப் பொம்மை போலக் கருதி அனாயாசமாகக் கையில் ஏந்தினேன். ஆனால் இப்போது அது மலை போல் கனமாக உள்ளது. என்னால் அதைத் தூக்க முடியவில்லையே.. என்ன காரணம்?” என்று கேட்டான் அர்ஜுனன்.

அதற்கு வியாசர், “உன்னால் இந்தக் காண்டீவத்தை நிச்சயமாகத் தூக்க முடியாது. கண்ணன் உன்னுடன் இருந்தவரை இந்தக் காண்டீவத்தை ஏந்துவதற்கான பலத்தை அவன் உனக்கு அளித்தான். அவனது அருளால் தான் நீ காண்டீவத்தைப் பொம்மை போலத் தாங்கினாய். இப்போது அவன் பூமியை விட்டுச் சென்று விட்டதால், இதை உன்னால் தூக்க முடியவில்லை!” என்றார். மேலும், “சூதாட்டத்தில் நீ காண்டீவத்தை இழந்த போது, அதைக் கர்ணன் வாங்க மறுத்தானே, ஏன் தெரியுமா? கண்ணனின் அருள் பெற்ற நீ காண்டீவத்தைத் தூக்கி விட்டாய். ஆனால் கண்ணனின் அருள் பெறாத கர்ணனால் இந்தக் காண்டீவத்தை அசைக்கக் கூட இயலாது. இது கர்ணனுக்கும் நன்றாகத் தெரியும். அந்தக் காரணத்தை வெளியே சொல்ல விரும்பாத கர்ணன், கௌரவமாகத் தான் சுத்த வீரன் என்றும் இந்த வில்லை நம்பித்தான் இல்லை என்றும் கூறிச் சமாளித்து, காண்டீவம் தனக்கு வேண்டாம் என்று கூறினான்” என்றார் வியாசர்.

இதிலிருந்து பலசாலிகள் என்று போற்றப் படுபவர்களுக்கும் கூட அந்த பலத்தைத் "திருமால்" தான் வழங்குகிறார் என்பதை நாம் உணர முடிகிறது.

இக்கருத்தை “ஸத்வம் ஸத்வவதாம் அஹம்” (பலசாலிகளின் பலமாக நானே இருக்கிறேன்) என்று கண்ணன் கீதையில் கூறுகிறான். இத்தகைய மகா பலத்தோடு கூடியவராகத் திருமால் விளங்குவதால் "“மஹாபல:" என்றழைக்கப்படுகிறார்.

## விசித்திர ஆசை

அந்தப் பெரியவர் பெரும் செல்வந்தர். எழுபத்தைந்து வயதிருக்கும். தீய பழக்க வழக்கங்கள் ஏதும் இல்லாதவர். இரக்க குணம் படைத்தவர்.

அநாதை ஆசிரமங்கள், மாற்றுத் திறனாளிகள் இல்லம், தொட்டில் குழந்தை, அபலைகள் மறுவாழ்வு, ஏழைகள் கல்வி போன்றவற்றிற்கு உதவுவதை வழக்கமாகக் கொண்டவர்.

அவர் ஒரு முறை கழிவறையில் வழுக்கி விழுந்து விட்டார். காலில் பலத்த அடி. அவரால் எழ முடியவில்லை. கதவை உட்புறமாய் தாளிட்டிருந்தார்.
சப்தம் கேட்டு மகன் வந்து கதவின் தாழ்ப்பாளை உடைத்துத் திறந்தார். அருகில் இருந்த நர்ஸிங் ஹோமில், பரிசோதனைகள் செய்து டிரிப்ஸ் ஏற்றி, வீட்டிற்குக் கொண்டு வந்தனர்.



அவருக்கு ஏற்கனவே புரொஸ்டேட் சுரப்பியில் வீக்கம். அதனால் அவசரமாய் சிறு நீர் கழிக்கும் உந்துதல் உண்டு என கண்டு பிடித்து சிகிச்சை அளித்தனர்.

தன் அந்திம காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்து மாநில, மத்திய நிவாரண நிதிகளுக்கு இயன்ற உதவிகள் செய்தார். ஐம்பது லட்சம் ரூபாயில் ஒரு அறக்கட்டளை உருவாக்கி, அதில் வரும் வட்டித் தொகை இயலாதவர்களுக்கு சேரும்படி நாணயமான முக்கியஸ்தர்களை நியமித்தார்.
அவர் மகனை அழைத்து தான் இறந்ததும், கடைசியாக தன் முகத்தைப் பார்க்க வரும் நண்பர்களை ஒரு ரிஜிஸ்டரில் பெயர், செல் எண் மற்றும் விலாசம் எழுதும்படி கேட்டுக் கொண்டார்.
அவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் செக் அனுப்பி வைக்கும்படி உத்தரவிட்டார்...
அதற்கெல்லாம் தனியாக பணம் வங்கியில் ஒதுக்கி இருப்பதாய் கூறினார்.
சேவிங்ஸ் அக்கவுண்டில் மகனை நாமினியாய் நியமித்திருந்தார்.
தகப்பனாரின் வினோத விருப்பங்கள் மகனைத் திக்கு முக்காட வைத்தது.
அவர் ஆசைப்படியே ஒவ்வொன்றையும் மிகவும் கவனமாய் நிறைவேற்றினார்.
ஒரே ஒரு குறை என்னவெனில், யார் யாரெல்லாம் தன்னைப் பார்க்க வருவார்கள் என தீர்க்கமாய் நம்பினாரோ, அவர்களில் ஓரிருவரைத் பலர் வரவே இல்லை.



## விடுகதை



| | |
|---|---|
| குண்டு ராஜாவுக்கு குடல் முழுக்க பல் அது என்ன? | மாதுளை |
| தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான் அவன் யார்? | தொலைபேசி |
| முறையின்றி தொட்டால் ஒட்டிக்கொண்டு உயிரை எடுப்பான் அவன் யார்? | மின்சாரம் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது அவன் யார்? | நிழல் |
| குண்டுச்சட்டியில குதிரை ஓட்டறான். | கரண்டி |
| அடிக்காமல்,திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்? | வெங்காயம் |
| பாலிலே புழு நெளியுது. அது என்ன? | பாயாசம் |



## ஜோக்ஸ்

- (1)"நம்ப மாப்பிள்ளை நம்ம ’அகிலாவை தங்கத் தாம்பாளத்துல வச்சு தாங்குவேன்’னு சொல்றாரு.. அப்படியே புல்லரிச்சுப் போச்சுங்க... உங்களுக்கு..?!".
*"அடி மண்டு.... சீர்வரிசையில பித்தளை தாம்பாளத்துக்கு பதிலாக...தங்கத்துல தாம்பாளம்... வேணும்னு பூடகமா கேட்கறாங்களோன்னு நானே பதறிப்போய் நிக்கறேன்..நீ வேற.."****

===================


(2)"கல்யாணத்தின் போது எம்மவளை குத்துவிளக்கு மாதிரி இருக்கான்னு சொன்னாங்க.. சந்தோசப்பட்டேன்... ஆனா இப்ப அதுக்கு வருத்தப்படறேன்’ அப்படீங்கறீங்களே என்னாச்சு..?"
*"அதை ஏன் கேட்கறீங்க.... அவளுக்கு குளியல் சோப்புக் கூட வாங்கித்தராம வெறும் உப்பும்..புளியும் தேய்ச்சி குளிக்க சொல்றாங்களாம்... சம்பந்தியம்மா.. அதனாலதான்..".
****

===================

*(3)"அந்த ஆர்கானிக் ஷாப் காரங்க ரொம்ப தில்லுமுல்லு பார்ட்டிங்க..னு எப்படி சொல்றீங்க.?".
*"அதை ஏன் கேட்கறீங்க... நேத்து ஒருகிலோ கொள்ளும்... ஒருகிலோ குதிரைவாலியும் பேக் பண்ணிகுடுங்கன்னு வாங்கிட்டு போய் வீட்ல பார்த்தா குதிரை வாலி மட்டும் தான் இருக்கு...திரும்பிவந்து கேட்டா... தனித்தனியா கொண்டுபோகலாம்ல... கொள்ளை குதிரை சாப்பிட்டு இருக்கும்னு...கூலா சொல்றாங்களே..".

===================

(4)"வெளிநாட்டுல இருக்குற பையனுக்கு பலகாரம் பண்ணி அனுப்புனியே... என்ன சொன்னான் போன்ல...பார்வதி.?".
*"என் தலைமுடி முப்பத்தாறு அங்குல நீளம் இருக்காம்... ஒண்டியா பராமரிக்க கஷ்டப்படுவ..ஒரு தடவை திருப்பதி போய் மொட்டை போட்டுட்டு வான்னு சொன்னான் ரேவதி.!".
*** *



# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## நரசிம்மர் வழிபாட்டின் அரிய தகவல்கள்

நரசிம்மர் என்றாலே மனித உடலும், சிம்ம முகமும் கொண்ட உக்கிர வடிவம் தான் அனைவரின் நினைவிற்கும் வரும். ஆனால் பக்தர்கள் அழைத்ததும் அடுத்த நொடியே ஓடி வந்து அருள் செய்யும் கருணாமூர்த்தி என்பது பலருக்கும் தெரியாது. நரசிம்மர் வழிபாட்டில் பலருக்கும் தெரியாத பல அரிய தகவல்களையும், நரசிம்மரின் அருளை பெற்றுத் தரும் சக்தி வாய்ந்த மந்திரங்கள் பற்றியும் இங்கே பார்க்கலாம்.



**நரசிம்ம மகா மந்திரம்:-**
ஓம் ஹ்ரீம் ஷௌமுகம் விரம்
மஹாவிஷ்னும்ஜ் வலந்தம்
ஸர்வதோமுகம்

நரஸிம்ஹம் பீஷணம்
பாத்ரம்மசிருத்யோர் மிருத்யம்
நமாம்யஹம்

பொருள்: கோபமும் தைரியமும் கொண்ட மகாவிஷ்ணுவே, உனது வெப்பமும் நெருப்பும் எங்கும் பரவுகின்றன. நரசிம்ம பகவானே, நீ எங்கும் இருக்கிறாய். நீ மரணத்தின் மரணம். நான் உன்னிடம் சரணடைகிறேன்.

**நரசிம்மர் பிரணாமம் மந்திரம்:-**
நமஸ்தே நரசிம்மாய,
பிரஹலாதாஹலாதா தாயினி
ஹிரண்யகசிபோர் பஹ்சாஹ
சிலா தன்க நகல்லயே
இதோ நர்சிம்ஹ பரதோ
நர்சிம்ஹோ, யதோ யதோ யமி
ததோ நர்சிம்ஹ,
பஹிர் நர்சிம்ஹோ ஹிருதயே
நர்சிம்ஹோ,
நர்சிம்ஹம் அதிம் சரணம்
பிரபாப்தே

பொருள்: ஹிரண்யகசிபு என்ற அரக்கனின் மார்பு போன்ற கல்லில் உளி போன்ற நகங்களைக் கொண்டு பிளந்து, பிரஹலாத மகாராஜாவுக்கு மகிழ்ச்சியைத் தருபவரான நரசிம்ம பகவானுக்கு நமஸ்காரம்.

நரசிம்மர் இங்கேயும் அங்கேயும் இருக்கிறார். நான் எங்கு சென்றாலும் நரசிம்மர் என்னுடன் இருக்கிறார். என் இதயத்தில் இருக்கிறார், வெளியிலும் இருக்கிறார். எல்லாவற்றுக்கும் பிறப்பிடமாகவும், பரம புகலிடமாகவும் இருக்கும் நரசிம்மரை சரணடைகிறேன்.

மிகவும் சக்தி வாய்ந்த இந்த மந்திரத்தை தொடர்ந்து உச்சரித்து வந்தால் தீராத கடன்கள், தீர்க்கவே முடியாத பிரச்சனைகள் ஆகியன தீரும். நெருக்கடியான, கஷ்டமான சூழ்நிலைகளில் இருந்து பாதுகாக்கும்.

**நரசிம்ம காயத்ரி மந்திரம் :-**
ஓம் நரசிம்ஹாய வித்மஹி
வஜ்ரநாகாய தீமஹி
தன்நோ சிம்ஹ பிரசோதயாத்
வஜ்ர நாகாய வித்மஹி
திக்ஷ்ண தாமஸ்த்ரயா தீமஹி
தன்நோ நரசிம்மஹ பிரசோதயாத்

**ஸ்ரீ நரசிம்ம மூல மந்திரம் :**
உக்ரம் விரம் மஹா- விஷ்ணும்
ஜ்வலந்தம் ஸர்வதோ முகம்
நர்ஸிம்ஹம் பீஷணம் பத்ரம்
மிருத்யுர் மிருத்யும் நமாம் யஹம்

இந்த மந்திரம் அனைத்து கவச மந்திரங்களுக்கும் முதன்மையான கவச மந்திரமாக கருதப்படுகிறது. இந்த மந்திரத்தை சிறிய தகடு அல்லது மரப்பட்டையில் எழுதி, மடித்து, துளசி இலைகள் அல்லது மலர்கள் வைத்து நரசிம்மரின் பாதத்தில் வைக்க வேண்டும். இதோடு 16 வகையான பொருட்களை வைத்து நரசிம்மரை வழிபட்ட பிறகு அர்ச்சகர் பிராண-பிரதிஷ்டை செய்து நரசிம்மரை இந்த கவசத்தில் எழுந்தருளும்படி செய்வார்.

**நரசிம்ம மந்திர பலன்கள் :-**
நரசிம்ம மந்திரங்கள் அனைத்துமே கவச மந்திரத்திற்கு சமமானவை. எவர் ஒருவர் உச்சரிக்கிறாரோ அவரை கவசம் போல் காக்கும். இந்த மந்திரங்களை தொடர்ந்து சொல்லும் போது அதன் ஆற்றலை, பக்தர்கள் கண்கூடாக காண முடியும். கடன் பிரச்சனை, பண நெருக்கடி, நெருக்கடியாத சூழல், எல்லா வித கஷ்ட நேரங்களிலும் காக்கும்.

## திருநாகேஸ்வரம்

திருநாகேஸ்வரம் ஸ்ரீ நாகநாதசுவாமி சிறப்பு அபிஷேகம், அலங்காரம்
அக்னி நட்சத்திர தோஷம் ஆரம்பம். திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் மலைக்கு புறப்பாடு. சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் புஷ்பப் பாவாடை தரிசனம். திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கொலு தர்பார் காட்சி. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் மூலவருக்கு திருமஞ்சன சேவை. கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதியில் ஸ்ரீகருடாழ்வாருக்குத் திருமஞ்சனசேவை.

திருவிடைமருதூர் ஸ்ரீ பிருகத்சுந்தர குசாம்பாள் சமேத ஸ்ரீ மஹாலிங்க சுவாமி, திருமயிலை ஸ்ரீகற்பகாம்பாள்சமேத ஸ்ரீகபாலீஸ்வரர், திருவான்மியூர் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ மருந்தீஸ்வரர், பெசன்ட்நகர் ஸ்ரீ அராளகேசி அம்பாள் சமேத ஸ்ரீ ரத்தினகிரீஸ்வரர் தலங்களில் காலை சிறப்பு சோமவார அபிஷேகம், அலங்காரம் வழிபாடு. நத்தம் வரகுணவல்லித் தாயார் சமேத ஸ்ரீ விஜயாசனப் பெருமாள் காலை அலங்கார திருமஞ்சன சேவை. கோவில்பட்டி ஸ்ரீ செண்பகவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ பூவண்ணநாதர் காலை பால் அபிஷேகம். திருச்சேறை ஸ்ரீ சாரநாதர் புறப்பாடு. திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஆண்டவர் பவனி. திருநாகேஸ்வரம் ஸ்ரீ நாகநாதசுவாமி சிறப்பு அபிஷேகம், அலங்காரம்.



## சங்கடங்கள் போக்கும் சந்திரசூடேஸ்வரர்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் அமைந்துள்ளது, மிகவும் பிரசித்தி பெற்ற மரகதாம்பிகை சமேத சந்திரசூடேஸ்வரர் திருக்கோவில். மலை மீது அமையப்பெற்ற சிவ தலங்களில் இதுவும் ஒன்றாகும். சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவிலில் இறைவன் சந்திரசூடேஸ்வரர் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.

**தல வரலாறு**
ஒரு சமயம் தர்மதேவர், தென் பெண்ணை ஆற்றங்கரையில் சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்தார். அவரின் தவத்தில் மகிழ்ந்த சிவபெருமான், தர்மதேவருக்கு காட்சி அளித்தார். அப்போது தர்மதேவர், தன்னை வாகனமாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார். அதன்படி தர்மதேவரை காளையாக மாற்றி தன்னுடைய வாகனமாக ஏற்றுக்கொண்டார், சிவபெருமான். மேலும் தர்மதேவர், தன்னுடைய வடிவில் ஒரு மலையை உருவாக்கி, அதில் உமாதேவியுடன் தாங்கள் எழுந்தருள வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார். சிவபெருமானும் ரிஷப வடிவில் 'விருஷபாசலம்' எனும் மலையை உருவாக்கி அங்கு தங்கினார்.

அந்த இடத்திற்கு உமாதேவியை அழைத்து வரவும் சிவபெருமான் ஒரு திருவிளையாடல் நடத்தினார். கயிலாயத்தில் பார்வதி தேவி இருக்கும்போது, சிவபெருமான் ஒளிவீசும் உடும்பு உருவம் எடுத்து அவர் அருகில் சென்றார். அந்த உடும்பை பார்த்ததும் பார்வதி தேவி, தன் தோழிகளுடன் அதைப் பிடிக்க துரத்தினார். ஆனால் அந்த அதிசய உடும்பானது அவர்களின் கைகளில் அகப்படாமல் காடு, மலைகளை கடந்து சென்றது. ஒரு கட்டத்தில் உடும்பின் வாலை பார்வதி பிடிக்க, அவரது உடல் பச்சை நிறமாக மாறியது.

இதற்கிடையில் பார்வதி தேவியுடன் வந்த தோழிகள், அவரை பிரிந்து காடு முழுவதும் அலைந்து திரிந்தனர். இதனால் தாகத்தால் வாடிய அவர்கள், பார்வதி தேவியை நினைத்து வேண்டினர். உடனே பார்வதி தேவி ஒரு குளத்தை உருவாக்கி அவர்களது தாகத்தை போக்கினார். பின்னர், தோழிகளுடன் பார்வதி தேவி அக்குளத்தில் நீராடினார். அப்போது அக்குளம் பச்சை நிறமாக மாறியது.

அந்த சமயத்தில் உடும்பு அருகில் இருந்த மலைமீது ஏறிச் செல்வதை கண்ட பார்வதிதேவி, அதைப் பின்தொடர்ந்தார். அப்போது, மலையில் தவம் இருந்த முத்கலன் என்ற முனிவர், அந்த உடும்பு செண்பக மரத்தில் ஏறியதைப் பார்த்து, உச்சாயணன் என்ற மற்றொரு முனிவரை அழைத்தார். அவர்கள் இருவரும் அந்த உடும்பை பிடிக்க முயலும்போது, அது மறைந்து போனது.

இதைப் பார்த்த பார்வதிதேவி, உடும்பு மறைந்ததற்கு முனிவர்கள் தான் காரணம் என்று நினைத்து அவர்கள் மீது கோபம் கொண்டார். உடும்பை பார்த்ததும் மற்றொருவரை அழைத்தவரை ஊமையாகும்படியும், அழைத்ததும் ஓடி வந்தவரை செவிடாகும்படியும், இருவரும் வேடுவ குலத்தில் பிறக்கும்படியும் சாபமிட்டார்.

சாபம் பெற்ற இருவரும் சாப விமோசனம் வேண்டி சிவபெருமானை வேண்டினர். அப்போது அங்கு தோன்றிய சிவன், "தர்மதேவருக்கு அளித்த வரத்தின்படி, உமாதேவியுடன் இங்கு தங்க வேண்டும் என்பதற்காக நான் நடத்திய திருவிளையாடலே இது. வேடுவ குலத்தில் பிறந்து, உடும்பாக என்னைக் காணும்போது உங்களது சாபம் நீங்கும்" என்று அருளினார். அதன்படி சாப விமோசனம் பெற்ற இரண்டு முனிவர்களும் இங்கு சிவபெருமானுக்கு இக்கோவிலை கட்டியதாக கூறப்படுகிறது.

**கோவில் அமைப்பு**
இக்கோவில் ஐந்து நிலை ராஜகோபுரத்துடன் மலை மீது கோவிலை அடைய சுமார் 200 படிகளை கடந்து செல்ல வேண்டும். தெற்கு நோக்கி அமைந்த ராஜகோபுரத்தை தாண்டி உள்ளே சென்றால், திருச்சுற்றின் வலதுபுறத்தில் ஜலகண்டேஸ்வரர் உள்ளார். இவர், தண்ணீர் தொட்டி போன்ற அமைப்பின் மத்தியில் காட்சி தருகிறார். மழை இல்லாத காலங்களில் தண்ணீர் தொட்டி போன்ற அமைப்பில் குடம் குடமாக தண்ணீர் ஊற்றி சிறப்பு வழிபாடு நடத்துகிறார்கள். இவ்வாறு 16 நாட்கள் தொடர்ந்து அவரை வழிபட்டால் விரைவில் மழை பொழியும் என்பது நம்பிக்கை.

இரண்டாம் திருச்சுற்றுக்கு வந்தால் அங்கு பலிபீடம், கொடிமரம், நந்தி ஆகியவை காணப்படுகிறது. அர்த்த மண்டபத்தின் இருபுறத்திலும் விநாயகர், முருகப்பெருமான் ஆகியோர் வீற்றிருக்கிறார்கள். கருவறையில் மூலவர் சந்திரசூடேஸ்வரர், சூரிய - சந்திர பிரகாசத்துடன் அருள்பாலிக்கிறார். இவர் செவிட நாயனார், உடையார் செவிடநாயனார், செவிடையாண்டவர் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

**மரகதாம்பிகை - துர்க்கை**
**மரகதாம்பிகை - துர்க்கை**

துர்க்கை கருவறை கோஷ்டத்தில் மகாகணபதி, ஸ்ரீகணபதி, தட்சிணாமூர்த்தி, பிரம்மன், துர்க்கை ஆகியோர் உள்ளனர். கருவறைக்கு இடதுபுறம் மரகதாம்பிகை அன்னை தனிச்சன்னிதியில் அருள்பாலிக்கிறார். இவர் நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். அம்பிகை மூக்குத்தியுடன், பின்னல் சடை, குஞ்சத்துடன் வீற்றிருப்பது அற்புத காட்சியாகும். இவர் பச்சையம்மன், பர்வதம்மன் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறார். அன்னைக்கு முன்பாக ஸ்ரீசக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆடி வெள்ளி, தை வெள்ளி, நவராத்திரி நாட்களில் ஸ்ரீசக்கரத்தின் முன் சண்டி ஹோமம் நடைபெறும்.

திருமாளப்பத்தி மண்டபத்தின் கிழக்கில் சந்திரன், இந்திரன், அக்னி பகவான் ஆகியோரும், தெற்கில் எமன், அறுபத்துநால்வர், சப்தமாதர்கள் ஆகியோரும் காணப்படுகிறார்கள். மேற்கில் உற்சவர், ராஜகணபதி, வருண பகவான், சரஸ்வதி, கஜலட்சுமி, வள்ளி -தெய்வானை சமேத முருகப்பெருமான் ஆகியோரும், வடக்கில் குபேரர், 16 லிங்கங்கள், பஞ்சலிங்கங்கள், வீரபத்திரர், கால பைரவி, சூரியன், சண்டிகேஸ்வரர், நவக்கிரகங்கள் ஆகியோரும் தனித் தனிச் சன்னிதியில் வீற்றிருக்கிறார்கள்.

கோவிலில் இருக்கும் உற்சவ மூர்த்தி, உமாதேவி மற்றும் முருகப்பெருமானுடன் சோமாஸ்கந்தராக காட்சி அளிக்கிறார். கோவில் தல விருட்சமாக வில்வ மரமும், தல தீர்த்தமாக 'மரகதசரோவம்' எனப்படும் பச்சைக் குளமும் உள்ளன. கோவிலுக்கு செல்லும் மலைப் பாதையில் காளி காம்பாள் சமேத காமாட்சீஸ்வரர் கோவிலும் உள்ளது.

**வழிபாடு**
இங்குள்ள சந்திரசூடேஸ்வரரை தொடர்ந்து வழிபட்டு வந்தால் உடல் நோய்கள் நீங்கி, மன நிம்மதி கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. குழந்தை வரம் வேண்டுபவர்களுக்கும், குடும்பம் சகல ஐஸ்வர்யத்துடன் இருப்பதற்கும் பக்தர்கள் ருத்ரா அபிஷேகம் செய்து வழிபடுகிறார்கள். இங்குள்ள வில்வ மரத்தில் தொட்டில் கட்டி வழிபடுபவர்களுக்கு விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்கிறார்கள். கடன் தொல்லையில் இருந்து விடுபடவும், வேலைவாய்ப்பு கிடைக்கவும் இங்கு வந்து வழிபட்டு செல்கிறார்கள்.

சுவாமிக்கு நல்லெண்ணெய், பால், தயிர், பழச்சாறு, இளநீர், பஞ்சாமிர்தம், சந்தனம், பன்னீர், திருநீர் ஆகியவற்றால் அபிஷேகம் செய்கிறார்கள். கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளில் சங்காபிஷேகம், கலசாபிஷேகம் செய்யப்படுகிறது. இக்கோவிலில் மகாசிவராத்திரி, ஆருத்ரா தரிசனம், பங்குனி தேர்த் திருவிழா போன்றவை வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது.

**அமைவிடம்**
பெங்களூரு - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஓசூர் நகரின் மத்தியிலேயே சந்திரசூடேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. கிருஷ்ணகிரியில் இருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் இக்கோவில் உள்ளது.



## திருப்பதியில் பக்தர்கள் 28 மணி நேரம் காத்திருந்து தரிசனம்



திருப்பதிக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் காலை முதல் பக்தர்கள் தரிசனத்திற்கு வந்த வண்ணம் இருந்தனர். பக்தர்கள் அதிக அளவில் வந்ததால் பக்தர்களை தங்க வைத்து தரிசனத்திற்கு அனுப்பப்படும் வைகுந்தம் அறைகள் மற்றும் நாராயணகிரி கொட்டைகைகளில் வரலாறு காணாத அளவு பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. திருப்பதி மலை முழுவதும் எங்கு பார்த்தாலும் பக்தர்கள் கூட்டமாக காணப்படுகிறது.

பக்தர்கள் தரிசனத்திற்கு அதிக அளவில் வந்ததால் விஐபி பரிந்துரை கடிதங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. நேரடியாக வரும் விஐபிகளுக்கு மட்டும் தரிசனம் வழங்கப்படுகிறது. இதனால் சாதாரண பக்தர்கள் விரைவில் தரிசனம் செய்ய முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிக அளவில் பக்தர்கள் வாகனங்களில் வந்ததால் அலிபிரி சோதனை சாவடியில் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கின. திருப்பதியில் வெயில் அளவு அதிகரித்து காணப்படுவதால் தரிசனத்திற்கு வரிசையில் காத்திருக்கும் பக்தர்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். திருப்பதி தேவஸ்தானம் சார்பில் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், உணவு, மோர், குளிர்பானங்கள் வழங்கப்படுகிறது.

திருப்பதியில் நேற்று 91,005 பேர் தரிசனம் செய்தனர். 36 257 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ. 3.37 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 28 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

## பல நூறு ஆண்டுகளாக அணையாத 9 தீபங்கள்

இமாசலபிரதேச மாநிலத்தின் காங்ரா மாவட்டத்தில் உள்ளது. ஜுவாலாமுகி நகரம். இங்கே காங்ரா பள்ளத்தாக்கில் சிவாலிக் மலைத்தொடரின் மடியில் 'காளிதர்' என்ற பகுதியில் ஜுவாலாமுகி திருக்கோவில் இருக்கிறது. இது அம்மனின் 51 சக்தி பீடங்களில் ஒன்று.

புராணத்தின்படி, தட்சனின் யாகத்தின்போது தன்னை மாய்த்துக்கொண்ட அம்பாளின் உடல் பாகங்கள் இந்தியா முழுவதும் சிதறி விழுந்தன. அதில் அன்னையின் நாக்கு விழுந்த இடம் இதுவாகும். இந்த ஆலயம், மகாபாரத பஞ்ச பாண்டவர்களால் கட்டப்பட்ட முதல் கோவில் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.

எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் 9 தீச்சுடர்களின் காரணமாக, இந்த ஆலயம் தனித்துவம் பெற்று விளங்குகிறது. இந்த ஆலயத்தில் அம்மனுக்கு சிற்பமோ, படமோ கிடையாது. எப்போதும் அணையாமல் எரிந்துகொண்டிருக்கும் 9 தீபச்சுடர்களே அன்னையின் உருவமாக போற்றி வணங்கப்படுகின்றன.

இந்தக் கோவிலின் அடிப்பகுதியில் பாறைகள் இருக்கின்றன. அந்தப் பாறைகளில் உள்ள 9 துளைகளின் வழியாகத்தான் தீச்சுடர்கள் எரிகின்றன.

ஒரு காலத்தில், பாறைகள் வெளியே தெரியும்படி அமைந்திருந்தன. பின்னர் தீபச்சுடரைச் சுற்றிலும் தாமிரம், வெள்ளியைக் கொண்டு சன்னிதி அமைத்தனர். சில தீபச் சுடர்களுக்கு மேல், தங்க முலாம் பூசப்பட்ட விமானங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த 9 தீபச்சுடர்களும் நவ துர்க்கைகளாகவும் வழிபடப்படுகின்றன. இதில் பிரதானமான சுடரை, மகா காளியாகவும், மற்றவற்றை அன்னபூரணி, சரஸ்வதி, லட்சுமி உள்ளிட்ட 8 தெய்வங்களாகவும் பக்தர்கள் வழிபடுகின்றனர்.



ஒன்பது தீபச்சுடர்களுக்கும் தினமும் 5 முறை ஆரத்தி காண்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் முதல் ஏப்ரல் வரையிலும், செப்டம்பர் முதல் அக்டோபர் வரையிலும் நவராத்திரி கொண்டாட்டத்தின்போது இங்கு வண்ணமயமான கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்த ஆலயத்துக்கு அடியில் இருக்கும் பாறைகளுக்குள் மீத்தேன் வாயு இருப்பதாகவும், அது 9 துளைகளின் வழியே வெளியேறும்போது ஆக்சிஜனோடு கலந்து, ரசாயன மாற்றத்தால் தீச்சுடர் உண்டாவதாகவும் கூறப்படுகிறது.

1970-80-களில் இந்த ஆலயத்தைச் சுற்றிலும் சுமார் 3 ஆயிரம் மீட்டருக்கு, பள்ளம் தோண்டி அந்த இடத்தில் தீப்பற்றும் வகையிலான வாயு இருக்கிறதா என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்தனர். அப்படி இருந்தால், அதை நாட்டின் பொருளாதாரத்துக்கு பயன்படுத்தலாம் என்று நினைத்தனர். ஆனால் ஆலயத்தைச் சுற்றி அப்படி எதுவும் இல்லை. எனவே ஆலயத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள பாறைகளுக்குள் மட்டுமே வாயு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் முடிவுக்கு வந்தனர்.

பல நூறு ஆண்டுகளாக அணையாமல் எரிந்துகொண்டிருக்கும் இந்த தீச்சுடர்களுக்கு காரணம், அன்னையின் அற்புத சக்தியே என்று பக்தர்கள் அறுதியிட்டு நம்புகின்றனர்.

# "இடையூறு செய்யும் ஆளுநரை எதிர்க்கும் துணிவு விஜய்யிடம் உள்ளதா?" - ஆளூர் ஷாநவாஸ்



சென்னை, மே 08:

'தனிப்பெரும் கட்சியாக தவெக வந்த பிறகும், ஆட்சி அமைக்க இடையூறு செய்கிறார் ஆளுநர். ஆளுநரை எதிர்ப்பது என்பது பாஜகவை எதிர்ப்பதாகும். அதற்கு கொள்கை உறுதியும் துணிவும் வேண்டும். அது உள்ளதா விஜய்யிடம்?' என விசிக முதன்மைச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தனிப்பெரும் கட்சியாக தவெக வந்த பிறகும், ஆட்சி அமைக்க இடையூறு செய்கிறார் ஆளுநர். இதைக் கண்டிக்க அஞ்சுகிறது தவெக.

இதுவே 108 எண்ணிக்கை திமுகவிடம் இருந்து, ஆளுநர் இப்படி இழுத்தடித்தால் என்ன நடந்திருக்கும்? சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின் போது ஆர்.என்.ரவிக்கு நடந்தது போல் நடந்திருக்கும்.

ஆளுநரை எதிர்ப்பது என்பது பாஜகவை எதிர்ப்பதாகும். அதற்கு கொள்கை உறுதியும் துணிவும் வேண்டும். அது உள்ளதா விஜயிடம்?' எனத் தெரிவித்துள்ளார்

# "பாஜகவுக்கு எதிராக பேசாத விஜய் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை"

## காங்கிரஸ் எம்.பி தடாலடி



திருச்சி, மே 08:

பாஜகவுக்கு எதிராக பேசாத விஜய் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. அதே நேரத்தில் தவெகவிற்குள் பாஜக நுழைந்து விடக்கூடாது என்பதற்காக நாங்கள் ஆதரவு தெரிவித்துள்ளோம் என்று திருச்சியில் காங்கிரஸ் எம்பி கிறிஸ்டோபர் திலக் கூறினார்.

திருச்சியை சேர்ந்த காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளருமான எம். கிறிஸ்டோபர் திலக், திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் புதிய அரசு அமைவதில் அடுத்த இரண்டு நாட்களில் ஒரு தெளிவு பிறக்கும். அடுத்த 10 நாட்களுக்குள் புதிய அரசு பொறுப்பேற்கும் எனவும் நம்புகிறேன்.

தவெகவிற்கு 35% வாக்குகளும், திமுகவிற்கு 30% வாக்குகளும் கிடைத்துள்ளது. இது பாஜகவுக்கு எதிரான மக்களின் மனநிலையை காட்டுகிறது. பாஜக தமிழகத்தில் காலூன்றகூடாது என்ற நோக்கில் மக்கள் வாக்களித்துள்ளனர்.

மதச்சார்பின்மையை பாதுகாக்கும் அரசு அமைய வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை தவெகவுக்கு வழங்கியுள்ளது. பாஜக காலூன்ற இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக காங்கிரஸ் கட்சி இந்த முடிவை எடுத்துள்ளது. காங்கிரஸ் சேர்ந்ததால் தவெகவிற்குள் பாஜகவால் நுழைய முடியாது. பாஜகவை எதிர்த்து விஜய் ஏன் பேசவில்லை என்று நீங்கள் அவரிடம் தான் கேட்க வேண்டும்.

நாங்கள் தவெகவை நம்பவில்லை. அதே நேரத்தில் பாஜகவிற்கு எதிராக மக்கள் தவெகவிற்கு வாக்களித்து உள்ளதால் நாங்கள் அங்கு சேர்ந்துள்ளோம். தாங்கள் மதச்சார்பின்மைகொள்கையில் உறுதியாக இருக்கிறோம் என தெரிவிக்க வேண்டியது தவெகவினரின் கடமை.

ராகுல் காந்தியின் அடிப்படை நோக்கம் பாஜகவின் நகர்வுக்கு முன் நாம் முந்திக் கொள்ள வேண்டும் என்பதுதான். தமிழ்நாட்டை பாஜக சின்னாபின்னமாக்க வேண்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதை தடுக்கவே நாங்கள் தவெகவிற்கு ஆதரவு தெரிவித்துள்ளோம்.

அதை சரியாக பயன்படுத்த வேண்டியது தவெகவின் கடமை. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி கட்சி வாக்குகள் மூலமாகத்தான் திமுகவில் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றார்கள். அதுபோல நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலிலும், உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட வெற்றிபெற்ற அனைவரும் கூட்டணி கட்சி வாக்குகள் மூலமாகத்தான் வெற்றி பெற்றுள்ளார்கள்.

ஆளும் கட்சியாக இருந்து தேர்தலை சந்தித்த திமுக வேட்பாளர்கள் பெருமளவில் பணம் செலவழித்து தான் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஆனால் விஜய் கட்சியில் உள்ளவர்கள் பெரும் செலவு செய்து போட்டியிடவில்லை. ஒரு சிலரை தவிர விசில் சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் யார் என்பது கூட மக்களுக்கு தெரியது. ஆனாலும் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள்.


இதனால் செலவு செய்த பணத்தை திரும்ப எடுக்க வேண்டிய நிலை அவர்களுக்கு இல்லை. எனவே இது ஊழலுக்கு வழிவகுக்காது. இதேபோல, ஆளும் கட்சியாக இல்லாத காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களும், பொருள் செலவு செய்யாமல் வெற்றி பெற்று இருக்கிறார்கள்.

தமிழகத்தில் பாஜக காலூன்றி விடக்கூடாது என்பதற்காகதான் ஸ்டாலின் கடந்த 5 ஆண்டுகளாக அரசியல் செய்தார். அதே போன்றுதான் காங்கிரஸூம் தற்போது இந்த முடிவை எடுத்துள்ளது. நாடாளுமன்ற தேர்தலுக்குள் ஏதேனும் குழப்பங்களை ஏற்படுத்தலாமா? என பாஜக முயற்சித்து வரும் நிலையில், அதனை முறியடிக்கும் விதமாகத்தான் காங்கிரஸ் இந்த முடிவை எடுத்துள்ளது.

ஒரு நடிகருக்கான ரசிகர்கள் பட்டாளம் மற்றும் அரசுக்கு எதிரான மக்கள் நிலைப்பாடு போன்றவையும் தவெக வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. ஒரு "சீன் கிரியேட்" பண்ண வேண்டும் என்பதற்காக தான் ரஜினியும் ஸ்டாலினை சந்தித்து பேசியுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.


# குரும்பூரில் பிரபல ரவுடியை துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தது போலீஸ்!!



தூத்துக்குடி, மே 08:

திருச்செந்தூர் அருகே குரும்பூரில் பிரபல ரவுடியை துப்பாக்கியால் போலீஸ் சுட்டுப் பிடித்தது. போலீசார் பிடிக்க முயன்றபோது தாக்கிவிட்டு தப்ப முயன்ற பிரபல ரவுடி மரிய அந்தோனி ஆக்னல் சுட்டுப் பிடிக்கப்பட்டார். மரிய அந்தோனி ஆக்னல் மீது கொலை, கொலை முயற்சி உள்பட 26 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

# சொந்த ஊருக்கு திரும்பிய வழியில், நீரோடையில் குளித்த 3 இளைஞர்கள் பலி!!



தெலங்கானா, மே 08:

நண்பரின் திருமணத்திற்கு சென்று விட்டு சொந்த ஊருக்கு திரும்பிய வழியில், நீரோடையில் குளித்த 27 வயதான பிரசாந்த், விகாஸ், ஆனந்த் ரெட்டி ஆகிய 3 இளைஞர்கள் உயிரிழந்தனர். நீரோடையின் ஆழத்தை கணிக்க முடியாததால், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்

# திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கூட்டணிக் கட்சி தலைவர்கள் சந்திப்பு!!



திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கூட்டணிக் கட்சி தலைவர்கள் சந்தித்தனர். மு.க.ஸ்டாலினுடன் வி.சி.க. தலைவர் திருமாவளவன், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம், இந்திய கம்யூ. மாநிலச் செயலாளர் வீரபாண்டியனும் சந்தித்தனர். ஆழ்வார்பேட்டை இல்லத்தில் கூட்டணி கட்சித் தலைவர்களுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வருகிறார்.

# "ஜல்லிக்கட்டு போராட்டம் போல் மெரீனாவில் கூடுவோம்".. சமூகவலைதள பதிவுகளால் காவல்துறை நடவடிக்கை





சென்னை, மே 08:

தவெக தலைவர் விஜய்யை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்காத சூழ்நிலையில் சமூக வலை தளங்களில் ஜல்லிக்கட்டு போராட்டம் போல மெரீனாவில் போராட்டம் வெடிக்கும் என்ற தகவல்கள் பரவி வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு மத்திய உளவுத்துறையும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் மெரீனா கடற்கரை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் போலீஸ் குவிக்கப்பட்டு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது . உழைப்பாளர் சிலை இருந்து கலங்கரை விளக்கம் வரை ரோந்து பணி தீவிரப்படுத்தப்பட்டு மெரீனா சர்வீஸ் சாலைக்குள் செல்லும் வாகனங்கள் அனைத்தும் போலீசார் சோதனைக்கு பிறகே அனுமதிக்கப்படுகிறது .

2 காவல் உதவி ஆணையர்கள் தலைமையில் 8 காவல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட சுமார் 400 போலீசார் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது .குறிப்பாக ஜல்லிக்கட்டு போராட்டத்திற்கு பிறகு மெரீனாவில் போராட்டம் நடத்த வருபவர்கள் எங்கிருந்து வருவார்கள் என்பதை போலீசார் கண்டறிந்து வைத்து அங்கு கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது.

கண்ணகி சிலை பேருந்து நிலையம், மற்றும் கண்ணகி சிலை பின்புறம் சர்வீஸ் சாலை, விவேகானந்தர் இல்லம் எதிரே உள்ள பிளாட்பாரம், டாக்டர் பெசன்ட் சாலை சந்திப்பு, சர்வீஸ் சாலை மாற்றுத்திறனாளிகள் மரம் பாதை, ப்ளூ பிளாக் பீச் நுழைவு சர்வீஸ் சாலை, ஔவையார் சிலை பின்புறம் உள்ள சர்வீஸ் சாலை, விபி ராமன் சாலை சந்திப்பு, காந்தி சிலை பின்புறம் உள்ள சர்வீஸ் சாலை, கலங்கரை விளக்கம் நுழைவு வாயில், லூப் சாலை உள்ளிட்ட பகுதிகளில் போலீசார் கூடுதலாக குவிக்கப்பட்டு கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் முன்னெச்சரிக்கை யாக நடவடிக்கையாகசென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகம், திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் , பாஜக தலைமை அலுவலகமான கமலாலயத்திலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




# தமிழகம் முழுவதும் உள்ள அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர விண்ணப்பிக்கலாம் கல்லூரிக் கல்வி ஆணையர்



சென்னை, மே 08:

தமிழகம் முழுவதும் உள்ள 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர இன்றுமுதல் மாணவர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பாக கல்லூரிக் கல்வி ஆணையர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 2026-27-ம் கல்வி ஆண்டில் இளங்கலை பட்டப் படிப்பு முதலாம் ஆண்டில் சேர மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. இதற்கு www.tngasa.in என்ற இணையதளத்தில் இன்று முதல் 29ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

இணையதள வசதி இல்லாத மாணவர்கள் விண்ணப்பிக்க ஏதுவாக, அனைத்து அரசு கலை, அறிவியல் கல்லூரிகளிலும் சேர்க்கை உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.50. எஸ்சி, எஸ்டி மாணவர்கள் விண்ணப்பக் கட்டணம் (ரூ.48) செலுத்த தேவையில்லை. பதிவுக் கட்டணம் ரூ.2 மட்டும் செலுத்தினால் போதும். கட்டணங்களை டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, நெட் பேங்கிங், யுபிஐ மூலம் ஆன்லைனில் செலுத்தலாம்.

தமிழகம் முழுவதும் மொத்தம் உள்ள 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 159 பாடப் பிரிவுகளில் 1.27 லட்சம் இடங்கள் உள்ளன. மாணவர்கள் தாங்கள் விரும்பும் கல்லூரியில் விருப்பப்பட்ட பாடப் பிரிவுகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 181 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 159 வகையான படிப்புகளில் மொத்தம் 1,26,959 இடங்கள் உள்ளன. இதில், முதலாம் சுழற்சியில் 1,01,022 இடங்களும், இரண்டாம் சுழற்சியில் 25,937 இடங்களும் சேர்க்கப்பட உள்ளன.ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், 044-24343100 / 044-24342011 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம்

# திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தோல்வியை நினைத்து வருந்திய EPS..!

## புதுவை அதிமுக மாநில செயலாளர் தகவல்



புதுவை, மே 08:

தமிழக சட்டமன்ற தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்க நிலையில், அரசியல் களம் எதிர்பார்த்ததை விட மிகவும் பரபரப்பாக காணப்டுகிறது. அதிக இடங்களை வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தாலும் ஆட்சியமைக்க போதுமான ஆதரவு எம்.எல்.ஏ-க்கள் இல்லாத காரணத்தால் தவெக தவித்து வருகிறது.

இந்த சூழலில் புதுவையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு புதுச்சேரியின் அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் பதில் அளித்தார். அப்போது ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது அதிமுக, திமுக கட்சிகள் என சேர்த்து பதில் கூற முற்பட்டார். இடையில் குறுக்கிட்ட செய்தியாளர் நீங்கள் சார்ந்திருக்கும் கட்சியின் பெயரை மட்டும் கூறாமல், உங்களுக்கு எதிரி கட்சியாக இருக்கும் திமுக-வின் பெயரையும் சேர்த்து சொல்கிறீர்களே என கேள்வி எழுப்பினார்.

உடனே கோபப்பட்ட அன்பழகன் என்ன கேள்வி இது.? திமுக-வும் ஒரு அரசியல் கட்சி தானே.. அதுவும் பல ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட அரசியல் கட்சி தானே.. 70 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களுக்காக உழைத்து கொண்டிருக்கும் கட்சி தானே திமுக.. அந்த கட்சியை காரணமே இல்லாமல் கேவலப்படுத்தியா இப்போது பேச முடியும், அது முடியாது.

திமுக தலைவர் ஸ்டாலின் அவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்ததற்கு கூட எங்கள் கட்சி தலைவர் எடப்பாடியார் உள்ளபடியே மிகவும் வருந்தினார். இது உண்மை, நான் அவரை நேரில் பார்க்கும் போது நம் கட்சி நிலை தேர்தலில் இப்படியாகிவிட்டதே, மனதெல்லாம் கஷ்டமாக இருக்கிறது என்றேன். அதற்கு விடுங்கள் பார்த்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு, அப்போது என்னிடம் ஒரு வார்த்தை சொன்னார் " ஸ்டாலின் எல்லாம் எப்பேர்ப்பட்ட லீடர், அவரே வெற்றி வாய்ப்பை இழக்கும் அளவிற்கு மக்கள் ஓட்டு போடுகிறார்கள் என்றால் என்ன இது..இந்த மக்கள் என்ன தான் நினைக்கிறார்கள் என்று கேட்டுவிட்டு மனதார வருந்தினார். அரசியல் ரீதியாக எதிரிகளாக இருந்தாலும், நீண்ட கால அனுபவமுள்ள ஒரு தலைவர் தோல்வியடைந்தது வருத்தமளிக்கிறது என்று EPS தம்மிடம் தெரிவித்ததாக அவர் கூறினார். அரசியலில் இருவரும் வெவ்வேறு துருவங்களாக இருந்தாலும் மிகசிறந்த மற்றும் பெரிய அரசியல் தலைவர்கள் எல்லாம் வெற்றி பெற வேண்டும், அவர்களுக்கு இந்த நிலை வர கூடாது என்று வருத்தப்பட்டு பேசினார்.

இப்படிப்பட்ட தலைமைப் பண்பு உள்ளவர் தான் எங்கள் தலைவர் எடப்பாடியார் என்று கூறினார் .

# விஜய்யை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழக மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்: கமல்ஹாசன்



சென்னை, மே 08:

"விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்" என்று கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் எந்தக் கட்சிக்கும் வழங்கவில்லை. இந்த முடிவு தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாதது.

எனது சகோதரர் மு.க. ஸ்டாலின், 'மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம்; பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்' என்று அறிவித்திருக்கிறார். அவரது அரசியல் முதிர்ச்சியை நான் மதிக்கிறேன்.

இப்போது அரசியலமைப்பு பொறுப்பில் இருப்பவர்களும் அதே கடமையை நிறைவேற்ற வேண்டும். இது கோரிக்கை அல்ல, அவர்களின் அரசியலமைப்புக் கடமைக்கான நினைவூட்டல்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும். 233 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்க முடியாமல் இருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு நேரும் அவமானம்; மக்களாட்சிக்கு ஏற்படும் சேதம்.

'பெரும்பான்மையை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும், ராஜ் பவனில் அல்ல' என எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

நான் பேசிக்கொண்டிருப்பது கட்சி அரசியல் அல்ல. ஓர் இந்தியக் குடிமகனின் கொள்கைக் குரல் இது. தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்புக்கு மரியாதை கிடைத்தே ஆகவேண்டும்" என தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் தனித்து தேர்தலை எதிர்கொண்ட தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. திமுக 59 இடங்களிலும், அதிமுக 47 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. காங்கிரஸ் கட்சி 5, பாமக 4, ஐயுஎம்எல் 2, சிபிஐ 2, சிபிஎம் 2, விசிக 2, பாஜக 1, தேமுதிக 1, அமமுக 1 ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றள்ளன. சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

# தவெகவை ஆட்சியமைக்கவிடாத ஆளுநரை கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம் - செல்வப்பெருந்தகை அறிவிப்பு!



சென்னை, மே 08:

தவெக ஆட்சி அமையக் கூடாது என்ற நோக்கத்துடன் செயல்படும் பாஜக, ஆளுநரைக் கண்டித்து நாளை மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

"2025 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படும் மத்திய பாஜகவை கண்டித்தும், அவர்களில் கைப்பாவையாக செயல்படும் ஆளுநரை கண்டித்தும் மாவட்ட தலைநகரங்களில் இன்று காலை 11:00 மணிக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சார்பாக அண்ண சாலை, தாராப்பூர் டவர் அருகில் நாளை காலை 11:00 மணியளவில் எனது தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர்கள், மூத்த காங்கிரஸ் நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற இந்நாள், முன்னாள் காங்கிரஸ் உறுப்பினர்கள், சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், சர்க்கிள், வட்ட தலைவர்கள் மற்றும் அதன் நிர்வாகிகள், பெருநகர சென்னை மாமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள், முன்னணி அமைப்புகள், துறைகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள் அதன் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்பார்கள்.

# சுற்றுலா: தமிழ்நாட்டில் இந்த இடங்களை மிஸ் பண்ணிடாதீங்க!



சென்னை மாவட்டத்தின் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள புகழ்பெற்ற முதலியார் குப்பம் படகு இல்லம் (ECR) மற்றும் சென்னையில் முட்டுக்காடு முட்டுக்காடு படகு இல்லம் ஆகியவற்றில் பலவிதமான சாகச நீர் விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலாத் துறை நகரில் உள்ள படகு இல்லங்கள் முழுவதும் கயாக்கிங், படகுப் பயணம், அதிவேக வாட்டர் ஸ்கூட்டர்கள், உல்லாசப் படகுகள், சர்ஃபிங், பனிச்சறுக்கு, பவர் படகு சவாரி மற்றும் வாழைப் படகுகள் போன்றவைகளை இயக்கி வருகிறது. அதேபோல், நீலகிரி, கொடைக்கானல், ஆனைமலை மலைகள் உள்ளிட்ட பல்வேறு அழகிய மலை வாசஸ்தலங்களில் மலையேற்றம் செய்பவர்களுக்கு மலையேற்ற உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

**கொடைக்கானல்:**

'மலைவாசஸ்தலங்களின் இளவரசி' யான திண்டுக்கல் மாவட்டத்தின் கொடைக்கானல் தமிழகத்தில் மிகவும் பிரபலமான கோடைகால ஓய்வு விடுதிகளில் ஒன்றாக கருதப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 6,998 அடி உயரத்தில் அமைந்துள்ள கொடைக்கானல் மலையேற்றம் அனைவரின் கனவாகும். பசும்புல்வெளிகள், ஷோலா காடுகள், பாறைகள், நீரோடைகள், தோட்டங்கள் மற்றும் பூச்செடிகள் வழியாக ரசித்து ஏறும் எண்ணற்ற அழகான மலையேற்றப் பாதைகள் உங்கள் என்றென்றும் நினைவில் தங்கும் அனுபவம் தரும்.

பட்லகுண்டு, பெருமாள்மலை – பாலமலை – தலையார் – மஞ்சளார் – தேவதானப்பட்டி – டால்பின் மூக்கு – வெள்ளகேவி – வெங்கயப்பாறை – கும்பக்கரை – பெரியகுளம் – செம்பகனூர் – கொரப்பூர் – அடுக்கம் – செழும்பதோப்பு – கும்பக்கரை – பெரியகுளம் – குரங்கணி – சோத்துப்பாறை உள்ளிட்ட எண்ணற்ற மலையேற்றப் பாதைகள் இங்கு உண்டு.

**ஏலகிரி:** தமிழ்நாட்டின் வேலூர் மாவட்டத்தில் கடல் மட்டத்திலிருந்து 4,628 அடி உயரத்தில் அமைந்துள்ள ஏலகிரி மலைகள் மலையேற்றப் பயணிகளுக்கு ஏற்ற நிலமாக கருதப்படுகிறது. 'ஏழைகளின் ஊட்டி' என்று அன்புடன் அழைக்கப்படும் அமைதியான ஏலகிரி மலைவாசஸ்தலம் பெங்களூரிலிருந்து செல்ல வார இறுதிப் பயணத்திற்கு ஏற்ற இடமாகக் கருதப்படுகிறது, ஏனெனில் இது அங்கிருந்து (NH7 வழியாக) 158 கிமீ தொலைவில் உள்ளது. மலைக் காடுகள், மயக்கும் பள்ளத்தாக்குகள், சதுப்பு நிலங்கள், அற்புதமான சிகரங்கள் மற்றும் அடர்ந்த காடுகள் ஆகியவற்றால் சூழப்பட்ட ஏலகிரி மலைப்பகுதியில் 1000மீ முதல் 14 கிமீ வரை மலையேற்றப் பாதைகள் உள்ளன. சுவாமிமலை, நிலாவூர் ஜலகம்பாறை, கரடிமுனை, புங்கனூர் சுவாமிமலை மலை படகு இல்லம் – புளிச்சா குட்டைபுத்தூர் – பெருமாடு அருவி போன்றவை ஏலகிரியில் உள்ள சில குறிப்பிடத்தக்க மலையேற்ற பாதைகளாகிறது.

**ஆனைமலை:** கடல் மட்டத்திலிருந்து 8,842 அடி உயரத்தில் அமைந்துள்ள ஆனைமலை தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஒரு பகுதியாகும். தென்னிந்தியாவின் மிக உயரமான மலையாகக் கருதப்படும் ஆனைமலை இலையுதிர் காடுகள், புல்வெளிபீடபூமி, காபிதோட்டங்கள், தேக்கு மரத் தோட்டங்கள் மற்றும் நினைவுச்சின்ன சிகரங்களைக் கொண்டவை. ஆனைமலை மலைகள் மலையேற்றத்திற்கு பல சுவாரஸ்யமான அனுபவங்களை வழங்குகின்றன. மேலும் மலை யேற்றம் மிகவும் விரும்பப்படும் இடங்களில் ஒன்றாகும். அக்காமலை – தனக்கம்லை – கொன்னலூர் மீன்பிடி குடில், வரகாளியார் – குறம்பள்ளியார் – வரகாளியார் சோலை – பெரும்குன்று மலை போன்றவை ஆனைமலையில் உள்ள சில குறிப்பிடத்தக்க மலையேற்றப் பாதைகள்.

**ஊட்டி:** மற்ற மாநிலங்களின் மலையேற்றப் பாதைகளுடன் ஒப்பிடும்போது, ஊட்டியில் உள்ள மலையேற்றப் பாதைகள் மிகவும் விரும்பத்தக்கவை, ஏனெனில் அவை ஆரம்பநிலை மற்றும் அனுபவமுள்ள மலையேறுபவர்களுக்கு ஏற்றதாக இருக்கிறது. ஊட்டி மலையேற்றம் வைக்கோல் வயல்வெளிகள், பளிங்குகள், கல்லறைகள், பிரம்மாண்டமான யூகலிப்டஸ் மரங்கள் மற்றும் மூங்கில் தோப்புகள், அடர்ந்த வனப்பகுதிகள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் அழகிய நீர்நிலைகள் வழியாக அழைத்துச் சென்று சொர்க்கத்தை காட்டுகிறது. பார்சன்ஸ் பள்ளத்தாக்கு – முக்கூர்த்தி ஏரி – பாண்டியர் மலைகள் – பைக்காரா நீர்வீழ்ச்சி – முதுமலை சரணாலயம், பார்சன்ஸ் பள்ளத்தாக்கு உள்ளிட்ட பல மலைப்பாதைககள் சாகசப் பயணத்துக்கு ஏற்றதாக உள்ளது.

சாகசம் தேவைதான், ஆனால் அதிலும் கவனமும் எச்சரிக்கையும் அவசியம் என்பதையும் நினைவில் கொள்வது அவசியம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ராணுவ வாகன நிறுவனத்தில் பணி

ராணுவ கவச வாகன நிறுவனத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சீனியர் மேனேஜர் (மெடிக்கல்) 3, பார்மசிஸ்ட் 3, நர்சிங் அசிஸ்டென்ட் 3 என மொத்தம் 9 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: எம்.பி.பி.எஸ்., / பி.பார்ம்., / பி.எஸ்சி.,

வயது: 18-30 (17.5.2026ன் படி) தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். General Manager/HR (CO), Armoured Vehicles Nigam Limited, HVF Road, Avadi, Chennai-600 054

கடைசிநாள்: 12.5.2026 விவரங்களுக்கு: avnl.co.in.

### இஸ்ரோ ஆய்வு மையத்தில் சயின்டிஸ்ட் வாய்ப்பு



இஸ்ரோ ஆய்வு மையம் கீழ் செயல்படும் திரவ உந்துசக்தி அமைப்பு மையத்தில் (எல்.பி.எஸ்.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சயின்டிஸ்ட் / இன்ஜினியர் பிரிவில் மொத்தம் 6 இடங்கள் உள்ளன. கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,

வயது: 18 - 28, 18 - 30 (12.5.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 750 (ரூ. 500 ரீபன்ட்). எஸ்.சி.,/எஸ்.டி., பிரிவினருக்கு (ரூ. 750 ரீபன்ட்).

கடைசிநாள்: 12.5.2026

விவரங்களுக்கு: lpsc.gov.in

## தூத்துக்குடி-தாம்பரம் வாராந்திர ரெயில் அடுத்த மாதம் வரை நீட்டிப்பு

**மதுரை, மே 8:**

தென்மத்திய மண்டல ரெயில்வே சார்பில் தாம்பரத்தில் இருந்து தஞ்சாவூர், மதுரை வழியாக தூத்துக்குடிக்கு சிறப்பு ரெயில் இயக்கப்பட்டு வந்தது. இதற்கிடையே, இந்த ரெயிலை நீட்டிப்பு செய்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, தூத்துக்குடி-தாம்பரம் சிறப்பு ரெயில் அடுத்த மாதம் 8-ந் தேதி வரையும், தாம்பரம்-தூத்துக்குடி சிறப்பு ரெயில் அடுத்த மாதம் 9-ந் தேதி வரையும் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில், தூத்துக்குடி-தாம்பரம் சிறப்பு ரெயில் (வ.எண்.06018) திங்கட்கிழமை தோறும் நள்ளிரவு 11.30 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து புறப்பட்டு நள்ளிரவு 2.30 மணிக்கு மதுரை ரெயில் நிலையம் வந்தடைகிறது. மறுநாள் மதியம் 12.30 மணிக்கு தாம்பரம் சென்றடையும். மறுமார்க்கத்தில், தாம்பரத் தில் இருந்து சிறப்பு ரெயில் (வ.எண்.06017) செவ்வாய்க்கிழமை தோறும் மாலை 3.40 மணிக்கு புறப்பட்டு நள்ளிரவு 1.20 மணிக்கு மதுரை ரெயில் நிலையம் வந்தடைகிறது. மறுநாள் அதிகாலை 4.30 மணிக்கு தூத்துக்குடி ரெயில் நிலையம் சென்றடையும்.

## அடுத்த ஆட்சி அமைக்கப்போவதில் இழுபறி - அதிமுக எம்.எல்.ஏ.க்கள் புதுச்சேரியில் தங்கவைப்பு

**சென்னை, மே 8:**

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றியது. தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுத்துள்ள நிலையில், தற்போதுள்ள தவெகவின் பலம் 112 ஆக உள்ளது. ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், மற்ற கட்சிகள் தவெகவுக்கு இன்னும் ஆதரவு கொடுக்கவில்லை.

இதனால், அக்கட்சி ஆட்சியமைப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது. பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் விஜய் வராத சூழலில் அவரை ஆட்சியமைக்க வரும்படி கவர்னர் அழைக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே, தி.மு.க. ஆதரவுடன் ஆட்சி அமைக்க அ.தி.மு.க. தீவிரம் காட்டி வருகிறது. அதற்கேற்ப த.வெ.க.வுக்கு ஆதரவு கிடையாது என்று அ.தி.மு.க. தெரிவித்து விட்டது. இதனை அடுத்து. அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை புதுச்சேரியில் சொகுசு விடுதியில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது என தகவல் தெரிவிக்கின்றது. இதனை தொடர்ந்து, அ.தி.மு.க.வுக்கு தேவையான ஆதரவை வெளியில் இருந்து தி.மு.க. அளிக்கும் என்றும் எதிர்க்கட்சியாக செயல்பட அக்கட்சி முடிவு செய்துள்ளது என்றும் தகவல் தெரிவிக்கின்றது. இதனால், தமிழக அரசியலில் பரபரப்பு நீடித்து வருகிறது. இந்த நிலையில், அதிமுகவில் புதிய எம்.எல்.ஏ.க்களாக தேர்வு செய்யப்பட்டவர்களை புதுச்சேரி அழைத்துசென்று அங்கு தங்கவைக்க முடிவுசெய்யப்பட்டது. அவர்கள் அனைவரும் புதுச்சேரியில் உள்ள சொகுசு ஓட்டலில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதாவது அ.தி.மு.க.வில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்களை, த.வெ.க. பக்கம் இழுக்க அந்த கட்சியில் இணைந்த மூத்த நிர்வாகி ஒருவர் கடும் முயற்சி செய்வதாகவும், ஆனால் அந்த முயற்சியை முறியடிக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாவும் அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டது.

## வடமாநில பெண் அதிகாரி குத்திக்கொலை: உடன் வசித்த வாலிபர் ஓட்டம்

**ராமநாதபுரம், மே 8:**

பீகார் மாநிலம் பாட்னா அருகே உள்ள செய்ன்புரா பகுதியைச் சேர்ந்த சியாம் சுந்தர்லால் என்பவரின் மகள் அபர்ணா (வயது 38). இவர் கடந்த மூன்று ஆண்டுகளாக ராமநாதபுரம் போக்குவரத்து நகர் வாமகார்டன் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்தார். அவர் அங்குள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் அதிகாரியாக பணியாற்றி வந்ததாக கூறப்படுகிறது.

அண்மையில் பீகார் சென்றிருந்த அவர் கடந்த மாதம் 21-ந் தேதி மீண்டும் ராமநாதபுரம் வந்தார்.

தனது வளர்ப்பு நாயையும், உதவிக்காக உறவினரான ரித்திக் (27) என்பவரையும் அழைத்து வந்திருந்தார்.

இந்நிலையில், கடந்த மூன்று நாட்களாக அபர்ணாவிடமிருந்து எந்த அழைப்பும் வராததால், அவரது குடும்பத்தினர் சந்தேகமடைந்து ரித்திக்கை தொடர்பு கொண்டனர். அவர், அபர்ணா சென்னை சென்றதாகவும், தான் பாட்னாவுக்கு வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பின்னர் அவரது செல்போனிலிருந்து அபர்ணா இறந்த நிலையில் கிடக்கும் படம் குடும்பத்தினருக்கு அனுப்பப்பட்டது.

இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் ராமநாதபுரம் போலீசாருக்கு தகவல் அளித்தனர். அதன்பேரில் போலீசார், பூட்டியிருந்த வீட்டை உடைத்து உள்ளே சென்றபோது. அபர்ணா அழுகிய நிலையில் பிணமாக கிடந்தார். கழுத்தில் கத்திக்குத்து காயம் இருந்தது.

இதனால் அவர் கொலை செய்யப்பட்டது உறுதியானது. அருகில் அவரது நாயும் கொல்லப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக தலைமறைவான ரித்திக்கை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். அவர் பிடிபட்டால்தான் அபர்ணா எப்படி கொலை செய்யப்பட்டார்? எதற்காக கொலை செய்யப்பட்டார்? என்ற விவரம் தெரியவரும் என போலீசார் கூறினர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## என்ஜின் பழுதால் 2 மணி நேரம் நடுவழியில் நின்ற பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் ரெயில்

**சென்னை, மே 8:**

சென்னை சென்ட்ரலில் இருந்து பெங்களூரு நோக்கி நேற்றுமுன்தினம் காலை 7.40 மணிக்கு பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்பட்டது. திருவள்ளூரை அடுத்த திருவாலங்காடு - மோசூர் ரெயில் நிலையங்களுக்கு இடையே காலை 8.25 மணியளவில் சென்றபோது, திடீரென ரெயிலின் என்ஜினில் கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து, திருவாலங்காடு யார்டு சிக்னலை கடந்து ரெயில் நடுவழியில் நிறுத்தப்பட்டது.

இது குறித்து ரெயில் என்ஜின் டிரைவர் அரக்கோணம் ரெயில்வே அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

இதையடுத்து, ரெயில்வே ஊழியர்கள் மாற்று என்ஜினை பொருத்தி பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் ரெயிலை காலை 10.57 மணிக்கு அரக்கோணத்துக்கு கொண்டு சென்றனர்.

அங்கு புதிய என்ஜின் பொருத்தப்பட்ட பின்னர், பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் மீண்டும் தாமதமாக புறப்பட்டுச் சென்றது.

என்ஜின் பழுது காரணமாக சுமார் 2 மணிநேரம் நடுவழியில் ரெயில் நின்றதால், அதில் பயணம் செய்த பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

## தமிழகத்தில் முக்கிய இடங்களில் பாதுகாப்பை அதிகரிக்க உளவுத்துறை எச்சரிக்கை

**சென்னை, மே 8:**



தமிழக அரசியல் வரலாற்றில் 2026 சட்டமன்ற தேர்தல் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது. புதிய வரவான த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உள்ளது.

இந்த சூழலில் தமிழக கவர்னர் அர்லேகரை சந்தித்து. விஜய் நேற்று மாலை ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அப்போது அவர், த.வெ.க.வின் 108 எம்.எல்.ஏ.க்கள் மற்றும் காங்கிரசைச் சேர்ந்த 5 எம்.எல்.ஏ.க்கள் என மொத்தம் 113 எம்.எல்.ஏ.க்களின் பட்டியலை வழங்கினார்.

ஆனால் அதை பெற்றுக்கொண்ட கவர்னர், 118 எம்.எல்.ஏ.க்கள் பெயர் பட்டியலை கொண்டு வந்தால்தான் ஆட்சி அமைக்க அனுமதிக்க முடியும் என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். இதனால் விஜய் இன்று முதல்-அமைச்சராக பொறுப்பேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், பா.ம.க., கம்யூனிஸ்டுகள் மற்றும் வி.சி.க. ஆகியவற்றின் ஆதரவை எளிதாக பெற்றுவிடலாம் என்று எண்ணிய த.வெ.க.வின் கனவு தகர்ந்தது. அந்த கட்சிகள் அனைத்தும் பின்வாங்கியுள்ளன. எனவே த.வெ.க.வுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் விஜய் முதல்-அமைச்சர் ஆவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கிடையே, விஜய்யால் ஆட்சி அமைக்க முடியாததால், தி.மு.க. ஆதரவுடன் அ.தி.மு.க. ஆட்சி அமைக்க உள்ளதாக ஒரு தகவல் நேற்று இரவு காட்டுத்தீ போல் பரவியது. இதற்கு ஏற்றார்போல் இரு கட்சிகளும் தனித்தனியாக நேற்று பல மணி நேரம் ஆலோசனை நடத்தின. தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணிக்கு அச்சாரமாகத்தான் ரஜினிகாந்தும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்தார் என்றும் கூறப்படுகிறது. இந்த தகவலை 2 கட்சிகளும் மறுப்பு தெரிவிக்காததால், இந்த தகவல் உண்மை என்றே அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது. தமிழகத்தில் நிலவும் இந்த பரபரப்பான அரசியல் சூழலால், தமிழகத்தின் முக்கிய இடங்களில் பாதுகாப்பை அதிகரிக்க தமிழக போலீசாருக்கு மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. தவெக தலைவர் விஜய் இன்னும் ஆட்சி அமைக்காத சூழலில், சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 'பி.எம்.ஸ்ரீ' பள்ளித்திட்டத்தில் கையெழுத்திட மத்திய அரசு மீண்டும் 'கெடு' - புதிய அரசுக்கு முதல் சவால்

**புதுடெல்லி, மே 8:**

தேசிய கல்விக் கொள்கை 2020-இன் கீழ், 'பிரதான் மந்திரி ஸ்கூல்ஸ் பார் ரைசிங் இந்தியா' (பி.எம்.ஸ்ரீ) திட்டம் கொண்டு வரப்பட்டது. நாடு முழுவதும் உள்ள 14,500-க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளை அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்துதல், மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பம், ஆய்வகங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய தரமான கல்வியை வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தேசியக்கல்விக் கொள்கையில் மும்மொழி கொள்கை இருப்பதால், தி.மு.க. தலைமையிலான கடந்த அரசாங்கம் ஏற்கனவே பின்பற்றி வரும் இருமொழிக்கொள்கையே போதும் என சொல்லி இந்த திட்டத்தில் இணைய மறுத்துவிட்டது. இந்த திட்டத்தில் இணைய மறுத்ததன் விளைவாக, மத்திய அரசு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்ட கல்வி நிதிக்காக ஒதுக்கும் ரூ.3,500 கோடியை தமிழக அரசுக்கு வழங்காமல் நிறுத்தி வைத்தது.

இந்த விவகாரம் கடந்த தி.மு.க. ஆட்சியில் விஸ்வரூபம் எடுத்தது. நீங்கள் பணம் தராவிட்டால் என்ன? நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு தேவையான நிதியை ஒதுக்குவோம் என அப்போதைய முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். இது மக்களவையில் கூட எதிரொலித்தது.

இந்த சூழ்நிலையில், தற்போது மத்திய அரசு மீண்டும் தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது. அதில் 'பி.எம்.ஸ்ரீ' பள்ளி திட்டத்தின் கீழ் பள்ளிகளை மேம்படுத்த உடனே ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று கெடு விதித்திருக்கிறது. புதிய அரசு பொறுப்பேற்க இருக்கும் சூழலில் மத்திய அரசு இந்த கடிதத்தை எழுதியுள்ளது.

புதிய அரசாங்கம் இந்த விவகாரத்தை எப்படி கையாளப்போகிறது? கடந்த தி.மு.க. அரசு கையாண்ட வழியிலேயே கையாளுமா? அல்லது ஒப்பந்தத்தில் கையெழுத்திட முனைப்பு காட்டுமா?, நிறுத்தி வைக்கப்பட்ட கல்விக்கான நிதியை மத்திய அரசிடம் இருந்து பெற்றுத்தர என்ன மாதிரியான நடவடிக்கைஎடுக்கப்போகிறது? என்பன போன்றவை பெரிய எதிர்பார்ப்பாக இருக்கிறது.

# புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி ராஜினாமா: விரைவில் புதிய அரசு அமைக்க நடவடிக்கை



**புதுச்சேரி, மே 8:**

துணைநிலை ஆளுநரை சந்தித்து ராஜினாமா கடிதத்தை முதல்வர் ரங்கசாமி இன்று அளித்தார். விரைவில் புதிய அரசு அமைக்க நடவடிக்கை மேற்கொள்கிறார்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் வென்று ஆட்சியை தக்க வைத்துள்ளது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள என்.ஆர். காங்கிரஸ் 12 சீட்கள், பாஜக 4 சீட்டுகள், அதிமுக, லஜக தலா 1 ஒரு சீட்டு என 18 இடங்களை கைப்பற்றியுள்ளனர்.

புதுச்சேரியில் ஆட்சி அமைக்க மெஜாரிட்டிக்கு 16 எம்எல்ஏக்கள் தேவைப்படும் நிலையில், தற்போது 18 எம்எல்ஏக்கள் இருப்பதால் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி தொடர்வது உறுதியாகியுள்ளது. முதல்வர் ரங்கசாமியின் புதிய அரசு அமைப்பதற்காக பாஜக மேலிட பொறுப்பாளர்களான மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, நிர்மல் குமார் சுரானா ஆகியோர் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படவில்லை. பாஜகவுக்கு ஒரு அமைச்சர் பதவி மட்டுமே வழங்க முடியும் என முதல்வர் ரங்கசாமி திட்டவட்டமாக கூறியுள்ளார்.

இதனால் பேச்சுவார்த்தை தொடராமல் உள்ளது. மத்திய அமைச்சர் டெல்லி புறப்பட்டார். இந்த நிலையில் நேற்றைய தினம் முதல்வர் ரங்கசாமி சேலத்தில் தனது ஆன்மீக குருவான அப்பா பைத்தியம் சாமி கோயிலுக்கு சென்றார். அங்கு வென்ற எம்எல்ஏக்கள் சான்றிதழ்களை வைத்து பூஜை செய்து புதுச்சேரி திரும்பினார்.

இதனிடையே, முதல்வர் ராஜினாமா கடிதம் இல்லாமலேயே நேற்றைய தினம் 15-வது சட்டப்பேரவை ஆளுநர் உத்தரவுப்படி கலைக்கப்பட்டதாக பேரவைச் செயலர் அறிவிப்பு வெளியிட்டார். இந்நிலையில் இன்று காலை துணை நிலை ஆளுநர் மாளிகைக்கு விரைந்த முதல்வர் ரங்கசாமி, ஆளுநர் கைலாஷ்நாதனை சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தை முறைப்படி வழங்கினார்.

அதைத் தொடர்ந்து என்.ஆர்.காங்கிரஸ் வட்டாரங்களில் கேட்டதற்கு, “நாளை வெள்ளிக்கிழமை பாஜகவுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். இதையடுத்து பாஜக, அதிமுக, லஜக ஆதரவு கடிதங்களை பெற்று ஆட்சி அமைக்க உரிமை கோர உள்ளார். தொடர்ந்து வளர்பிறையில் ஐந்தாவது முறையாக பதவியேற்கவுள்ளார்.” என்று என்.ஆர்.காங்கிரஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவிகின்றன.

## க்ரைம் கார்னர்

### காரின் மேற்கூரையில் அமர்ந்து வெற்றி கொண்டாட்டம்- த.வெ.க.வினர் 12 பேர் கைது

**ராமநாதபுரம், மே 8:**

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பிற்பகலில் திடீரென இடியுடன் கூடிய மழை பெய்தது. அப்போது ஒரு சொகுசு காரில் வாலிபர்கள் பலர் உள்ளே அமர்ந்து கொண்டும், சிலர் வாகனத்தின் இருபுறமும் நின்று கொண்டும், மேற்கூரையில் அமர்ந்து கொண்டும் ஆட்டம் போட்டபடி விசில் ஊதியபடி ராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய பகுதியில் இருந்து புறப்பட்டு வந்தனர்.

இவர்கள் வரும் வழியில் கத்தி கூச்சலிட்டபடியும், விசில் அடித்தபடியும் த.வெ.க. வெற்றியை கொண்டாடியபடி வந்தனர். மேலும் அந்த வழியாக சென்றவர்களை அச்சுறுத்தும் வகையிலும், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் நடந்து கொண்டதாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே இந்த வாலிபர்கள் காரில் ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தனர். பின்னர் கலெக்டர் அலுவலக வளாகப்பகுதியில் கொட்டும் மழையில் சொகுசு காரில் ஆடிப்பாடியபடி கூச்சலிட்டு விசில் ஊதினர். மேலும் அந்த வழியாக வந்த அரசு ஊழியர்களையும், பெண்களையும் அச்சுறுத்தும்படி நடந்ததாக கூறப்படுகிறது. அவர்களை ரோந்து போலீசார் மடக்கிப் பிடித்தனர். இதுதொடர்பாக த.வெ.க.வினர் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

### விஜய் திரைப்படப் பாடல் ரிங்டோன்: தவெக உறுப்பினரை தாக்கிய 2 பேர் கைது

**சென்னை, மே 8:**

சென்னை ஓட்டேரி எஸ்.எஸ்.புரம் பகுதியைச் சேர்ந்தவர் சாலமன் (26). இவர் தவெக உறுப்பினர். சாலமன், உடல்நலம் பாதிக்கப்பட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தனது உறவினரை செவ்வாய்க்கிழமை இரவு பார்க்கச் சென்றார்.

அப்போது சாலமனின் கைப்பேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் தவெக தலைவர் விஜய் நடித்த திரைப்படப் பாடல் ரிங்டோனாக ஒலித்தது. இதைக் கேட்ட அங்கிருந்த இருவர், சாலமனிடம் ‘ஏன் விஜய் பாடலை ரிங்டோனாக வைத்துள்ளாய்?’ என்று கேட்டு தகராறு செய்ததாகக் கூறப்படுகிறது. இதனால் இருதரப்புக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த இருவரும் சாலமனை சரமாரியாக தாக்கினர். இதில் காயமடைந்த சாலமன் அளித்த புகாரின் பேரில், கீழ்ப்பாக்கம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர். தாக்குதலில் ஈடுபட்டவர்கள் சேத்துப்பட்டு பகுதியைச் சேர்ந்த அம்பேத்கர் (35), செந்தில்குமார் (40) என்பது தெரிய வந்தது. அம்பேத்கர் திமுக ஆதரவாளர் என்றும், செந்தில்குமார் கோபாலபுரத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றி வருவதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து, போலீஸார் இருவரையும் புதன்கிழமை கைது செய்தனர்.

### தடைசெய்யப்பட்ட புகையிலை விற்பனை; 2 பேர் கைது

**திருவில்லிபுத்தூர், மே 8:**

திருவில்லிபுத்தூர் நகரில் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்த இருவரை போலீசார் கைது செய்து, பெருமளவு பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர். திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட ஸ்ரீராம் லாட்ஜ் அருகே, காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முருகராஜ் ரோந்து பணியில் ஈடுபட்டி ருந்தார். அப்போது, மதுரை விரகனூரைச் சேர்ந்த ஜெய சீலன் மற்றும் திருவில்லிபுத்தூர் ராஜீவ் காந்தி நகரைச் சேர்ந்த நவநீதகிருஷ்ணன் ஆகியோர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்ப னைக்கு வைத்திருந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து, இருவரையும் போலீசார் கைது செய்த னர். மேலும், அவர்களிடமிருந்து சுமார் 15.537 கிலோ எடையுள்ள புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப் பட்டன.

## விளையாட்டு செய்திகள்

### 8 ஆண்டுகளுக்குப் பிறகு தென்கொரியா செல்கிறதா வடகொரிய கால்பந்து அணி?

**புதுடெல்லி, மே 8:**

இந்தியா - பாகிஸ்தான் நாடு கள் எல்லை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளால் எதிரும் புதிருமாக இருப்பது போல, வட கொரியா - தென் கொரியா நாடுகளும் அப்படி தான் உள்ளன. எல்லை முதல் விளையாட்டு வரை இரு நாடு களும் முட்டலும், மோதலுமாகத் தான் இருக்கும். அதனால் வடகொரியாவில் விளையாட்டுப் போட்டி நடந்தால் தென்கொரியா அங்கு செல்லாது. அதே போல வடகொரியா, தென் கொரியாவிற்கு செல்லாது. இதுதான் பல ஆண்டுகளாக உள்ளது. இந்நிலையில், 8 ஆண்டுகளுக்குப் பிறகு தென்கொரியாவிற்கு கால்பந்து விளையாட வடகொரியா மகளிர் அணி செல்கிறது. மே 20 அன்று நடை பெறும் ஆசிய கால்பந்து கூட்டமைப்பு மகளிர் சாம்பியன்ஸ் லீக் அரையிறுதி ஆட்டத்தில் வடகொரியாவின் ‘நைகோஹியாங்’ மகளிர் கால்பந்து அணி, தென் கொரியாவின் சுவோன் எப்சி அணியை எதிர்கொள்ள உள்ளது. தென்கொரிய அமைச்சகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும், வடகொரியாவின் அரசு ஊடகங்கள் இந்த பயணம் குறித்து இன்னும் எந்தச் செய்தியும் அதிகாரப் பூர்வமாக வெளியிடவில்லை. கடைசியாக டிசம்பர் 2018இல் டேபிள் டென்னிஸ் போட்டிக்காக வட கொரியா தனது வீரர்களை தென் கொரியாவிற்கு அனுப்பியது. அதற்கு முன் வடகொரிய மகளிர் கால்பந்து அணி கடைசியாக 2014 இல் இன்சியானில் நடை பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டி யில் தென்கொரிய மண்ணில் விளை யாடியது என்பது குறிப்பிடத்தக்கது.

### மே 31-ல் அகமதாபாத்தில் ஐபிஎல் இறுதிப் போட்டி: பெங்களூருவில் இருந்து திடீர் மாற்றம்

**புதுடெல்லி, மே 8:**

ஐபிஎல் நடப்பு சாம்பியனான ஆர்சிபி அணியின் சொந்த மைதானமான பெங்களூருவில் உள்ள எம்.சின்னசாமி மைதானத்தில் இறுதிப்போட்டி நடைபெறுவதுதான் மரபு. ஆனால் அகமதாபாத் நரேந்திர மோடி மைதானம் இறுதிப்போட்டியை நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இங்கு கடந்த ஆண்டை தவிர 2022 மற்றும் 2023-ம் ஆண்டுகளிலும் ஐபிஎல் இறுதிப் போட்டி நடைபெற்றிருந்தது. பிசிசிஐ தனது செய்திக்குறிப்பில், “முதலில் பெங்களூருவில் இறுதிப்போட்டியை நடத்தவே முடிவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், பிசிசிஐ-யின் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நெறிமுறைகளுக்கு அப்பாற்பட்டு, கர்நாடக கிரிக்கெட் சங்கம் மற்றும் அதிகாரிகளிடமிருந்து சில கோரிக்கைகள் வந்தன. இதன் காரணமாக, இறுதிப்போட்டி நடைபெறும் இடம் மாற்றப்பட்டுள்ளது” என்று தெரிவித்துள்ளது. எனினும் கர்நாடக கிரிக்கெட் சங்கம் குறிப்பிட்ட கோரிக்கைகள் என்ன என்பதை பிசிசிஐ விரிவாக விளக்கவில்லை. மே 26-ம் தேதி தர்மசாலாவில் உள்ள இமாச்சல் பிரதேச கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெறும். இதில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும். தரம்சாலாவில் ஐபிஎல் பிளே ஆஃப் ஆட்டம் நடைபெற உள்ளது இதுவே முதன் முறையாகும். இதில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும். இறுதிப் போட்டி மே 31-ம் தேதி அகமதாபாத் தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறுகிறது. அகமதாபாத் மைதானத்தில் 1.32 லட்சம் பேர் அமர்ந்து போட்டியை கண்டுகளிக்கும் வசதி உள்ளது. இதன் காரணமாகவே ஐபிஎல் இறுதிப் போட்டியை இங்கு நடத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதாக பிசிசிஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

# விஜய்யை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழகத்திற்கு அவமானம்! கமல்ஹாசன்





**சென்னை, மே 8:**

தவெக தலைவர் விஜய்யை ஆட்சியமைக்க ஆளுநர் அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும் என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் தனது எக்ஸ் பக்கத்தில்,

“தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் எந்தக் கட்சிக்கும் வழங்கவில்லை. இந்த முடிவு தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாதது.

என் சகோதரர் ஸ்டாலின், ‘மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம்; பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்’ என்று அறிவித்திருக்கிறார். அவரது அரசியல் முதிர்ச்சியை நான் மதிக்கிறேன். இப்போது அரசியலமைப்பு பொறுப்பில் இருப்பவர்களும் அதே கடமையை நிறைவேற்ற வேண்டும். இது கோரிக்கை அல்ல, அவர்களின் அரசியலமைப்புக் கடமைக்கான நினைவூட்டல்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்.

233 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்க முடியாமல் இருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு நேரும் அவமானம்; மக்களாட்சிக்கு ஏற்படும் சேதம்.

‘பெரும்பான்மையை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும், ராஜ் பவனில் அல்ல’ என எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

நான் பேசிக்கொண்டிருப்பது கட்சி அரசியல் அல்ல. ஓர் இந்தியக் குடிமகனின் கொள்கைக் குரல் இது. தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்புக்கு மரியாதை கிடைத்தே ஆக வேண்டும்” என்று பதிவிட்டுள்ளார்.

# புதுச்சேரி விடுதியில் தமிழக அதிமுக எம்எல்ஏக்கள்: இபிஎஸ் விரைவில் ஆலோசனை

**புதுச்சேரி, மே 8:**

புதுச்சேரி விடுதிக்கு தமிழக அதிமுக எம்எல்ஏக்கள் வந்து கொண்டு இருக்கின்றனர். இவர்களுடன் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விரைவில் ஆலோசனை இங்கு நடத்த இருகிறார்.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் கட்சியான திமுக, எதிர்க்கட்சியான அதிமுக ஆகிய இரு திராவிட கட்சிகளை பின்னுக்கு தள்ளி தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சியை கைப்பற்றும் அளவுக்கு தவெகவுக்கு தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

இதனால் தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தரும்படி காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட், இந்திய. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு கடிதம் அனுப்பினார். இதில் திமுக கூட்டணியில் இருந்து வெளியேறிய காங்கிரஸ் தனது 5 எம்எல்ஏக்களுடன் நிபந்தனையுடன் தவெகவுக்கு ஆதரவு அளித்தது. மேலும், அதற்கான கடிதத்தையும் விஜயிடம் காங்கிரஸ் கட்சியினர் நேரில் சந்தித்து வழங்கினர்.

இதனால் தவெக ஆட்சி அமைக்க எம்எல்ஏக்கள் பலம் 113 ஆக உயர்ந்தது. இதனால் தன்னை ஆட்சி அமைக்க அழைக்கும்படி தமிழகத்தின் தற்போதைய பொறுப்பு ஆளுநரை தவெக தலைவர் விஜய் சந்தித்து எம்எல்ஏக்கள் ஆதரவு கடிதத்தை வழங்கினார். இருப்பினும் போதிய எம்எல்ஏக்கள் ஆதரவு இல்லாததால் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கப்படவில்லை. மேலும், 118 எம்எல்ஏக்கள் பட்டியலுடன் வந்தால்தான் ஆட்சி அமைக்க முடியும் என பொறுப்பு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அதிமுக எம்எல்ஏக்கள் ஆலோசனை கூட்டம், நேற்று சென்னை பசுமை வழி சாலையில் உள்ள பழனிசாமி இல்லத்தில் நடந்தது. இதில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையிலான எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவு அளிக்க வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.

ஆனால் இதனை பழனிசாமி மற்றும் முன்னாள் அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் ஆகியோர் ஏற்கவில்லை என கூறப்படுகிறது. இக்கூட்டத்துக்கு பின் பேசிய அதிமுக துணை பொதுச் செயலாளர் முனுசாமி, ‘தவெகவுக்கு எந்த வகையிலும் அதிமுக ஆதரவு அளிக்காது’ என பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஒப்புதலுடன் அறிவிப்பதாக கூறினார்.

இதனையடுத்து அதிமுகவின் 46 எம்எல்ஏக்களும் புதுச்சேரி பூர்ணாங்குப்பத்தில் உள்ள ‘த ஷோர் திரிஷ்வம்’ ரிசார்ட்டுக்கு வந்து தங்குமாறு கட்சி மேலிடம் இருந்து தகவல் கிடைக்கவே, தொடர்ந்து அதிமுக எம்எல்ஏ ஒவ்வொருவராக ரிசார்ட்டுக்கு வர தொடங்கினர்.

அங்கு அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்று வரை ஓ.எஸ் மணியன், தளவாய் சுந்தரம், சேவூர் ராமச் சந்திரன், மோகன், சொரத்தூர் ராஜேந்திரன், அருள்மொழி தேவன், அக்ரி கிருஷ்ண மூர்த்தி, வெங்கடாசலம் உள்பட 25 அதிமுக எம்எல்ஏக்கள் வந்துள்ளனர். தொடர்ந்து மற்றவர்களும் வர உள்ளனர்.

இதையடுத்து அங்கு புதுச்சேரி போலீஸார் பாதுகாப்புப் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் செய்துள்ளார்.

# பேரறிவாளன் வழக்குரைஞர் பதிவை ரத்து செய்ய கோரிய வழக்கு: பார் கவுன்சில் பதிலளிக்க உத்தரவு



**சென்னை, மே 8:**

பேரறிவாளன் வழக்குரைஞர் பதிவை நிறுத்திவைக்கக் கோரிய வழக்கில், இந்திய பார் கவுன்சில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் ஆகியவை பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் ரவிராஜா என்பவர் தாக்கல் செய்த மனுவில், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு உச்சநீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர் பேரறிவாளன். இவர், கடந்த ஏப். 24-ஆம் தேதி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்குரைஞராகப் பதிவு செய்தார்.

வழக்குரைஞர் சட்டப் பிரிவுகளின்படி, கொலை, கொள்ளை போன்ற வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்களை வழக்குரைஞராகப் பதிவு செய்யக் கூடாது எனக் கூறப்படுகிறது.


அதன்படி, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட பேரறிவாளனை வழக்குரைஞராகப் பதிவு செய்ய பார் கவுன்சில் அனுமதித்தது சட்டத்துக்குப் புறம்பானது.

எனவே, பேரறிவாளன் வழக்குரைஞர் பதிவை நிறுத்தி வைக்க வேண்டும். அவர் வழக்குரைஞராகப் பணியாற்ற அனுமதிக்கக் கூடாது என உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.சௌந்தர், பி.பி.பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த மனுவுக்கு இந்திய பார் கவுன்சில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் ஆகியவை நான்கு வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

## வணிகச் செய்திகள்

### பொருளாதார அதிர்ச்சியை தாங்கும் இந்தியா மீது ‘மூடிஸ்’ நம்பிக்கை!




**புதுடெல்லி, மே 8:**

‘மூடிஸ்’ மதிப்பீட்டு நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியுள்ளதாவது: வெளி நாட்டுச் செலாவணி கையிருப்பு மற்றும் தெளிவான நிதிக் கொள்கைகளால் இந்தியா வருங்கால பொருளாதார அதிர்ச்சிகளையும் திறம்பட சமாளிக்கும் நிலையில் உள்ளது.

இந்திய ரூபாயின் மதிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைச் சமாளிக்க இந்தியாவிடம் வலுவாக உள்ள அந்நியச் செலாவணி இருப்பும் உதவுகிறது. எனினும், அதிக கடன் சுமை, நிதிப் பற்றாக்குறை போன்றவை நெருக்கடிகளை எதிர்கொள்வதில் சவால்களை ஏற்படுத்தக்கூடும்.

இந்தோனேசியா, பிரேசில் போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவின் உள்நாட்டுச் சந்தை முதலீடுகள் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகள் மிகவும் சீராக உள்ளன. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காவல் நிலையத்தில் சாவியை விழுங்கிய வாலிபரால் பரபரப்பு

**பெங்களூரு, மே 8:**




*கர்நாடக மாநிலம் பல்லாரி மாவட்டத்தை சேர்ந்தவர் கார்த்திக்(எ) ராமு (வயது 23). இவர் பெங்களூருவில் தங்கியிருந்து வேலை செய்து வந்தார். மாதநாயக்கனஹள்ளி பகுதியில் தங்கியிருந்த அவர் அதே பகுதியை சேர்ந்த 17 வயது சிறுமியை காதலித்து வந்துள்ளார். இந்த காதலை அறிந்த சிறுமியின் பெற்றோர், கார்த்திக்கை கண்டித்துள்ளனர். இந்த நிலையில் சிறுமியை அழைத்துக்கொண்டு கார்த்திக் சொந்த ஊருக்கு சென்றுவிட்டார். இதனால் சிறுமியின் பெற்றோர், தங்களது மகளை கார்த்திக் கடத்திச் சென்றுவிட்டதாக மாதநாயக்கனஹள்ளி போலீசில் புகார் அளித்தனர்.*

*அதைத் தொடர்ந்து பல்லாரியில் பதுங்கியிருந்த 2 பேரையும் போலீசார் மீட்டு பெங்களூருவுக்கு அழைத்து வந்தனர். பின்னர் கார்த்திக்கை போலீசார் மாதநாயக்கனஹள்ளி காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். அப்போது தன் மீது போலீசார் 'போக்சோ' வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை எடுத்து விடுவார்கள் என பயந்து, கையில் இருந்த லாக்கர் சாவியை (சிறிய சாவி) திடீரென்று வாயில் போட்டு விழுங்கி தற்கொலைக்கு முயன்றார். இதை பார்த்து அதிர்ச்சியடைந்த போலீசார், உடனே கார்த்திக்கை மீட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.*

*அங்கு அவருக்கு டாக்டர்கள் முதலில் மருத்துவ பரிசோதனை செய்தனர். அதில் கார்த்திக் விழுங்கிய சாவி தொண்டையில் சிக்காமல் வயிற்றில் சிக்கி இருப்பதை கண்டறிந்தனர். இதனால் வயிற்றுக்குள் கிடந்த சாவியை மீட்க வாழைப்பழங்களை சாப்பிட கொடுக்கும்படியும், இவ்வாறு செய்தால், அந்த சாவி இயற்கை உபாதை மூலம் வெளியே வந்துவிடும் என்றும் டாக்டர்கள் போலீசாரை அறிவுறுத்தினர்.*

*அதன்படி போலீசாரும் கார்த்திக்கை வலுக்கட்டாயப்படுத்தி வாழைப்பழங்களை சாப்பிட வைத்துள்ளனர். மொத்தம் 10 கிலோ வாழைப்பழங்களை போலீசார் அவரை சாப்பிட வைத்துள்ளனர். அதன்பிறகு இயற்கை உபாதை மூலம் கார்த்திக் விழுங்கிய சாவி வெளியே வந்தது. இதனால் போலீசார் நிம்மதி பெருமூச்சுவிட்டனர்.*

# டெல்லி: 'தினந்தோறும் சராசரியாக 497 வழக்குகள்'?



**புதுடெல்லி, மே 8:**

இந்தியாவில் நடைபெறும் குற்றங்கள் தொடர்பாக தேசிய குற்றப் பதிவுப் பணியகம் (NCRB) வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, திருட்டு சம்பவங்கள் தொடர்பான புள்ளிவிவரங்களில் டெல்லி முதல் இடத்தில் இருப்பது தெரியவந்துள்ளது. அங்கு ஒரு நாளைக்கு சுமார் 497 திருட்டு வழக்குகள் பதிவாகியுள்ளன.

2024-ம் ஆண்டில் டெல்லியில் 1,80,973 திருட்டு வழக்குகள் பதிவாகியுள்ளன. இதன் விளைவாக, வாரத்திற்கு கிட்டத்தட்ட 3,480 வழக்குகளும், ஒரு நாளைக்கு ஏறத்தாழ 497 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இது தேசிய மொத்த எண்ணிக்கையில் 73.3 சதவீதமாகும். இது இந்தியாவில் உள்ள மற்ற பெருநகரங்களை விட அதிகமாகும்.

இதனால் இந்தியாவில் திருட்டு சம்பவங்களின் தலைநகராக டெல்லி மாறிக்கொண்டிருக்கிறதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. மேலும், இந்த அறிக்கையின்படி, மும்பை 10,854 திருட்டு வழக்குகளுடனும் (4.4 சதவீதம்), பெங்களூரு 9,229 திருட்டு வழக்குகளுடனும் (3.7 சதவீதம்) மற்றும் ஜெய்ப்பூர் திருட்டு 9,051 வழக்குகளுடனும் (3.7 சதவீதம்) அடுத்தடுத்த இடங்களில் பதிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# துப்புரவுப் பணிகளில் அலட்சியம் காட்டினால் கடும் நடவடிக்கை: டெல்லி மேயர் எச்சரிக்கை

**புது டெல்லி, மே 8:**

டெல்லி மேயர் பிரவேஷ் வாஹி அனைத்து மண்டல துணை ஆணையர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் அவர் கூறியதாவது:-

'நகரத்தின் தூய்மையை மேம்படுத்த பயனுள்ள செயல் திட்டத்தை உருவாக்குமாறு வலியுறுத்திய அவர், துப்புரவுப் பணிகளுக்கே தனது முன்னுரிமை எனத் தெரிவித்தார். துப்புரவுப் பணிகளில் எந்தவிதமான மெத்தனப்போக்கும் சகித்துக்கொள்ளப்படாது என தெரிவித்துள்ளார்.

மேலும், தூய்மைப் பணிகள் திருப்திகரமாக இல்லாத பகுதிகளில், சம்பந்தப்பட்ட தனியார் கழிவு மேலாண்மை முகமைகள் (WASTE MANAGEMENT AGENCIES) மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவி சுகாதார ஆய்வாளர்கள் களத்தில் தங்கி பணிகளை நேரடியாகக் கண்காணிக்கபட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அப்போதுதான் தரைமட்டத்தில் உண்மையான மாற்றம் தெரியும் என்று கூறினார். மேலும், சிறப்பாகப் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் வெகுமதிகள் வழங்கப்படும் என்றும் பணியாளர்கள் அனைவரும் கட்டாயம் சீருடை அணிய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

டெல்லிகாவல்துறையின் உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், சட்டவிரோத இறைச்சிக் கடைகள் மற்றும் அனுமதியற்ற பால் பண்ணைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் முதல்-மந்திரி ரேகா குப்தாவின் தலைமையின் கீழ் டெல்லியை சுத்தமாகவும் அழகாகவும் மாற்றுவதே தங்கள் இலக்கு என்றும் இதற்காக அதிகாரிகள் அனைவரும் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்' என்று கூறினார்.

# 'வாக்குத் திருட்டு' புகார், மம்தா பானர்ஜியின் குற்றச்சாட்டுகளைப் பிரதிபலிப்பக்கிறது: ராகுல் காந்தி விமர்சனம்

**புதுடெல்லி, மே 8:**

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தனது எக்ஸ் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது: சில நேரங்களில் இடங்களைக் கைப்பற்றவும், சில நேரங்களில் ஒட்டுமொத்த அரசுகளையே கவிழ்க்கவும் வாக்குகள் திருடப்படுகின்றன.

மக்களவையில் உள்ள 240 பாஜக எம்.பி.க்களில், தோராயமாக ஒவ்வொரு 6-வது எம்.பி.யும் (6-ல் ஒருவர்) வாக்குத் திருட்டு மூலமே வெற்றி பெற்றுள்ளார். அவர்களைக் கண்டறிவது கடினமல்ல.

பாஜக பாணியிலேயே அவர்களை 'ஊடுருவல்காரர்கள்' என்று அழைக்கலாமா? ஹரியானாவைப் பொறுத்தவரை, அங்குள்ள ஒட்டுமொத்த அரசாங்கமே ஊடுருவல் காரர்கள்தான்.

அவர்கள் தங்கள் பாக்கெட்டில் வைத்திருக்கும் நிறுவனங்கள், வாக்காளர் பட்டியல்கள் மற்றும் தேர்தல் நடைமுறைகளில் முறைகேடு செய்பவை. அவையே 'ரிமோட் கண்ட்ரோல்' மூலம் இயக்கப்படுகின்றன. உண்மையைக் கண்டுதான் அவர்களுக்குப் பயம். ஏனெனில், நியாயமான முறையில் தேர்தல் நடத்தப்பட்டால், அவர்களால் இன்று 140 இடங்களைக் கூட வெல்ல முடியாது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க பேரவைத் தேர்தலில் பாஜக 100-க்கும் மேற்பட்ட இடங்களை கொள்ளையடித்துவிட்டதாக மம்தா குற்றம்சாட்டி உள்ளார். மேலும், தேர்தல் ஆணையத்தை பாஜகவின் ஆணையம் என்று விமர்சித்த அவர், இந்த வெற்றியை ஒழுக்கமற்றது மற்றும் சட்டவிரோதமானது என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், ராகுல் காந்தியின் 'வாக்குத் திருட்டு' புகார், மம்தா பானர்ஜியின் குற்றச்சாட்டுகளைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தோல்வியைக் கொண்டாடுவதைத் தவிர்க்குமாறு ராகுல் காந்தி தனது கட்சி பிரமுகர்கள் மற்றும் பிற எதிர்க்கட்சித் தலைவர்களை எச்சரித்த மறுநாளே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. தலைவர் சுவேந்து அதிகாரியின் தனி உதவியாளர் சுட்டுக்கொலை


**கொல்கத்தா, மே 8:**

மேற்கு வங்காளத்தில் பா.ஜ.க. தலைவர் சுவேந்து அதிகாரியின் தனி உதவியாளராக செயல்பட்டு வந்த சந்திரா என்பவரை மர்ம நபர்கள் சுட்டு படுகொலை செய்துள்ளனர்.

அவரை மத்தியாகிராம் பகுதியில் வைத்து, மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பி சென்றனர். இதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். எனினும், அதில் பலனின்றி அவர் உயிரிழந்து விட்டார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சமீபத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் பவானிபூர் தொகுதியில் முதல்-மந்திரி மம்தா பானர்ஜி போட்டியிட்டார். அவரை சுவேந்து அதிகாரி வீழ்த்தினார். இதில் சுவேந்துக்கு ஆதரவாக தீவிர பணியாற்றியவர் சந்திரா. இதனால், சுவேந்து அதிகாரி வரலாற்று வெற்றியை பெற்றார். இந்த சூழலில், சந்திரா சுட்டுகொல்லப்பட்டு உள்ளார்.

# புதிய ஆதார் செயலி பதிவிறக்கம் 2 கோடியை தாண்டியது

**புதுடெல்லி, மே 8:**




புதிய ஆதார் செயலி, 3 மாதங்களுக்குள் 2 கோடியே 10 லட்சத்துக்கும் அதிகமான பதிவிறக்கங்களுடன், மக்களிடையே வலுவான வரவேற்பைப் பெற்றுள்ளது. மக்கள் ஆதார் செயலியை பயன்படுத்தி, செல்போன் எண் மற்றும் முகவரி புதுப்பிப்புகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை எப்போது வேண்டுமானாலும், எங்கிருந்தும் இதில் எளிதாக பெற்றுக்கொள்ளலாம். இதுவரை 28 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் புதிய ஆதார் செயலியை பயன்படுத்தி தங்களது செல்போன் எண்களை புதுப்பித்துள்ளனர். அதேபோல், ஏறத்தாழ 6 லட்சம் மக்கள் இந்த செயலியை பயன்படுத்தி தங்களது முகவரியை புதுப்பித்துள்ளனர். இந்த புதிய செயலியில் பல்வேறு வசதிகள் உள்ளன. இது 'ஆண்ட்ராய்டு' மற்றும் 'ஆப்பிள் ஐ.ஓ.எஸ்.' ஆகிய 2 இயங்கு தளங்களிலும் கிடைக்கிறது என்றும், மக்கள் அதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

# ஒரே வீட்டில் 2 மக்கள் பிரதிநிதிகள்: கணவர் எம்.பி., மனைவி எம்.எல்.ஏ.

**திருவனந்தபுரம், மே 8:**

கேரள சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளது. இந்த தேர்தலில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள கோங்காடு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் துளசி என்ற பெண் வேட்பாளர் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தொகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்த மா.கம்யூனிஸ்டு வேட்பாளர் சாந்தகுமாரியை 3,706 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் வீழ்த்தியுள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வலுவான நிலையில் இருந்த தொகுதியில் காங்கிரஸ் வென்றிருப்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதில் என்ன சுவாரசியம் என்றால் துளசியின் கணவர் வி.கே. ஸ்ரீகண்டன் பாலக்காடு தொகுதி எம்.பி.யாக உள்ளார். மனைவி வெற்றி பெற்றதன் மூலம் ஒரே வீட்டில் 2 மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்.

# மேற்கு வங்காளம்: தேர்தலுக்கு பிந்தைய வன்முறையில் 2 பேர் பலி; 433 பேர் கைது

**கொல்கத்தா, மே 8:**



*மேற்கு வங்காளத்தில் சமீபத்தில் 2 கட்டங்களாக நடந்து முடிந்த தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை 4-ந்தேதி நடந்து முடிந்தது. அதன் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தேர்தலுக்கு பின்னர் வன்முறை எதுவும் ஏற்படாமல் தடுக்கும் வகையில், மேற்கு வங்காள தலைமை செயலாளர், டி.ஜி.பி. மற்றும் மத்திய ஆயுத படைகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டு உள்ளது.*

*இந்நிலையில், தேர்தலுக்கு பின்பு நடந்த வன்முறையில் 2 பேர் பலியாகி உள்ளனர். தேர்தலுக்கு பிந்தைய வன்முறை தொடர்பாக மொத்தம் 200 எப்.ஐ.ஆர்.கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. 433 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதேபோன்று, 1,100 பேர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு உள்ளனர் என டி.ஜி.பி. சித் நாத் குப்தா கூறியுள்ளார்.*

*மே 4-ந்தேதிக்கு பின்னரும், தேர்தலுக்கு பிந்தைய வன்முறையை தடுக்கும் நோக்கில், மத்திய ஆயுத படைகளை சேர்ந்த 500 கம்பெனி படையினர் குவிக்கப்பட்டு உள்ளனர். தேர்தல் ஆணையம் அடுத்த உத்தரவு பிறப்பிக்கும் வரை அவர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடுவார்கள்.*

*இந்த நிலையில், மேற்கு வங்காளத்தில் பா.ஜ.க. தலைவர் சுவேந்து அதிகாரியின் தனி உதவியாளராக செயல்பட்டு வந்த சந்திரா என்பவரை மர்ம நபர்கள் சுட்டு படுகொலை செய்துள்ளனர். சமீபத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் பவானிபூர் தொகுதியில் முதல்-மந்திரி மம்தா பானர்ஜி போட்டியிட்டார்.*

*அவரை சுவேந்து அதிகாரி வீழ்த்தினார். இதில் சுவேந்துக்கு ஆதரவாக தீவிர பணியாற்றியவர் சந்திரா. இதனால், சுவேந்து அதிகாரி வரலாற்று வெற்றியை பெற்றார். இந்த சூழலில், சந்திரா சுட்டு கொல்லப்பட்டு உள்ளார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.*

# தொடர் விடுப்பு எடுத்த 51 அரசு மருத்துவ கல்லூரி டாக்டர்கள் பணிநீக்கம்: ஆந்திர அரசாங்கம் அதிரடி

**அமராவதி, மே 8:**

ஆந்திராவில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் உரிய அனுமதியின்றி கல்லூரி டாக்டர்கள் மற்றும் பேராசிரியர்கள் தொடர்ந்து விடுப்பு எடுத்து வருவதாக ஆந்திர அரசாங்கத்துக்கு புகார் அளிக்கப்பட்டது. இதுகுறித்து உரியவிசாரணைமேற்கொள்ள வலியுறுத்தி மருத்துவக் கல்வி இயக்குனரகத்துக்கு அந்த மாநிலத்தின் சுகாதாரத்துறை மந்திரி சத்யகுமார்யாதவ் உத்தரவிட்டார். அதன்பேரில் மாநிலம் முழுவதும் உள்ள அரசுமருத்துவக்கல்லூரிகளில் இருந்து மருத்துவக் கல்வி இயக்குனரக அதிகாரிகள் தகவல்களை சேகரித்து, அனுமதியின்றிபணிக்குவராத மருத்துவர்களின் பட்டியலைத் தயாரித்தனர்.

இதனை தொடர்ந்து மருத்துவக் கல்வி இயக்குனரகத்தின் கீழ் பணியாற்றிய 51 டாக்டர்கள் அனுமதி இல்லாமல் பணிக்கு வராததால் நிரந்தரமாக பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து சுகாதாரத்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது. பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் 8 இணைப் பேராசிரியர்கள், 41 உதவி பேராசிரியர்கள், 2 தொழில்பயிற்சிபயிற்றுனர்கள் அடங்குவர். இதுகுறித்து சுகாதாரத்துறை மந்திரி சத்யகுமார்யாதவ் அளித்த பேட்டியில், "விளக்கக் கடிதங்கள் வழங்கப்பட்டு பதில் அளிக்க போதிய நேரம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட டாக்டர்கள் இடமிருந்து எந்த பதிலும் வராததால் பணிநீக்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டது" என அவர் கூறினார்.

பணி நீக்கம் செய்யப்பட்ட 8 இணைப் பேராசிரியர்களில் ஒருவரான ஆந்திரா மருத்துவ கல்லூரி டாக்டர், கடந்த 2020-ம் ஆண்டு பிப்ரவரி 7-ம் தேதி முதல் பணிக்கு வரவில்லை என்றும், மற்றொருவரான உதவி பேராசிரியர் 2022 ஆகஸ்டு 22-ம் தேதி முதல் பணிக்கு வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிநீக்கம் செய்யப்பட்ட பெரும்பாலான டாக்டர்கள் கடப்பா, அனந்தபூர், ஒங்கோல், திருப்பதி, விஜயவாடா, காக்கிநாடா, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. ஒரு ஆண்டுக்குகுறைவாக பணிக்கு வராமல் இருந்த 11 டாக்டர்கள் மீது குற்றப்பத்திரிகைகள் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் மீண்டும் பணியில் சேர்ந்துள்ளனர். மேலும் 33 டாக்டர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் பணிவிடுப்பு ஒரு ஆண்டை கடந்தால், அவர்களுக்கும் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயணிகள் எண்ணிக்கை குறைந்த நிலையில்... மத்திய பிரதேச மெட்ரோவின் புதிய முயற்சி

**இந்தூர், மே 8:**



மத்திய பிரதேசத்தின் போபால் மற்றும் இந்தூரில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த மெட்ரோ ரெயில்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை எதிர்பார்த்த அளவைவிட குறைவாக உள்ளது. எனவே, பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மக்களிடையே மெட்ரோ ரெயில் பயணம் குறித்த ஆர்வத்தை தூண்டும் வகையிலும் மெட்ரோ ரெயில் நிர்வாகம் புதிய முன்முயற்சியை மேற்கொண்டுள்ளது.

'சக்கரங்களில் கொண்டாட்டங்கள்' எனும் இந்த முயற்சியின் கீழ், மெட்ரோ ரெயில் பெட்டிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரெயில் நிலைய வளாகத்தில் கட்டண அடிப்படையில் பொது நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு ஆக்கப்பூர்வமான மற்றும் சமூக நிகழ்ச்சிகள் நடத்த அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

"இந்தூர் மற்றும் போபாலின் துடிப்பான கலாச்சாரம், வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புற சூழல் மற்றும் குடிமக்களின் மாறிவரும் வாழ்க்கை முறைகளை கருத்தில் கொண்டு இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது," என்று மெட்ரோ நிர்வாக இயக்குனர் எஸ். கிருஷ்ணா சைதன்யா கூறினார்.

மெட்ரோ ரெயில்கள் மற்றும் ரெயில் நிலைய வளாகங்களில் திரைப்பட படப்பிடிப்புகள், இணைய தொடர்கள், ஆவணப்படங்கள், விளம்பர தயாரிப்புகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், திருமணத்திற்கு முந்தைய புகைப்பட பதிவுகள், ஒளிப்பதிவு மற்றும் பிற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரெயில் நிலையத்தில் நிற்கும் ஒரு மெட்ரோ பெட்டிக்கு மணிக்கு ரூ. 5,000 கட்டணமும், இயங்கிக்கொண்டிருக்கும் ரெயில்களில் ஒரு பெட்டிக்கு மணிக்கு ரூ. 7,000 கட்டணமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர். பிறந்தநாள் கொண்டாட்டங்கள், திருமணத்திற்கு முந்தைய புகைப்படப் பதிவுகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அதிகபட்சமாக 50 நபர்கள் வரை அனுமதிக்கப்படுவர் என்றும், கூடுதல் நபர்களுக்கான கட்டணங்கள் மாறுபடும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்."

பொதுமக்கள் தாங்கள் நடத்தவிருக்கும் நிகழ்ச்சிகளுக்காக, ஒவ்வொரு மெட்ரோ பெட்டிக்கும் ரூ. 20,000 பிணை தொகையாக செலுத்த வேண்டும்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு, மெட்ரோவின் விதிமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டிருந்தால், அந்தத் தொகை மீண்டும் திரும்ப தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொதுமக்கள் தங்கள் வாழ்வின் சிறப்பு நிகழ்வுகளை மெட்ரோவின் பாதுகாப்பான மற்றும் நவீன சூழலில் கொண்டாடி மகிழ முடியும்.

## அமெரிக்கா பொய் சொல்கிறது : கியூபா கடும் கண்டனம்

**கியூபா, மே 8:**

கியூபா நாட்டின் மீது எண்ணெய் முற்றுகை எதுவும் விதிக்கப்படவில்லை என்று அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலாளர் மார்கோ ரூபியோ கூறிய கருத்தை கியூபா கடுமையாகக் கண்டித்துள்ளது. டிரம்ப் ஜனவரி 29 அன்று கியூபாவுடன் எண்ணெய் வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது கூடுதல் வரி விதிக்கப்படும் என்று நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார். கடந்த நான்கு மாதங்களில் ஒரே ஒரு எரிபொருள் கப்பல் மட்டுமே கியூபாவிற்கு வந்துள்ளது. எங்களுக்கு எண்ணெய் விற்பனை செய்யும் நாடுகள் அனைத்தும் மிரட்டப்படுகின்றன. இது சுதந்திர வர்த்தக விதி களுக்கு எதிரானது," என்று கியூபா கண்டித்துள்ளது.

## ஹோர்முஸ் நீரிணை விவகாரம்: பின்வாங்கும் டிரம்ப்

ஹோர்முஸ் நீரிணை விவகாரத்தில் டிரம்ப் பின்வாங்கியுள்ளார். ஈரானுடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு அவகாசம் அளிக்கும் வகையில், ஹோர்முஸ் நீரிணையில் கப்பல்களுக்கு பாதுகப்பு தரும் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக அவர் கூறியுள்ளார். எனினும் ஈரான் துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படைகளின் முற்றுகை தொடர்ந்து நீடிக்கும். பாகிஸ்தான் மற்றும் இதர நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும், ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையில் கிடைத்துள்ள மாபெரும் வெற்றியைத் தொடர்ந்தும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## தென்சீனக் கடலில் ஜப்பான் போர்ப் பயிற்சி



தென்சீனக் கடல் பகுதியை ஒட்டிய கடல் பகுதியில் புதன்கிழமை அன்று பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்து கூட்டு கடற்படை பயிற்சி நடத்தியுள்ளன. தோ ளோடு தோள் என்ற பொருளில் இந்த ஆண்டுக்கான போர்ப் பயிற்சியில், முதன்முறையாக ஜப்பான், கனடா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், நியூசிலாந்து ஆகிய நாடுகள் நேரடிப் பங்கேற்பாளர்களாகக் கலந்து கொண்டுள்ளன. இந்தப் பயிற்சி யில் 10,000 அமெரிக்க வீரர்கள், 1,400 ஜப்பானிய வீரர்கள் உட்பட மொத்தம் 17,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

## சமூக ஆர்வலர்களை விடுதலை செய்க : இஸ்ரேலுக்கு ஐநா வலியுறுத்தல்

சர்வதேச கடல் பகுதியில் இஸ்ரேல் ராணுவத்தால் கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள சைஃப் அபு கெஷெக், தியாகோ டி அவிலா ஆகிய இருவரையும் இஸ்ரேல் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று ஐநா மனித உரிமைகள் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது. அவர்கள் மீது எந்தவிதக் குற்றச்சாட்டுக ளும் பதிவு செய்யப்படாமல் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர். காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும், மனிதாபிமான உதவிகளை வழங்க முயற்சிப்பதும் ஒரு குற்றச்செயல் அல்ல என்று ஐ.நா செய்தித் தொடர்பாளர் தமீன் அல்-கிடன் தெரிவித்துள்ளார்.

## செயற்கை நுண்ணறிவை வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும்: சீனா

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை உலக நன்மைகளுக்காகவும், மனிதகுலத்தின் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்த வேண்டும் என்று ஐ.நா அவைக்கான சீனாவின் துணை நிரந்தரப் பிரதிநிதி சுன் லீ வலியுறுத்தியுள்ளார். இத்தொழில்நுட்பம் புதிய தொழில்புரட்சியின் உந்துசக்தியாக உள்ளது. இது தொழில்துறைகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மக்களின் அன்றாட வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்தி பொருளாதார வளர்ச்சியின் புதிய எஞ்சினாகத் திகழ்கிறது. செயற்கை நுண்ணறிவு எப்போதும் மனிதகுலத்திற்குச் சேவை செய்ய வேண்டும் மற்றும் மனிதர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஈரானில் வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உயிரிழப்பு

**தெஹ்ரான், மே 8:**

ஈரான் தலைநகர் தெஹ்ரான் மாகாணத்துக்கு உட்பட்ட அந்திஷே நகரில் 'அர்காவன்' என்ற பல அடுக்குமாடி வணிக வளாகம் உள்ளது. இங்கு நூற்றுக்கணக்கான கடைகள் மற்றும் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்த வளாகத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்த நேரத்தில், திடீரென ஒரு பகுதியில் தீப்பிடித்தது. அடுத்த சில நிமிடங்களில் தீ வேகமாக மற்ற பகுதிகளுக்கும் பரவியது. இதனால் வணிக வளாகம் முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. கடைகளுக்கு வந்திருந்த



பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் அலறியடித்தபடி வெளியே ஓடினர். பின்னர் புகையினால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் மற்றும் தீயின் கோரப்பிடியில் சிக்கி 11 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பலியானார்கள். தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடித் தீயைக்கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த விபத்தில் படுகாயமடைந்த 41 பேர் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப் பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து ஈரான் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது பாதுகாப்பு விதிமுறைகள் மீறப்பட்டதா? என்ற பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது. தற்போது அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே கடந்த 3 வாரங்களாக போர் நிறுத்த ஒப்பந்தம் அமலில் உள்ளது. எனவே, இந்த தீ விபத்துக்கும், போர் பதற்றத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## அமெரிக்காவில் 7 வயது சிறுமியை கொன்றவருக்கு மரண தண்டனை

**வாஷிங்டன், மே 8:**

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள பாரடைஸ் நகரில் கடந்த 2022-ம் ஆண்டு ஏதெனா ஸ்டிரான்ட் என்ற 7 வயது சிறுமி மாயமானார்.

இது குறித்து போலீசார் நடத்திய விசாரணையில், சிறுமியின் வீட்டுக்கு பார்சல் வழங்க வந்த பெட்எக்ஸ் நிறுவன டிரைவர் டானர் ஹார்னர் (34) என்பவர் சிறுமியைக் கடத்திச் சென்றது தெரியவந்தது. தேடுதல் வேட்டையில் 2 நாட்களுக்கு பின் சிறுமி சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணையில், வாகனத்தில் இருந்த சி.சி.டி.வி. மற்றும் ஆடியோ ஆதாரங்கள் ஹார்னருக்கு எதிராகக் கண்டறியப்பட்டன. இதையடுத்து அவர் தனது குற்றத்தை கோர்ட்டில் ஒப்புக்கொண்டார். சிறுமியைத் தாக்கி, கழுத்தை நெரித்துக் கொன்றதாக ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த வழக்கை விசாரித்த போர்ட் வொர்த் கோர்ட்டு நீதிபதிகள்.

இவர் சமூகத்திற்குத் தொடர்ந்து அச்சுறுத்தலாக இருப்பார் எனக் கருதி டானர் ஹார்னருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தனர். குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்க வேண்டும் என்ற வழக்கறிஞரின் வாதத்தை கோர்ட்டு நிராகரித்தது.

## ஈரானுடன் விரைவில் உடன்பாடு ஏற்படுவது மிகவும் சாத்தியம்: டிரம்ப் கருத்து

**வாஷிங்டன், மே 8:**

ஈரான் மீது இஸ்ரேலுடன் இணைந்து கடந்த பிப்ரவரி மாத இறுதியில் அமெரிக்கா போர் தாக்குதலை தொடங்கிய ஈரான் ராணுவம், வளைகுடா பகுதியில் உள்ள அண்டை நாடுகளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஓமன், கத்தார் உள்ளிட்ட நாடுகளில் உள்ள விமான நிலையங்கள் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியது.

சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த கடுமையான போர் தாக்குதல் காரணமாக உலகளவில் கடும் எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதற்கிடையே போரை நிறுத்த ஈரான் உடனான அமெரிக்காவின்பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனை தொடர்ந்து உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக போரை காலவரையின்றி நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்தார்.

வாஷிங்டனில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் ஈரான் உடனான போரை 3 வாரத்துக்குள் முழுவதுமாக முடிக்க உள்ளதாக டிரம்ப் பேட்டியளித்தார். இதனிடையே அமெரிக்க உள்துறை மந்திரி மார்க் ரூபியோ, ஈரானில் வேண்டிய இலக்குகளை அடைந்துவிட்டோம் எனவும் போர் நிரந்தரமாக முடிக்கப்படும் என தெரிவித்தார். இதற்கிடைய டிரம்ப் 2 நாள் பயணமாக சீனாவுக்கு செல்ல இருக்கிறார். வருகிற 14 மற்றும் 15-ந்தேதி பீஜிங்கில் வைத்து அந்த நாட்டின் அதிபர் ஜின் பிங்கை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். இந்தநிலையில், போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா முன்வைத்த புதிய திட்டத்தை தீவிரமாக பரிசீலித்து வருவதாக ஈரான் தெரிவித்துள்ளது. ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே மோதல்களை முடிவுக்கு கொண்டுவர புதிய அமைதி ஒப்பந்தம் பரிசீலனை செய்து வருவதாகவும் கடந்த 24 மணிநேரத்தில் பேச்சுவார்த்தை முன்னேற்றம் அடைந்துள்ளதாக ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார். விரைவில் உடன்பாடு ஏற்படுவது மிகவும் சாத்தியம் என்று நம்புவதாக டிரம்ப் கருத்து தெரிவித்துள்ளார். பொருளாதாரத் தடைகளை நீக்கவும், அணுசக்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதாக கூறப்படுகிறது. முதற்கட்டமாக ஒரு பக்க அளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் எட்டுவதில் இருதரப்பும் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## ஹோர்முஸ் நீரிணையைத் திறக்காவிட்டால்..!: ஈரானுக்கு டிரம்ப் மீண்டும் எச்சரிக்கை!

**வாஷிங்டன், மே 8:**

ஹோர்முஸ் நீரிணை திறக்கப்படவில்லை என்றால் ஈரான் மீது அதிகப்படியான தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் தலைமையில் நடைபெற்ற அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, ஈரானின் துறைமுகங்கள் மற்றும் ஹோர்முஸ் நீரிணையை அமெரிக்க படைகள் முற்றுகையிட்டு வந்தன.

இதனைத் தொடர்ந்து, அமைதி ஒப்பந்தத்தை ஈரான் ஏற்றுக்கொண்டால் இந்தப் போர் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனவும், எரிபொருள் விநியோகம் மீண்டும் தொடங்கும் எனவும் அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்கா முன்மொழியும் ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்றால் மீண்டும் ஈரான் மீதான தாக்குதல் தொடரும் எனக் கூறி அமெரிக்க அதிபர் டிரம்ப் இன்று (மே 7) தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, ஈரானின் அணுசக்தித் திட்டத்துக்கு எதிராக அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படைகள் இணைந்து கடந்த பிப். 28 அன்று நடத்திய தாக்குதலில் ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு அச்சுறுத்தல்: பாகிஸ்தானில் அமெரிக்க தூதரகம் மூடல்

**வாஷிங்டன், மே 8:**

வடமேற்கு பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா மாகாணத் தலைநகர் பெஷாவரில் உள்ள தனது துணைத் தூதரகத்தைப் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் படிப்படியாக மூடப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சரியான வள மேலாண்மைக்கும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விடுத்துள்ள அறிக்கையில், 'அமெரிக்க ஊழியர்களின் பாதுகாப்பே எங்களுக்கு மிக முக்கியம்.

பெஷாவர் துணைத் தூதரகம் மூடப்பட்டாலும், கைபர் பக்துன்கவா மாகாண மக்களுடனான பொருளாதார, பாதுகாப்பு ரீதியான உறவுகள் தொடர்ந்து நீடிக்கும். கைபர் பக்துன்கவா மாகாணத்துக்கான ராஜீய உறவுகள் இனி இஸ்லாமாபாதில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் மேற்கொள்ளப்படும்.

பாகிஸ்தானுடனான அமெரிக்காவின் கொள்கை முன்னுரிமைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. இஸ்லாமாபாத், கராச்சி, லாகூர் ஆகிய இடங்களில் உள்ள மற்ற தூதரகங்கள் வழியாக அமெரிக்கா-பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்ந்து வலுப்படுத்தப்படும்' என்று கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து ஊடுருவும் பயங்கரவாதிகள், இந்த எல்லை மாகாணத்தில் அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இதற்குப் பதிலடியாக பாகிஸ்தான் நடத்திய தாக்குதல்கள் இருநாட்டு மோதலாக வெடித்தது. எனினும், தொடரும் பயங்கரவாதத் தாக்குதல்களால் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கருதி தூதரகத்தை மூடுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

## தென்கொரியாவுடன் இணையும் எண்ணமில்லை: அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திய வடகொரியா



தென்கொரியாவுடன் இனி எக்காலத்திலும் இணையப் போவதில்லை என்ற கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில், வடகொரியா தனது அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

கொரிய தீபகற்பத்தின் அங்கமான இவ்விரு நாடுகளும் தனித்தனி இறையாண்மை கொண்ட தேசங்கள் என்றும், தென்கொரியா தனது நாட்டின் 'முதன்மை எதிரி' என்றும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அறிவித்திருந்த நிலையில், தற்போது அது சட்டபூர்வமாக அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வடகொரிய நாடாளுமன்றமும் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. திருத்தப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின்படி, வடகொரியாவின் நிலப்பரப்பு என்பது வடக்கே சீனா மற்றும் ரஷியாவையும், தெற்கே தென்கொரியாவையும் எல்லையாகக் கொண்டது என வரையறுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக, கொரிய தீபகற்பம் முழுவதும் ஒரே தேசமாகக் கருதப்பட்டு வந்த நிலையில், முதல்முறையாக தனது தெற்கு எல்லையை வடகொரியா தனித்து அடையாளப்படுத்தியுள்ளது. இருப்பினும் கடல்சார் எல்லைகளில் நிலவும் சிக்கல்கள் காரணமாக, ஜப்பான்-கொரிய தீபகற்பம் இடையிலான மஞ்சள் கடல் பகுதியில் உள்ள சர்ச்சைக்குரிய எல்லைக்கோடுகள் குறித்து இதில் தெளிவான விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை. இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் கிம் ஜோங் உன்னின் அதிகாரமும் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இனி அவரின் பதவி 'நாட்டின் தலைவர்' (ஹெட் ஆஃப் ஸ்டேட்) என மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம், சர்வதேச அளவில் வட கொரியாவின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக அவர் அங்கீகரிக்கப்படுகிறார்.

பாதுகாப்பு தொடர்பான பிரிவில், வட கொரியா ஒரு 'பொறுப்புள்ள அணு ஆயுத நாடு' என்று விவரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மக்களையும், வளர்ச்சி உரிமைகளையும் பாதுகாக்கவும், போரைத் தடுத்து பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதியை நிலைநாட்டவும் அணு ஆயுத மேம்பாடு தொடரும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் ஒட்டுமொத்த அணு ஆயுதப் படைகளையும் வழிநடத்தும் அதிகாரம் கிம் ஜோங் உன் வசம் மட்டுமே இருக்கும் என்பதும் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா கப்பலில் பரவும் ஹண்டா வைரஸ் பீதி... 3 பேர் அவசரமாக மருத்துவமனைக்கு மாற்றம்

**வாஷிங்டன், மே 8:**

உலகில் கொரோனா வைரஸ் தாக்கம் இன்னும் முழுமையாக குறையாத நிலையில், தற்போது ஹண்டா வைரஸ் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இது எலிகள் மூலம் பரவக்கூடிய மோசமான தொற்று ஆகும்

இந்தநிலையில் தென் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவில் உள்ள உசுஆயியாவில் இருந்து ஆப்ரிக்காவில் கேப் வெர்டே நோக்கி எம்.வி. ஹோண்டியஷ் என்ற உல்லாச கப்பல் செல்கிறது. தற்போது அட்லாண்டிக் கடலின் கேப்வெர்டே பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஸ்பெயின்



உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த 150 பயணியர் உள்ளனர். இந்த கப்பலில் பயணியருக்கு ஹண்டா வைரஸ் நோய் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், உலக சுகாதார மையம் வெளியிட்ட அறிக்கையில்,

சொகுசு சுற்றுலா கப்பலான "எம்.வி. ஹோண்டியஷ் " கப்பலில் பயணம் செய்த மூன்று பேருக்கு "ஹண்டா " தொற்று பாதிப்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், அவர்கள் அவசர சிகிச்சைக்காக நெதர்லாந்து அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 5 பேருக்கு நோய் பாதிப்பு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த கப்பலில் பயணித்த நெதர்லாந்தைச் சேர்ந்த ஒருவர் வைரஸ் தாக்கி, ஏப். 11ல் உயிரிழந்தார்.

அவரது உடல் ஏப்.,24 வரை கப்பலில் வைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து அவரது மனைவி அடுத்த மூன்று நாட்களில் நோய் பாதிப்பால் உயிரிழந்தார். தொடர்ந்து இங்கிலாந்தை சேர்ந்த நபரும் இந்த நோய்க்கு பலியானார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நோயால் பாதிக்கப்படுபவர்களில் 40 சதவீதம் போ் உயிரிழக்க வாய்ப்புள்ளதாக மருத்துவ வல்லுநா்கள் எச்சரிக்கின்றனா்.

# தனிப்பெரும்பான்மை பலம் இல்லாமல் ஆட்சியமைக்க முடியாது: ஆளுநர் மாளிகை



# கவர்னர் அர்லேகரை சந்தித்த தலைமை செயலாளர், டி.ஜி.பி.

# பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவு இன்று வெளியீடு!

# தமிழகத்தில் 19 மாவட்டங்களுக்கு இன்று கனமழைக்கு வாய்ப்பு

# புதிய ஆதார் செயலி பதிவிறக்கம் 2 கோடியை தாண்டியது


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 08.05.2026 வெள்ளிக்கிழமை இலவச இ-பேப்பர்